திருக்கோயில்

ஜனவரி 1978 ரூ. 1-25

சென்னை, கே. கே. நகர், அருள்மிகு சக்தி விநாயகர் கோயிலின் மகா மண்டபத் திறப்பு விழாவில், தமிழக ஆளுநர் மேதகு ஸ்ரீ பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், ஆணையர் திரு எம். கே. பால சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., அவர்களும், முன்னாள் நீதிபதி திரு என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும் கலந்து கொள்ளுதல்.

திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குக் கேரள ஆளுநர் மேதகு திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கள் வருகை தருதல்.

முகப்பு:
திருத்தணிகை அருள்மிகு முருகப்பெருமான் (உற்சவமூர்த்தி), வள்ளிதெய்வயானை அம்மையாருடன்.

திருக்கோயில்

மாலை : 20 பிங்கள ஆண்டு—தைத் திங்கள் ஜனவரி—1978 மணி : 4

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

''திருக்கோயில்'' திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள் :

''ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034''

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15/- உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1-25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் சந்தாதாரர் ஆகலாம்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவுசெய்து வரிசைப்படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9.60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20/-ல் இருந்து ரூ. 25/- ஆக ஜனவரி 78 முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

தொடக்கவிழாச் சிறப்புரை
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,

மனக்கவலை மாற்றும் வழி
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ, எம்.ஓ.எல்.

எது வீரம்?
—திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள்

கந்தபுராணக் காப்பியநலம்
—திரு. க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ., எம்.லிட்.

பச்சையப்ப வள்ளலின் அறப்பணிகள்
—திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ.

இராமாநுச நூற்றந்தாதி
—ஆசிரியர்

திருக்கோயில்களில் இசைத்தூண்கள்
—கவிஞர் திரு. மனசை ப. கீரன், பி.ஏ., பி.டி.

இந்தியப் பெருந் தத்துவ ஞானிகள்
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

தமிழகத்துச் செப்புப் பட்டயங்கள்
—திரு. நடன. காசிநாதன், எம்.ஏ.,

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்
—மகாவித்வான் பண்டிதநடேசனார், பி.ஏ., ஜே.பி.

திருச்சிற்றம்பலக் கோவையார்
—ஆசிரியர்

தணிகைப் புராணக் கவிதைநலம்
—ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ. எல்.

செங்கற்பட்டு மாவட்டக் கோயில்கள்
—ஆசிரியர்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

தொடக்க விழாச் சிறப்புரை

திரு. எம். கே பாலசுப்பிரமணியம்,
ஐ. ஏ. எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை,
சென்னை-34.

முன்னுரை :

உலகத் தாவர உணவாளர் பேரவை-இந்தியக் கிளையின் சார்பில், அதன் 24-ஆம் மாநாடு நம் தமிழகத்தின் தலைநகரமாகிய சென்னை மாநகரில், 2-12-77 முதல் 5-12-77 முடிய, மிகவும் சிறப்புற நடைபெறுவது, நமக்கெல்லாம் மிக்க மகிழ்ச்சியைத் தரும் நிகழ்ச்சியாகும்.

நமது இந்தியக் குடியரசின் துணைத்தலைவர் மாட்சிமிகு திரு. பி. டி. ஜட்டி அவர்கள், இம் மாநாட்டிற்கு 2-12-77 அன்று, இதற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்கள். இதற்கு நமது தமிழக ஆளுநர் மேதகு திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்திருக்கின்றார்கள். நமது சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள், இம் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து பணியாற்றுகின்றார்கள்.

இதன்கண் மாநில,மத்திய அமைச்சர்களும், புகழ்மிக்க பல பேரறிஞர்களும், சமயத் தலைவர்களும், பொருளாதார நிபுணர்களும், பிறரும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்கள்.

நீதி ஒழுக்கநெறிப் பகுதி :

இத்தகைய சிறப்புமிக்க, இந்தத் தாவர உணவாளர் பேரவையின் மாநாட்டில், "நீதி ஒழுக்க நெறிப் பகுதி"யைச் சார்ந்த இக் கூட்டத்தினைத் (Ethical Session) தொடங்கி வைக்கும் பேற்றினை, வரவேற்புக் குழுவினர் மிக்க அன்புடன் எனக்கு வழங்கியிருக்கின்றனர்.

அவர்களுக்கும், இங்குக் கூடியுள்ள உங்கள் அனைவருக்கும், என் மனம் நிறைந்த அன்பையும், பணிவார்ந்த வணக்கத்தினையும், முதற்கண் தெரிவித்துக்கொண்டு, இந்த நீதி ஒழுக்க நெறிப் பகுதிக் கூட்டத்தினைத் தொடங்கி வைக்க முற்படுகின்றேன்.

உணவும், வகையும் :

மனித வாழ்க்கையில் உணவு முதலிடம் பெறுகின்றது. உணவு இல்லையேல் மனிதனும், பிற உயிரினங்களும் உயிர் வாழ்தல் இயலாது. "உண்டி முதற்றே உணவின் பிண்டம்". "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்னும் சங்ககாலப் பாடல் வரிகள், உயிர் வாழ்க்கைக்கு உணவின் இன்றியமையாமையைப் பெரிதும் வற்புறுத்துகின்றன. மனித வாழ்க்கையின் அடிப்படை முதல் தேவையாக இருந்து வருவது, உணவேயாகும்.

இத்தகைய முதன்மையும், இன்றியமையாமையும் வாய்ந்த உணவை உட்கொள்வதில், தொன்றுதொட்டே மனிதர்கள் இரு வகையினராக இருந்து வருகின்றனர். ஒருவகையினர், பிற சிற்றுயிர்களைக் கொன்று தின்னும் புலால் உணவினர். மற்றொரு சிலர், பிற உயிர்களுக்கு ஊறு செய்யாமல், எளிதாகவும் இயற்கையாகவும் கிடைக்கின்ற, செடி, கொடி மரங்களாகிய விளைபொருள்களை உட்கொள்ளுகின்ற தாவர உணவு வகையினராவர். புலால் உணவு, தாவர உணவு என்னும் இருவகை உணவுகளிலும் தாவர உணவே, நமது உடல்நலம் (Health) உள்ள மகிழ்ச்சி (Happiness) ஆகியவற்றிற்கு இனியதும் சிறந்ததுமாக எல்லாவகைகளிலும் விளங்குகின்றது. அது பற்றி இங்குச் சுருக்கமாகச் சிலவற்றை மட்டும் சிந்திப்போம்!

தாவர உணவே சிறந்தது :

(1) இறைவன் அன்பே வடிவமாக விளங்குகின்றான். (God is Love). பிற உயிர்கள் துன்பமுறும்படி கொலைசெய்து, நாம் அவற்றின் புலாலை உண்பது, இறைவனின் திருவுள்ளத்திற்கு முற்றிலும் மாறுபட்டது.

(2) இறைவனே எல்லா உயிர்களுக்கும் தாயும் தந்தையுமாக விளங்குகின்றான். நாம் பிற உயிர்களைக் கொல்வதன் மூலம், அவனது குழந்தைகளைக் கொன்றவர்களாய், அவனது சீற்றத்திற்கு ஆளாகின்றோம்.

(3) பிற உயிர்களின் துன்பத்தை, நமக்குற்ற துன்பம்போல் கருதி, நாம் பிற உயிர்களுக்குத் துன்பமும் தீங்கும் செய்யாமையே அறிவுடைமையாகும். ''அறிவினுல் ஆகுவதுண்டோ? பிறிதின்நோய் தன்நோய்போல் போற்ருக்கடை'' என்று திருவள்ளுவரும் இதனை வலியுறுத்துகின்ருர். ஆதலின் பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவித்துப் பெறும் புலால் உணவை மறுத்து, தாவர உணவு உட்கொள்ளுதலே, நமக்கு அறிவுடைமையாகும்.

(4) புலால் உணவானது, பெரும்பாலும் அசுத்தமும் நாற்றமும் அருவருப்பும் உடையதாகவே இருக்கின்றது. ஆதலின் அவைகள் சிறிதும் இல்லாத தாவர உணவே சாலச் சிறந்ததாகும்.

(5) 'உணவு' 'உணர்வு' என்னும் இரு சொற்களும் தம்முள் மிக்க தொடர்புடையன. நாம் உண்ணும் உணவுக்கு ஏற்பவே, நமக்கு உணர்வு அமைகின்றது. தாமசம் இராஜசம் சத்துவம் என்று, உணவானது மூன்று வகைப்படும். தாமச இராஜச உணவுகள், சோம்பல் தூக்கம் காமம் வெகுளி மயக்கம் வன்கண்மை செருக்கு முதலிய இழிந்த தீய கொடிய குணங்களையும், உணர்வுகளையுமே உண்டாக்கும். அங்ஙனமின்றி, அன்பு அமைதி அறிவு பண்பு ஒழுக்கம் அடக்கம் முதலிய சிறந்த குணங்களையும், உயர்ந்த உணர்வுகளையும் நம்மிடம் உண்டாக்குபவை சத்துவ குண உணவுகள் ஆகும்.

''எதனை நாம் உட்கொள்ளுகின்ருேமோ, அதன் மயமாக நாம் ஆகின்ருேம்'' (What we take in, that we become). தூயநீர் அல்லது பால் பருகுங்காலும், கள் சாராயம் முதலியவற்றைக் குடிக்குங்காலும், முறையே நமக்கு ஏற்படும் மாறுதல்களை, நாம் நன்கு அறிகின்ருேம். பருகுவது பாலேயாயினும், பசும்பால் விளைவிக்கும் நலனையும், எருமைப்பால் விளைவிக்கும் தீங்கையும், நாம் அனுபவத்தில் காண்கின்ருேம்.

ஆதலின் உட்கொள்ளும் உணவின் இயல்பிற்கேற்பவே, நம் உணர்வும் குணமும் அமைகின்றன என்பது வெளிப்படை. புலால் உணவு தாமச குண வகையைச் சேர்ந்ததாதலின், அது காமம் கோபம் வன்கண்மை முதலிய கீழ்த்தர குணங்களையே உண்டாக்கும். எனவே அதனை விடுத்தொழித்து, சத்துவ குணத்தை விளைவிக்கும் தாவர வகை உணவினை மட்டும் உட்கொள்ளுவதே, நமக்கு நலம் பயப்பதாகும்.

(6) நம்முடைய மனித உடலில் உள்ள உறுப்புக்களின் கூறுகள் ஆகிய பற்கள், குடல் உறுப்புக்கள், முதலியவற்றின் அமைப்பு, இயற்கையில் தாவர உணவை உண்ணும் வகையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன.

(7) மந்த புத்தியும், குரூர குணமும் உள்ள பிராணிகளின் மாமிசத்தை உண்டால், நமக்கும் அந்த மந்தபுத்தியும், குரூர குணமும், கொடிய இயல்புகளுமே அமைந்து விடுகின்றன.

(8) புலால் உண்ணுதல் உடலுக்கு வலிமைதரும் என்று, சிலர் தவருக எண்ணுகின்ருர்கள். புலால் உண்ணுகின்ற புலி சிங்கம் முதலிய விலங்குகளைவிட, யானை குதிரை எருது ஒட்டகம் முதலிய விலங்குகள் மிகுந்த வலிமையுடையனவாய், நமக்குப் பலவகைகளிலும் பயன்படுகின்றன. இவைகள் செய்யும் கடினமான வேலைகளைப் புலி சிங்கம் கரடி முதலிய பிராணிகளால் செய்ய முடிவதில்லை.

(9) மேலும் புலால் உண்ணும் விலங்குகள் மிகவும் கொடியனவாகவும், வெறுக்கத் தக்கனவாகவும் உள்ளன; ஆனுல் தாவர உணவு கொள்ளும் மிருகங்களோ, மிகவும் நல்லனவாகவும் விரும்பத்தக்கனவாகவும், நமக்குப் பயன்படுவனவாகவும் விளங்குகின்றன.

(10) தாவர உணவு உண்பவர்கள் நல்ல வலிமையும், நோயற்ற வாழ்வும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். மற்போர் வீரர்கள் பலர் தாவர உணவை உட்கொண்டு மிக்க வலிவும் திறமையும் உடையவர்களாக விளங்குகின்றனர்.

(11) தியானம் தவம் முதலிய தூய நல்ல சிறந்த வழிகளில் ஐம்பொறிகளையும் மனத்தையும் அடக்கவும், தேகம் வலிவும் பொலிவும் வாய்ந்து நோயின்றித் திகழவும், தாவர உணவே பெரிதும் துணை புரிகின்றது.

(12) ஆடு மாடு பன்றி கோழி முதலியவற்றின் மாமிசங்களிலெல்லாம், யூரிக் ஆசிட் (Uric Acid) என்னும் ஒருவகைக் கொடிய நஞ்சு கலந்திருக்கின்றது. புலால் உண்ணுபவர்களின் உடம்பில் அக்கொடிய நஞ்சானது ஊறிப் பரவி, மிகவும் கொடிய நோய்களை உண்டாக்கி, அவர்களை விரைவில் மடிந்தொழியச் செய்கின்றது. இதனை மேலைநாட்டு விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் பலரும், தத்தம் நூல்களில் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

"All animal flesh is saturated with Uric Acid. Almost all the physical troubles and ailments now existing might be traced to the root cause of blood-poison called otherwise Uric Acid. It is this poison that produces multifarious kinds of diseases by being carried into the vital fluid of the human frame through flesh foods. To avoid blood poison, we must totally avoid meat food which is penetrated with Uric Acid poison.

Those who take to animal diet import into their blood this poison of a very pernicious kind which not only undermines their own health but also tends to deteriorate both the mind and body of their progeny.

All animal carcasses being charged with extremely poisonous substances, it is from their exudations that infectious diseases of a terrible kind take their rise, spread rapidly everywhere and carry away millions of lives every year and every season, all over the world."

—ALEXANDER HAIG, M.A., M.D.

கீழ்க்காணும் ஆறு வகையான தாவர உணவுகளே, நமக்கு நல்ல உடல்நலனையும் அறிவாற்றல் வளங்களையும் தருவதற்குப் போதியனவாகும்.

1. பால் தயிர் மோர் நெய்.

2. அரிசி கேழ்வரகு கோதுமை சோளம் கம்பு தினை.

3. கடலை மொச்சை அவரை வாதுமை பிஸ்தா முதலிய விதைகள்.

4. தோட்டத்தில் விளையும் பலப்பல மூலிகைகள், கீரை வகைகள், உருளை கருணை முதலிய கிழங்கு வகைகள்.

5. வாழை மா பலா ஆரஞ்சு சாத்துக்குடி திராட்சை ஆப்பிள் முதலிய பல பழவகைகள்.

6. உலர்த்திப் பதன் செய்த திராட்சை, பேரீச்சை, சீமைஅத்தி முதலிய பழங்கள்.

இந்த ஆறுவகையான பொருள்களும், நாம் நம் வாழ்க்கையில் உடல் நலத்துடனும், உள மகிழ்ச்சியுடனும், நோயின்றி நெடுங்காலம் வாழ்வதற்குப் (Health and Happiness) பெரிதும் துணை புரியும் என்று, விஞ்ஞானிகளும் மருத்துவப் பேரறிஞர்களும் ஆராய்ந்து கூறுகின்றனர்.

"The following six classes of vegetarian food stuffs are sufficient to build up all the constituents of a sound and vigorous human body. They are : Milk and its products, 2. Bread, cereal foods and gluten, 3. Nuts and nut-foods, 4. Garden vegetables such as potato, cabbage, Cauli-flower, 5. Garden fruits like bananas, oranges, grapes, apples, 6. Dried fruits and salads. These vegetarian food-stuffs are very nutritious and highly beneficial to our health and happiness"

—ALEXANDER HAIG, M.A., M.D.

(13) இவ்வாறு மேலை நாட்டு அறிவியல் அறிஞர்கள் மட்டுமேயன்றி, அருளாளர்களாகிய உலகப் பெரும் சமயச் சான்றோர்கள் பலரும்கூட, புலால் உணவை மறுத்தும் வெறுத்தும் ஒதுக்குமாறு, நமக்கு அறிவுறுத்துகின்றனர்.

''உயிர்க் கொலைக்கு உலகமெல்லாம் நடுங்குகின்றது. மக்களெல்லோரும் கொலைகாரனைக் கண்டு நடுங்குகின்றனர். உன்னிடத்தில் பிற உயிர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று நீ விரும்புகின்றனையோ அங்ஙனமே நீயும் அவற்றின்பால் அன்புடன் நடந்து கொள்க. எந்த உயிர்க்கும் துன்பம் செய்யாதே, எதனையும் கொல்லாதே''

என்று புத்தர் பெருமான், ஆங்காங்கே தாம் அருளிய திரிபிடகம் என்னும் நூலில் பெரிதும் வற்புறுத்துகின்றார்.

(14) இவ்வாறே புத்தர்பெருமானின் காலத்திற்குச் சிறிது முன்பு வாழ்ந்திருந்த மகாவீர வர்த்தமானரும், பிற உயிர்களைக் கொல்லாமை, பிற உயிர்களின் புலாலை உண்ணாமை ஆகியவற்றை மிகவும் வற்புறுத்தி, அவற்றையே அறங்களில் சிறந்த தலையாய மேலான அறம் என்று கட்டளையிட்டுள்ளார்.

சொராஸ்டர் (Zerosster) என்னும் பாரசீக சமயச் சான்றோரும், உணவின் பொருட்டு, ஆடு மாடு குதிரை மான் கோழி முதலிய உயிர்களைக் கொல்லுதல் மிகக்கொடிய பாவமாகும் என்று, செண்ட்அவெஸ்டா (Zend Avesta) என்னும் நூலில் விதித்தருளியிருக்கின்றார்.

(15) யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முதல் நூலாகிய பைபிள் என்னும் நூலில், முதல் ஆகமத்தில், கடவுள் உலகங்களைத் தோற்றுவித்து, மக்கள் குலத்தின் முதல் தாய் தந்தையராகிய ஆதாம் ஏவாள் என்பவர்களைப் படைத்த பின்னர், அவர்களை நோக்கி, ''நிலத்தின்மேல் உள்ள வித்துக்களைத் தரும் ஒவ்வொரு பூண்டினையும், வித்துக்களோடு பழத்தையும் தருகின்ற ஒவ்வொரு மரத்தினையும் யான் உங்களுக்குத் தந்திருக்கின்றேன். அவைகளே உங்களுக்கு உணவாகுக'' என்று மிகவும் தெளிவுறக் கூறப்பட்டிருக்கின்றது.

(16) கிறித்தவ சமய அருளாளர்கள் பற்பலர் புலால் உணவை நீக்கி வாழ்ந்தவர்கள் என்று வரலாற்று நூல்கள் கூறுகின்றன. கிரேக்க நாட்டில் பழைய காலத்தில் அறிவாலும் அருளாலும் சிறந்து விளங்கிய சாக்ரடீஸ் (Sacrates), பித்தாகொரஸ் (Pythogoras) என்பவரும், பிளேட்டோ (Plato) முதலிய சான்றோர்களும், தாமும் புலால் உண்ணாமல், பிறரையும் புலால் உண்ணாதிருக்கும்படி உபதேசித்து வந்துள்ளனர்.

(17) இவ்வாறே, இசுலாமிய மதத்தை நிலைநிறுத்திய நபிகள் நாயகம் அவர்களும், அரபிய நாட்டு மக்களுக்கு இயன்ற அளவிலும், கூடியவரையிலுமாவது, புலால் உண்ணாதிருக்குமாறு, தமது கொரான் (Quoran) திருமறையில் யிருக்கின்றார்.

(18) நமது தமிழ்நாட்டில் தோன்றியருளிய சைவ-வைணவச் சான்றோர்கள் அனைவருமே, புலால் உணவைக் கடிந்துள்ளனர். உலகம் வியந்து போற்றும் திருக்குறள் நூலை அருளிச் செய்த திருவள்ளுவர்,

''தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிதூண் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?''

''உண்ணாமை வேண்டும் புலாஅல்; பிறிதொன்றன்
புண்அது; உணர்வார்ப் பெறின்''

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்''

என்று, புலால் உண்ணுதல் கூடாதென்று கடிந்து பலவகைகளில் கூறியிருக்கின்றார்.

(19) வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகச் சான்றோராகிய தாயுமானவர்,

''கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லோர்க்கும் சொல்லுவதென் இச்சை பரா
பரமே''

''கொல்லா விரதம் ஒன்று கொண்டவரே நல்லோர்;
மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே''

என்று, கொல்லா விரதத்தினையும், புலால் உண்ணா ஒழுக்கத்தினையும், தம் பாடல்களில் ஆங்காங்கே வற்புறுத்தியுள்ளார்.

(20) திருவருட்பா என்னும் சிறந்த ஒப்புயர்வற்ற தெய்விகத் துதிநூலைப் பாடியருளிய திருவருட் பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க அடிகளார், புலால் உண்ணுபவர்கள் எவ்வளவு சிறந்த பெரியவர்களாயினும் மிகவும் இழிந்தவர்களே யாவர் என்று ஆணையிட்டுத் துணிந்து கூறுகின்றார்.

''மருவாணைப் பெண் ஆக்கி, ஒருகணத்தில்
கண்விழித்து வயங்கும் அப்பெண்
உருவாணை உருவாக்கி, இறந்தவரை
எழுப்புகின்ற உறுவன் ஏனும்,
கருவாள் நையுற இரங்காது உயிர் உடம்பைக்
கடிந்துண்ணும் கருத்தனேல், எம்
குருவாணை, எமது சிவக் கொழுந்தாணை
ஞானிஎனக் கூற ஒண்ணாதே''

என்றெல்லாம், கொலை புலை ஆகிய இரண்டையும் மிகவும் கடிந்து கூறி, தாவர உணவுகொள்ளும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தினையே பெரிதும் வலியுறுத்தித் தம் பாடல்களில் உபதேசிக்கின்றார்.

இவ்வாறே உலகப் பெருஞ் சான்றோர்கள் எல்லோருமே புலால் உணவினை வெறுத்துத், தாவர உணவையே உண்டு வாழுமாறு, நமக்குப் பலவகைகளில் அறிவுரைகள் கூறியருளியுள்ளனர்.

முடிவுரை :

எனவே, அன்பு பண்பு நல்லுணர்வு நல்லொழுக்கநெறி இறையருட்பேறுஆகியவற்றை விரும்புகின்றவர்கள் அனைவரும், புலால் உணவை வெறுத்துத் தாவர உணவையே மேற்கொண்டு, ஜீவகாருண்ய ஒழுக்கமுடையவர்களாய்ச் சிறந்து இனிது வாழ்தல் வேண்டும் என்று கூறி, இக்கூட்டத்தினைத் தொடங்கி வைத்து அமைகின்றேன். ***

"இடர்களையும் இடைக்கழி முருகன்"

(தல வரலாறு)

மாயூரம் வட்டத்தில், சிதம்பரம்-நாகப்பட்டினம் நெடுஞ்சாலையில், திருக்கடவூர்த் தலத்திலிருந்து தென்மேற்கே 6 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயூரம்-தரங்கம்பாடிப் புகை வண்டிப் பாதையில் உள்ள தில்லையாடி நிலையத்திற்கு மேற்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலும், திருவிடைக்கழி என்னும் புகழ்மிக்க முருகனின் திருத்தலம் உள்ளது. முருகப்பெருமானின் ஆறு படை வீடுகளைப் போல, இத்தலம் மிகவும் புகழ் பெற்றுச் சிறந்து விளங்குகின்றது. இந்தச் சிறந்த தலம், முருகனின் ஏழாவது படை வீடாகப் பெரிதும் போற்றப்படுகின்றது. இத்தலத்தைச் சேந்தனார் தம் திருவிசைப்பாவிலும், அருணகிரிநாதர் தமது திருப்புகழ், வேல்விருத்தம் மயில்விருத்தம் ஆகியவற்றிலும் புகழ்ந்து போற்றியுள்ளார். சங்ககாலப் பேரரசனாகிய பெருந்திருமாவளவன் என்னும் சோழ வேந்தன், இறைவனடி சேர்ந்த குராப்பள்ளி என்னும் இடமே, இந்நாளில் திருவிடைக்கழி என்னும் பெயரில் வழங்கி வருகின்றதென ஆராய்ச்சியாளர் கூறுவர். மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள், இத்தலத்தைக் குறித்துப் பிள்ளைத் தமிழ் ஒன்று பாடியுள்ளார். வழிபடுவோர்க்கு எளிதில் முத்தியைத்தரும் தலங்களுள் ஒன்றாகத் திருவிடைக்கழி சிறப்புற்று விளங்குகின்றது. இவ்வுண்மை, ''தருமருவும் எத்தலத்தரும் மருவ முத்தியைத் தரு திருவிடைக் கழிப் பெருமாளே'' என அருணகிரிநாதர் தம் திருப்புகழில் அருளிச் செய்திருத்தலால் இனிது விளங்கும்.

இத்தகைய புகழ் மிக்க திருவிடைக்கழி முருகனின் சிறப்புக்களையும், தல வரலாறுகளையும், தோத்திரப் பாடல்களையும் எல்லாம் ஒருங்கு தொகுத்து, சிவநெறிப் பெருஞ் செம்மலும், திருமுருகனின் பெரும் பக்தரும், செந்தமிழ்ப் புலமை நலம் சான்ற பெருந்தகையும், அண்ணாமலைப் பல்கலைக் கழக வேதியியல் துறை விரிவுரையாளரும் ஆகிய திரு ஆ. மங்கலமுடையார், M.A., M.Sc.,. அவர்கள், இந்நூலின்கண் பக்தர்களுக்குப் பயன்படும்படி அழகுற வெளியிட்டுள்ளார்கள். நல்ல பயன் மிக்க சிறந்த நூல். விலை ரூ. 3.00. இதன் விற்பனைத் தொகை முழுவதும் திருவிடைக்கழி முருகனின் திருக்கோயில் திருப்பணிக்கே சேரும். கிடைக்குமிடம் : ''திரு ஆ. மங்கலமுடையார், எம்.ஏ., எம்.எஸ்சி., வேதியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர் —608 101, தென்னார்க்காடு மாவட்டம்.''

—ஆசிரியர்.

மனக்கவலை மாற்றும் வழி

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும், சில பல நிகழ்ச்சிகளோ, அநுபவங்களோ, இன்றியமையாமைகளோ ஏற்பட்டு, எங்ஙனமேனும் சமயவுணர்வையும் கடவுள் நம்பிக்கையையும் எழுப்பியே விடுகின்றன.

முடிசார்ந்தமன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பர் ஆகியே ஒழிகின்றனர். நிலைபேறு உடையன போலத்தோன்றும் பொருள்களெல்லாம் முடிவில் நிலைபேறு இன்றி அழிந்து மறைந்து போதலை நாம் நாடோறும் கண்டு வருகின்றோம். மனிதனின் செருக்கும், பெருமிதமும், முனைப்பும் நாளடைவில் தேய்ந்து மாய்ந்து அழிந்து போகின்றன.

பெருத்த துன்பங்களும் தொல்லைகளும் நெருங்கா லெல்லாம், மனிதன் தன்னுடைய சிறுமையினை உணர வேண்டியவன் ஆகின்றான். உலகமெலாம் ஒரு குடைக்கீழ் அடக்கி ஆண்டு, யாவும் தம்மாலேயே, தம் ஆற்றலுக்குப் பணிந்து நடப்பனவாகக் கருதித் தருக்கிக் களித்துநிற்கும் மாவேந்தவர்களும் பிறரும், தம்மாட்டு நிகழும் காம வெகுளி மயக்கங்களும் பிறவும் தம்மை ஆட்டிப் புடைத்து அலைக்கழிப்ப, அவற்றிற்குத் தாம் அடங்கி நின்று அல்லற்பட்டு 'அந்தோ வினையே' என்று அழுங்கித் துன்பம் உழக்கின்றனர்.

தம்முடைய அறிவும் முயற்சியும் பிறவும் ஒரு வரையறைக்கு உட்பட்டனவே என்று உணர்கின்றபோது, வரையறைக்கு உட்படாத பேரறிவும் பேராற்றலும் பேரின்பமும் உடைய பரம்பொருளின் துணையை அடைய, மனிதன் பெரிதும் ஆவல்கொண்டு அலைந்தெய்த்து ஏக்கற்றுத் துடிக்கின்றான்.

நாம் விரும்பி எதிர்பார்ப்பது ஒன்றாக, நிகழ்வதோ பிறிதொன்றாக அமைந்து விடுகின்றது. எத்துணை உயர்ந்த செல்வம் செல்வாக்குகளைப் பெற்றுச் சிறந்த நிலையில் வதிபவரும், தம்முடைய நிலையில் உளநிறைவு எய்துகின்றிலர். மனிதமனம் ஆரா இயற்கை அவா மிக்கதாகத் திகழ்கின்றது. ஒரு பொருளைப் பெறாதொழிந்தவழி நேரும் துன்பம் போலவே, அப்பொருளைப் பெற்ற வழியும்கூட நிறைவு பெறாமல், ஏதேனும் ஒருவகையில் மனம் துன்புறுகின்றது.(*) மணிமேகலை என்னும் செந்தமிழ்க் காப்பியம் கூறுமாறுபோல, மக்கள் வாழ்க்கையானது ''அவலக் கவலை கையாறு அழுங்கல் தவலா உள்ளம் தன்பால் உடையது'' என்பதில் ஐயமில்லை.

வாழ்வும் கவலையும் :

உலகில் மக்களாகப் பிறந்தார் அனைவருக்கும், ஏதேனும் ஒரு கவலை இல்லாமல் போகவில்லை. ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஒவ்வொரு கவலை இருக்கத்தான் செய்கின்றது. கவலை இல்லாதவர்களை உலகத்திற் காண்டல் அரிது.

''அன்ன விசாரம்! அதுவே
விசாரம்! அதுவொழிந்தால்
சொன்ன விசாரம்! தொலையா
விசாரம்! நற்றோகையரைப்
பன்ன விசாரம்! பலகால்
விசாரம்! இப் பாவிநெஞ்சுக்கு
என்ன விசாரம் வைத்தாய்!
இறைவா கச்சி ஏகம்பனே!''

என முற்றத் துறந்த பட்டினத் தடிகள் தாமும், மனித வாழ்வின் முடிவிலா விசாரம் பற்றி மொழிந்தருள்கின்றார்!

''பாலுக்குச் சர்க்கரை இல்லை
என்பார்க்கும், பருக்கையற்ற
கூழுக்குப் போட உப்பில்லை
என்பார்க்கும், முட்குத்தித் தைத்த
காலுக்குத் தோற்செருப்பு இல்லை
என்பார்க்கும், கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை இல்லை
என்பார்க்கும், விசனம் ஒன்றே''

எனவரும் தனிப்பாடல், எவ்வளவு உயர்ந்தவர்கட்கும் அவரவர்கள் நிலையில் ஏதேனும் கவலைகள் இருத்தலை அழகுற உணர்த்துகின்றது.

(*) "There are two tragedies in life ; one is not to get our heart's desire ; the other is to get it."

—G. B. SHAH.

கவலை தீரக் கடவுள் வழிபாடு :

வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் மனக் கவலைகளைப் போக்கிக் கொள்ளச் சமய வுணர்வும் கடவுள் நம்பிக்கையுமே பெரிதும் துணை புரிகின்றன. இறைவனை வழிபடுவதன் மூலம் நம் கவலைகள் பலவும் எளிதில் தீர்கின்றன. நாம் நம் கவலைகளை நீக்கிக் கொள்ளுதற்குரிய நேரிய செவ்விய வழி, இறைவனின் திருவடிகளைச் சரண் அடைதல் ஒன்றேயாகும். நம் நாட்டுச் சான்றோர்கள் அனைவரும் நமக்கு அறிவுறுத்திக் கூறிச் சென்றுள்ள இவ்வுண்மையினை, இந்நாளில் உலகப் புகழ் பெற்றுள்ள மேலைநாட்டு அறிஞர்கள் பலரும் உடன்பட்டுக் கூறத் தலைப்பட்டுள்ளனர். உலகப் புகழ்பெற்ற மனஇயல் நூல் அறிஞர் ஆகிய பேராசிரியர் சி ஜி. யங் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார்.

(*) ''கடந்த முப்பது ஆண்டுகளாக, உலக நாகரிக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் பலரும், என்பாற் கலந்து ஆய்வுரை கேட்டுள்ளனர். என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும், வாழ்க்கையில் இரண்டாம் பகுதியில் — அதாவது, முப்பத்தைந்து வயதுக்கு மேல் — தமது இன்னல்கள் தீருவதற்கு உரிய கடைசிவழியாகத், தமது வாழ்க்கையிற் சமயவுணர்வு கைவரப் பெறுதலைக் கொள்ளாதவர்கள் ஒருவராவது இல்லை. அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்றதற்குக் காரணம், உயிர்ப்புடைய ஒவ்வொரு சமயமும், அவ்வக் காலத்தில் தன்னைப் பின்பற்றும் மக்களுக்குத் தருகின்ற மனநிறைவு ஆகிய உணர்ச்சியை, அவர்கள் பெறாமல் இழந்துவிட்டமையே ஆகும். மீண்டும் சமய உணர்வு கைவரப் பெறாமல், அவர்களில் ஒருவராவது உண்மையில் தம்முடைய பிணி தீரப் பெற்றிலர்.''

(†) ''யார் உண்மையிற் சமயவுணர்வோடு இருக்கின்றார்களோ, அவர்களுக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்படுவதில்லை'' என டாக்டர் ஏ. ஏ. பிரில் என்பவர் கூறுகின்றார். ''மனிதர்களை வாழ்விக்கும் ஆற்றல்களுள் கடவுள் நம்பிக்கை என்பது ஒன்று,. அது முழுவதும் இல்லாமல் போகுமாயின், வீழ்ச்சியையே குறிக்கும்''(*) என வில்லியம் ஜேம்ஸ் என்பவர் விளக்குகின்றார். ''கடவுள் வழிபாடு செய்யாமல் இருப்பின், நான் எப்போதோ பைத்தியக்கரான் ஆகிவிட்டிருப்பேன்''(†) எனக் காந்தியடிகள் உரைத்திருத்தலை நாம் உணர்வோம்.

இறையுணர்வு இன்றியமையாதது :

இவ்வாறே, உலகப்புகழ் பெற்ற மற்றொரு பேரறிஞர் ஆகிய பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் தத்துவ-கணித மேதை கூறுவதும், ஈண்டுக் கருதியுணரற்பாலது.

(‡)''நம் காலநிலைக்கு வேண்டுவன சில இருக்கின்றன; விலக்கப்பட வேண்டுவன சில உள்ளன. நம் காலநிலையில் அருளுணர்வும், 'மனித இனம் இன்பமாக வாழவேண்டும்' என்னும் விருப்பமும் தேவைப்படுகின்றன. எல்லாவற்றினும் மேலாகத் திடமான நம்பிக்கையும், புதியன படைத்தலில் துடிப்பும், இக்காலத்திற்கு இன்றியமையாதனவாகும்.

நான் கூற முற்படும் செய்தியின் அடிப்படை அல்லது வேர் யாதெனின், மிக எளிமையானதும், மிகப் பழமை முறையில் அமைந்தது மான ஒன்றேயாகும். நான் கூறத் தலைப்படுவது மிக மிக எளிமையும், பழமை முறை வாய்ந்ததாக இருத்தலும் பற்றி, ஒரு சிலர் என்பாற் புன்முறுவல் பூத்து ஏளனம் செய்யக்கூடுமே என்றஞ்சி, அதனைக் குறிப்பிடுவதற்குக்கூடத் தயங்கி, நான் பெரிதும் நாணம் கொள்ளுகின்றேன்.

நான் கருதும் பொருள்-அதனைக் குறிப்பிடுவதற்காக, அருள்கூர்ந்து என்னை மன்னித்து

" During the past thirty years, people from all the civilized countries of the world have consulted me...

Among all my patients in the second half of life — that is to say, over thirty-five years — there has not been one, whose problem in the last resort was not that of finding a religious outlook on life . . .

It is safe to say that every one of them fell ill ; because he had lost that which the living religions of every age, have given to their followers and none of of them has been really healed who did not regain his religious outlook "

—**Prof. CARL GUSTAV JUNG.**

(†) "Any one who is truly religious does not develop a neurosis. " —**Dr. A. A. BRILL.**

(*) " Faith is one of the forces by which men live and the total absence of it means collapse."

—**Prof. WILLIAM JAMES.**

(†) " Without prayer, I should have been a lunatic long ago." —**GANDHIJI.**

(‡) " There are certain things that our age needs, and certain things it should avoid. It needs campsasion, and a wish that man kind should be happy ; it needs above all, courageous hope and the impulse of creativeness.

The root of the matter is a very simple and old-fashioned thing, so simple that I am almost ashamed to mention it, for fear of the derisive smile with which wise cynics will greet my words.

The thing I mean — please, forgive me for mentioning it — is love, Christian love, or compassion.

If you feel this, you have a motive for existence, a guide in action, a reason for courage, an imperative necessity for intellectual honesty"—

—**Dr. BERTRAND RUSSEL.**

விடுங்கள்!-அன்பு, 'கிறித்தவ அன்பு' அதாவது இறையுணர்வோடு கூடிய இரக்கவுள்ளம் ஆகும்

இவ்வுணர்வை நீங்கள் பெறுவீர்களாயின்: உங்கள் வாழ்க்கைக்கு ஓர் உயரிய நோக்கமும், செயல்களுக்கு ஒரு வழிகாட்டியும், மனவுறுதிக்கு ஒரு காரணமும், அறிவின் நேர்மைக்கு ஓர் இன்றியமையாத தேவையும் பெற்றவர்கள் ஆவீர்கள்''

திருவள்ளுவர் :

இவ்வாற்றால் மனித வாழ்க்கைக்குக் கடவுளுணர்ச்சி எவ்வளவு இன்றியமையாதது என்றும்; தனக்கு உவமை இல்லாதவனாகிய கடவுளின் திருவடிகளைப் பற்றுக்கோடும் புகலிடமுமாகக் கொண்டு, அடைக்கலம் புகுந்து தொழுது வழிபட்டாலன்றி, மனக்கவலை மாற்றல் அரிது என்றும் உணரலாம். இதனையே திருவள்ளுவர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பெரிதும் வற்புறுத்தியுள்ளார்.

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

இதன்கண் இறைவன் எனற்பாலதனைத் ''தனக்குவமை இல்லாதான்'' என்றும், வழிபாடு செய்தலைத் ''தாள் சேர்தல்'' என்றும் திருவள்ளுவர் குறிப்பிட்டிருக்கும் நுட்பம் கருதியுணரற்பாலது. ''தாள் சேர்ந்தார்க்கு எல்லாம் மனக்கவலை மாற்றல் எளிது'' என உடன்பாட்டு முகத்தாற் கூறி அமையாமல், ''தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது'' என இரண்டு எதிர்மறை வாய்பாட்டுச் சொற்கள் இட்டுக்கூறியிருக்கும் திறமும், நாம் சிந்தித்து இன்புறுதற்குரியது.

திருக்குறட் சொற்பொருள் நலங்கள் :

அரசன் அல்லது தலைவன் போன்ற மனிதர்களை வழிபடும் வழக்கம், பண்டைக் காலத்துப் பலதிற மக்களிடையே இருந்து வந்ததாதலின், அதுகூடாது என்பார் ''தனக்குவமை இல்லாதான்'' என்றும்; வழிபடும் தன் சிறுமையையும் வழிபடப் பெறுவோரது பெருமையையும் உள்ளவாறு உணர்ந்து பணிந்து புகல் அடைதலே வழிபாடு என்பார் ''தாள் சேர்தல்'' என்றும்; வழிபாட்டின் பயன் இஃது என்பார் ''மனக்கவலை மாற்றல்'' என்றும்; வழிபாடு ஒன்றினால் அன்றி வேறு எதனாலும் கவலைகளைத் தீர்த்துக் கொள்ளல் இயலாது என்பார் 'அரிது' என்றும் தெய்வப்புலவர் திறந்தெரிந்து இயம்பியருளினர். ஈண்டு அருமை, இன்மைமேல் நின்றது.

இம்மட்டோ! இத்திருக்குறளின்கண், வறிதே 'கவலை' என்னாமல் 'மனக்கவலை' என்றதனால், மனமுடையார் எவராயினும் அவரனைவர்க்கும் கவலையுண்டு என்பதும், அதனை அவர்கள் எவ்வாற்றாலும் தாமே தீர்த்துக் கொள்ளுதல் ஒருபோதும் இயலாது என்பதும் குறிக்கப்பெற்றன. கல்வி செல்வம் புகழ் பதவி ஆற்றல் ஆணை முதலியன பலவும் பெற்றவரேயாயினும், அவர் அனைவரும் கடவுளை வழிபட்டேயாதல் வேண்டும் என்பதும், இதனால் மிக மிக வலியுறுத்தப் பெற்றது. கண்காண்டற்கும், வாய் பேசுதற்கும், காது கேட்பதற்கும், பிற பிற செயல்களைச் செய்தற்கும் படைக்கப்பட்டவாறு போல, மனம் கடவுளை நினைந்து வழிபடுவதற்கே அமைந்தது என்பதும், இவ்வாற்றாற் புலப்படுத்தப்பட்டது. மேலும், கடவுளை வழிபடாதவன் மனமுடைய மனிதன் அல்லன்; உடலளவில் மனிதனாயினும், மனவுணர்வில் விலங்கு நிலையிலேயே இழிந்து தாழ்ந்து கிடப்பவன் என்பதும்; இங்குத் திருவள்ளுவரால் அறிவுறுத்தப்பட்டன. (*)

இனி, வேறொன்றும் நாம் இங்கு எண்ணியுணரத் தக்கதாக இருக்கின்றது. ''மனக்கவலை தீர்த்தல்'' என்று கூறாமல், ''மனக்கவலை மாற்றல்'' என்று குறிப்பிட்டதன் சிறப்பு யாது? என்று, நாம் உன்னித்து உணர்தல் வேண்டும். 'தீர்த்தல்' எனில், துன்ப நீக்கம் ஒன்றுமே குறிப்பிடப் பெற்றதாகும். 'மாற்றல்' என்றதனால் துன்ப நீக்கமும், அதன் மறுதலையாகிய இன்ப ஆக்கமும், ஆகிய இரண்டுமே ஒருசேரச் சுட்டப் பெறும். இவ்வாற்றால், கடவுளை வழிபடுவோர் அனைவரும் துன்பம் நீங்குவதோடு மட்டும் அன்றி, இன்பமும் ஓங்கப் பெறுவர் என்றும், இறை வழிபாட்டின் பயனைத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் தெளிவித்தருளியுள்ளமையுணரலாம்.

முடிவுரை :

இதுகாறும் கூறியவற்றால், மனக்கவலைகளை மாற்றிக் கொண்டு மகிழ்ந்தினிது வாழ்வதற்குரிய நேரிய இனிய ஒரேவழி, ''தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப்பேணுமின்'' என்றபடி, நாம் கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் உடைய நல்லவர்களாய், வையத்து வாழ்வாங்கு வாழ முயலுதலே என்று செவ்விதின் தெளியலாம்.

''துன்பம் இன்றித் துயர்இன்றி, என்றும்நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்;
என்பொன் ஈசன் இறைவன்என்று உள்ளுவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே''

''பெருக லாம்தவம்; பேதைமை தீரலாம்;
திருகல் ஆகிய சிந்தை திருத்தலாம்;
பருக லாம்பரம் ஆயதோர் ஆனந்தம்;
மருக லான்அடி வாழ்த்தி வணங்கவே''

—திருநாவுக்கரசர்.

(*)"For What are men better than
sheep or goats
That nourish a blind life
Within the brain,
If knowing God, they lift not
hands of prayer
Both for themselves and those
Who call them—Friend."

—**ALFRED TENNYSON**

எது வீரம்?

''அருண்மொழியரசு''

திரு முருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள்

வீரம் எது என்பதை விளக்குவது இக் கட்டுரையின் நோக்கம். வீரம் வீரம் என்றால், பலர் வாள் தாங்கி வில் பிடித்துப் போர் புரிவது என்று கருதுகின்றார்கள். ஆனால் ஆயுதங்களைத் தாங்கி உயிரைத் துரும்பாக நினைத்துப் புரியும் போர், வீரம் அன்று. அது வீரமாகாது.

எத்தனை நெருக்கடி நேர்ந்தாலும் அறத்தினை விட்டு, அகலாது நிற்கின்ற மனப் பண்பு உடையவர்களே வீரர்கள். அறநெறியை அகலாது கடைப் பிடிப்பதுவே வீரம். ஒரு சமயம் செல்வமெல்லாம் இழக்க நேர்ந்தாலும், உயிரே நீங்கும் இடர் எய்தினாலும், அறத்தைக் கடைப்பிடிப்பவரே வீரராவார்.

> நிறப்பெரும் படைக்கலம் நிறத்தின் நேருற
> மறப்பயன் விளைக்குறும் வன்மை யன்றரோ,
> இறப்பினுந் திருவெலாம் இழப்ப எய்தினும்
> துறப்பிலர் அறம்எனல் சூர ராவதே.

இந்தப் பாடல் இராமர் சுமந்திரரை நோக்கிக் கூறியது. அறத்தின் நெறி நின்று, அத் தரும நெறியை விடாது பிடித்துள்ள ஒருவருக்கு எத்துணைத் துன்பம் நேரினும் அறத்தில் உறுதியுடன் நிற்பர். அத்தகைய வீரர் சிலர் நமது பாரத நாட்டில் வாழ்ந்தார்கள்.

*　　*　　*　　*

அரிச்சந்திரன் :

மனு குலத்திலே வந்தவன் அரிச்சந்திரன். அம் மன்னர் பெருமானிடம் ஒரு சமயம் விசுவாமித்திரர் வந்து, ''யானை மீது ஒரு இளைஞன் நின்று வெண்கல் எறிந்தால் அக் கல் எத்துணை உயரஞ் செல்லுமோ அத்துணை உயரம் பொன், யாகம் புரியத்தரவேண்டும்'' என்று கேட்டார். ''தருகின்றேன்'' என்றான் அயோத்தி யரசன். ''வேண்டும் போது பெறுவேன்'' என்றார் விசுவாமித்திரர்.

ஒரு நாள் அம் முனிவர் வந்து அரசாங்கத்தை யாசித்தனர். உத்தம மன்னன் அரசை அப்போதே முனிவருக்கு வழங்கி விட்டான்.

விசுவாமித்திரர் ''மன்னா! நீ அன்று தருவதாகச் சொன்ன பொற்குவியலைக் கொடு'' என்று கேட்டார்.

என் செய்வான்? இறைவன். இல்லையென்றால் சொல் தவறிய பாவம் வரும். சோர்வது பிழை. பொருளை யீட்டித் தருவதாக மன்னன் காசிக்குச் சென்றான்; மனைவியையும் மகனையும் விற்றான். தான் சுடலை காக்கும் புலையனுக்கு அடிமையானான். உலகங் காத்த அரிச்சந்திரன் சுடலை காத்தான். மணித்தவிசில் வீற்றிருந்த மன்னன், வெற்றெலும்பின் மீது இருந்தான். ஓமப் புகைபட்ட உடம்பில், ஈமப் புகை பட்டது. சிவந்த திருமேனி கருமேனியாயிற்று. பட்டுப் பீதாம்பரம் உடுத்த இடையில், பிணத்தின்மீது போர்த்த சல்லாத் துணியிருந்தது. தெள்ளமுதம் உண்ட வாயில், வாய்க்கரிசியைப் பொறுக்கி யுண்டான். பல ஆண்டுகள் இவ்வாறு துன்பத்தில் துடித்தான். அப்போதும் அம் மன்னர் பெருமான் வாய்மையை விட்டு வழுவவில்லை.

இறந்த மகனைக் கொணர்ந்து விறகிலிட்டுச் சுடுவதற்கு முயல்கின்றாள் சந்திரமதி. உருக் குலைந்த அவளை மனைவியென்று உணராத அரிச்சந்திரன் சிதையை உதைத்து ; ''ஏண்டி! இம் மயானம் உனக்குச் சொந்தமா? காலணாவும் முழத் துண்டும் தர வேண்டும்'' என்றான். ''அண்ணா! என்னிடம் ஒரு சல்லியும் இல்லை'' என்றாள் உத்தமி.

''ஏண்டி! உன் கழுத்தில் உள்ள தாலியை விற்றுக் கொடு'' என்றான் மன்னன். சந்திரமதி, ''அந்தோ! இத் தாலி அயோத்தியை யாளும் மன்னர் ஒருவருக்கே தெரியும். இச் சுடலை காக்கின்ற வெட்டியான் கண்டானே'' என்று கூறியழுதாள்.

அரிச்சந்திரன் ஒரு புறம் எரிகின்ற பிணத்தைச் சிறிது தூண்டி நன்கு எரியவிட்டு, அந்த வொளியில் அவளை உற்று நோக்கினான். மனைவியென்று அறிந்தான். ''பெண்மணி! மாண்டது நமது தவப் புதல்வனா?'' என்று வினவினான். கணவன் என்று அறிந்தாள் மாதரசி. ''சுவாமி! நீர் பிணஞ் சுட்டுக் கொண்டா இருக்கின்றீர்?'' என்று கேட்டாள். இருவரும் அருமந்த மைந்தனைத் தழுவிப் புலம்பி யழுதார்கள். அப்போது வந்தார் விசுவாமித்திரர். ''அரிச்சந்திரா! பொன் தர இசைந்த சொல்லை இல்லை என்று சொல்; உனது நாட்டையும் வீட்டையும் இறந்த மகனையும் அரசையும் தருவேன்'' என்றார்.

மன்னவன் கூறுகின்றான். ''விசுவாமித்திரரே! நீர் கலையுணர்ந்தவரா! உமக்கு இது

அழகா? பொய் கூறி நான் கற்பகோடி யுகமா வாழப் போகின்றேன். இந்த உடம்பைப் புலையனும் விரும்புவதில்லை. இப் புன் புலால் யாக்கையைப் பெரியதென நினைத்து உயிரினும் உயர்ந்த சத்தியத்தை விடுவேனோ? முனிவரரே! உடைந்த கண்ணாடி கூட, பின் புறம் சுவர் மீது வைக்க உதவும். உடைந்த பானை ஓடும் வறுக்கும் ஓடாக உதவும். மாண்ட உடும்பின் தோல் கஞ்சிராவுக்கு ஆகும். உடைந்த பொருள்கள் யாவும் வேறு ஒரு வகைக்குப் பயன்படுகின்றன. மனிதன் இறந்து போனால் இந்த உடம்பு ஒன்றுக்கும் பயன்படுவதில்லை. இத்தகைய அசுத்தமான இந்த உடம்பு வாழ வேண்டும் என்று பொய் புகல்வதா? நாங்கள் நகரத்தை யிழந்தோம்; அருந் தவப் புதல்வனை யிழந்தோம்; செல்வத்தை யிழந்தோம்; இனி எமக்குக் கிடைக்க இருக்கும் பரகதியையேஇழக்க நேர்ந்தாலும் சொன்ன சொல்லைஇழக்கமாட்டோம்'' என்றான். ஆ! ஆ! என்று வானில் ஒரு ஒலி தோன்றியது. மதியையும் வாயையும் இழந்து விசுவாமித்திரர் மறைந்தார்.

புலையனும் விரும்பாத இப் புன்புலால் யாக்கை
நிலையெ னுமருண் டுயிரினும் நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்
கலையுணர்ந்த நீ எமக்கிது கழறுவ தழகோ?

பதியிழந் தனம் பாலனை யிழந்தனம் பெற்ற
நிதியிழந்தனம் இனி எமக்குண்டென நினைக்கும்
கதியிழக்கினும் கட் டுரை யிழக்கிலேன் என்றான்;
மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்

மலை புரண்டு வரினும், கடல் கொந்தளித்துப் பொங்கி வரினும், வானம் இடிந்து தலை மீது விழ நேர்ந்தாலும், தரும நெறி நின்றும் வழுவாது நிற்கும் செயலே வீரச் செயல். இத்தகைய வீரர்களில் முன்னணியில் நிற்கின்றவர் அரிச்சந்திரர். இவர் தரும வீரர்; மகா வீரர்.

* * * * *

அர்ச்சுனன் :

ஔவையார், ஐம்புலன்களை வென்றவனே வீரன்; ''புலனைந்தும் வென்றான்றன் வீரமே வீரம்'' என்கின்றார்.

ஞானமாகிய அங்குசத்தால், ஐம்பொறிகளாகிய மெய் வாய் கண் நாசி செவி என்ற ஐந்து யானைகளை அடக்கினவனே சிறந்த வீரன் என்கின்றார் திருவள்ளுவர்.

உரன்என்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரன்என்னும் வைப்புக்கோர் வித்து.

அர்ச்சுனன் இந்திர நீல மலையின் மீது நின்று பொறி புலன்களை அடக்கி மனத்தை ஒடுக்கி அரிய பெரிய தவஞ் செய்தான்; பூட்டிய பூட்டை இழுத்துப் பார்ப்பதுபோல், மகனுடைய தவம் உறுதியாக உளதா என்று ஆராய்ந்தறிய நினைத்தான் இந்திரன். அரம்பை மேனகை திலோத்தமை ஊர்வசி என்ற நான்கு அழகின் சிகரங்களாகிய தேவமாதர்களை அனுப்பினான்.

அவர்கள் மயில் குயில் தென்றற்காற்று மதனன் முதலிய பரிவாரங்களுடன் வந்தார்கள். அசைவற நின்று தவம் புரியும் அர்ச்சுனப் பெருமானுக்கு முன்னே நின்று இன்னிசையுடன் பாடினார்கள்; சிலம்போசையுடன் ஆடினார்கள். தாங்கள் கற்ற சாகசங்களையெல்லாம் புரிந்தார்கள். தனஞ்சயன் மனஞ்சயனாக நின்றான். இரும்புத் தூண்போலே நின்றான். விழித்திருந்தும் அவன் அவர்களைப் பார்க்கவில்லை. காது இருந்தும் கீதங்களைக் கேட்கவில்லை. மூக்கிருந்தும் நறுமணங்களை முகரவில்லை. அவன் ஞான வீரனாக நின்றான். தேவ மாதர்கள் நாணினார்கள். ''விசுவாமித்திரராதி முனிவர்கள் எல்லாம் நம்மைக் கண்டு நிலைகுலைந்தார்களே? இந்த இளைஞன் நம்மைக் கண்டு ஒரு சிறிதும் கூடக் குலையாது வைரத் தூண் போல் நிற்கின்றானே, இது என்ன அதிசயம்!'' என்று கூறி அஞ்சி யகன்றார்கள்.

பின்னர் சிவபெருமான் வெளிப்பட்டு அர்ச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரம் வழங்கினார். யாரும் பெறாத அருளை அருச்சுனன் பெற்றான், இதனை யறிந்த இந்திரன் பெரிதும் உவந்தான். மகனிடம் வந்து, உள்ளம் குழைந்து தழுவினான். செம்பொற்றேரில் ஏற்றி அமராவதி நகருக்கு அழைத்துச் சென்றான். பொன்னுலகில் தனஞ்சயனுக்கு இந்திரன் பட்டாபிஷேகஞ் செய்தான். அரம்பையர்களாகிய ஊர்வசி முதலியோர் நடனம் ஆடினார்கள். பரதக் கலையில் வல்லவனாகிய அர்ச்சுனன் இடமறிந்து தலையசைத்து, முடிவில் சிறந்த பரிசுகளை வழங்கினான். அவனுடைய அளவற்ற எழிலைக் கண்ட ஊர்வசி அவன் மீது காதல் கொண்டாள்.

அன்று இரவு தனியே ஒரு சிறந்த பொன் மாளிகையில், அருச்சுனன் மலரணை மீது துயில் புரிந்து கொண்டிருந்தான். ஊர்வசி நன்கு அலங்கரித்துக்கொண்டு நறுமணங் கமழ, பழங்கள் நிறைந்த நவமணித் தட்டுடன் நடு நிசியில் வந்தாள். அர்ச்சுனன் அவளுடைய பாதச் சிலம்போசை கேட்டுக் கண்விழித்து எழுந்தான். ''தாயே! வருக. உனக்கு வணக்கம்'' என்று கூறி அவள் பாத மலர் மீது வீழ்ந்தான். ஊர்வசி திகைத்து நின்றாள்; நாணினாள். சீற்றமுங் கொண்டாள். ''அரசர் கோமானே! உன்னை மகன் என்று கருதியா நடு நிசியில் வந்தேன். என் ஆர்வத்தைக் கெடுத்தனையே, நான் பொது மகள்தானே. உன்னை விரும்பி வந்தேனே. என் எண்ணத்தைக் கடலில் கரைத்த காயம் போல் வீணாக்கினையே, இது முறையா?'' என்றாள்.

''அம்மா! உன்னைப் பொது மகள் என நான் அறிவேன். உன்னைக் கூடினால் அது பிழையில்லை எனவும் அறிவேன். நான் இப்போது பொன்னுலகத்துக்கு அரசன். நீ என் சபை நடன மாது. நீ எனக்கு உரிமையானவள். ஆனால் திருநீறு தரித்து ஐந்தெழுத்தை ஓதிச் சிவ சிந்தை செய்யும் நான், பொது மகளாகிய உன்னை ஏற்றுக் கொள்ள மாட்டேன். நீ என் பிதாவை மருவிய படியால் எனக்கு அன்னை முறையாகின்றாய். சிவனடியே சிந்திக்குந் திருவுடைய நான் உன்னைத் தீண்ட மாட்டேன்.''

என்று உறுதியுடன் உரைத்தான். அப்போது அறக்கடவுள் ஆ! என்று வியந்து தலையசைத்தது. அவனுடைய தரும வீரத்தைக் கண்டு உலகம் அதிசயமுற்றது. இதுதான் வீரம்.

அஞ்ஞாத வாசத்தில் அர்ச்சுனன் பேடி யுருவமுற்று விராடனுடைய நகரத்தில் அவனுடைய அருமைப் புதல்விக்குப் பரதக்கலையைக் கற்பித்து வந்தான். ஓராண்டு முடிந்தது. பாண்டவர்கள் பண்டை யுருவ மெடுத்தார்கள். சபையில் தருமரும் வீமனும் அருச்சுனனும் நகுல சகாதேவரும் வீற்றிருந்தார்கள்.

விராட ராஜன் மலர் மாலைகளுடனும் கனி வர்க்கங்களுடனும் வந்து தருமருடைய தாள் மலர் மீது வணங்கினன். ''மன்னர் பெரும! என் நாடு நகரம் முழுவதும் தங்கட்குக் காணிக்கையாகத் தந்தேன். என் மகள் உத்தர குமாரியை அர்ச்சுனருக்கு மனைவியாகத் தந்தேன்'' என்றான்.

அப்போது அர்ச்சுனன் விராட வேந்தனை நோக்கி, ''வேந்தே! உன் அன்புக்கு நன்றி. உன் மகளுக்கு நான் ஓராண்டு பரதக் கலையை ஓதுவித்தேன். அவள் என் மாணவி. மாணவி எனக்கு மகளாக வேண்டும். நீ எனக்குத் தந்த அவளை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் மனைவியாக ஏற்றுக் கொள்ள மாட்டேன். மருமகளாக ஏற்றுக் கொள்ளுகிறேன். என் மகன் அபிமன்யுவுக்கு அவளை மணஞ் செய்து மருகியாகக் கொள்வேன்'' என்றான்.

அழகிய இளம் பெண்மணியை—பல நாள் பழகிய எழில் கொடியை, அவள் தந்தை வலிதில் தருகின்றேன் என்று கூறியும், அவளைமனைவியாகக் கொள்ளாது மருகியாகக் கொண்ட தனஞ்சயனுடைய தரும வீரமே வீரம்.

* * * * *

மெய்ப்பொருள் நாயனர் :

திருநீறு புனைந்தார் யாவரேனும் வணங்கி வழிபட வேண்டும் என்று உறுதி கொண்ட மெய்ப்பொருள் நாயனரை, வஞ்சகனுகிய முத்தி நாதன் திருநீறு பூசி அடியவராக வந்து, ஆகம நூல் அவிழ்ப்பான் போல் வாள் எடுத்து வீசினன். குருதி யொழுக உயிர் துடித்து வீழ்கின்ற மெய்ப்பொருள் நாயனர் தனது தரும நெறி தவருது தொழுது வென்றார். அவனைக் கொல்ல வந்த தத்தனை நோக்கி, ''தத்தா! அவர் நமர்; அவரை அபாயமின்றி நகரைக் கடக்குமாறு செய்'' என்று பணித்து, முத்தி நாதனை ஊர் தாண்டி விடுத்துத் தத்தன் வருமளவும் உயிர் தாங்கியிருந்து, சிவனடி சார்ந்தமெய்ப்பொருள் நாயனருடைய தரும வீரமே வீரம். **

அறிவியலும் அருளியலும்

அறிவியலுக்கும் அருளியலுக்கும் ஏதோ முரண் பாடு இருப்பது போல, நம்மிற் பலர் நினைப்பதும் பேசுவதும் உண்டு. அறிவியல் வளர வளர, அருளியலும் அருளியல் நம்பிக்கைகளும் தாமே மறைந்து விடும் என்றும், ஒருசிலர் வலியுறுத்திக் கூறுவர். இறையுணர்வும் நம்பிக்கையும் உடையவர்களைப் பிற்போக்காளர்கள், குருட்டு நம்பிக்கை கொண்டவர்கள் என்றெல்லாம் கூறிப்பிட்டு, ஒரு சிலர் ஏளனமும் செய்யாநிற்பர். மற்றும் சிலர், தமக்கு இறையுணர்வும் நம்பிக்கையும் இல்லை என்று சொல்லிக் கொள்ளுதலை, ஒருவகை முற்போக்கு நெறியாகவும், நாகரிகப் பாங்காகவுங்கூடக் கடைப்பிடித்தொழுகுதலை, நாம் காண்கின்ருேம்.

ஆனல் உண்மையிலேயே ஆராய்ந்து பார்த்தால், அறிவியலுக்கும்—அருளியலுக்கும் எத்தகைய இகலும், முரண்பாடும் இருப்பதாகச் சிறிதும் தோன்றவில்லை. அறிவியலும்—அருளியலும் தமக்குள் எவ்வகையிலும் மாறுபட்டன அல்ல. அறிவியல், ஐம்புலன்களுக்குள் அகப்படும் புறப்பொருள்களையும், பருப்பொருள்களையும் (Phenomena) மட்டுமே, ஆராய்ந்தறிய முயலுகின்றது. அருளியலோ, ஐம்புலன்களுக்கும் எட்டாமல் அப்பாற்பட்டு விளங்கும் அகப்பொருள்களையும், நுண்பொருள்களையும் (Noumena) ஆழ்ந்துணர்ந்து அநுபவிக்க வழி வகுக்கின்றது. இவ்வாற்றல் இரண்டினுடைய எல்லையும், குறிக்கோளும், செயல் முறைகளும், தனித்தனியாக விளங்குதல் காணலாம். ஆதலின் இவை இரண்டிற்கும் இடையே, எத்தகைய போட்டியும், பூசலும் எற்பட வாய்ப்பே இல்லை.

அறிவியற்றுறையின் போக்கு, இப்பொழுதெல்லாம் ஒரு பெரும் திருப்பம் அடைந்து, சமயத்தை நோக்கித் தழுவி இணையவே முற்பட்டு வருகின்றது. இதனை ரெனிஃபுலாப் மில்லர் என்னும் மேலைநாட்டு அறிஞர், பின்வருமாறு உருவக முறையில் அழகுற விளக்குகின்ருர்:—

''அறிவுக்கும் (Reason), நம்பிக்கைக்கும் (Faith) —அறிவியலுக்கும் அருளியலுக்கும்—இடையே ஒரு வழக்கீடு ஏற்பட்டு நிலவி வந்தது. அறிவு வாதியாக அமைய, நம்பிக்கையே பிரதிவாதியாக இருந்தது. அறிவுநலனும் பரந்த மனப்பான்மையும்கொண்ட, ஆண் பெண் இருபாலாரும் அடங்கிய ஒரு நடுவுநிலைக் குழுவினர், அதனை ஆராய்ந்தனர். மில்லிக்கன், எட்டிங்டன், ஜீன்ஸ், ஒயிட்ஹெட், ஹால்டேன் போன்ற பேரறிஞர்கள் சான்றுரை கூறினர். அச்சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, பிரதிவாதியாகிய நம்பிக்கையின் மீது கொணரப் பெற்ற வழக்கு, தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆனல் வாதியாகிய அறிவுதான், 'புரட்சிகரமான பிற்போக்கு மனப்பான்மை கொண்டுள்ள உண்மையான குற்றவாளி' என்ற ஐயறவு நேர்ந்தது. ஆயினும், தன் குற்றத்தை யுணர்ந்து கொண்டு, மெய்யாகவே திருந்திவிடக்கூடிய நிலையில் மாறி வருவதனல், அறிவு ஆகிய புதிய பிரதிவாதியின்மீது, அக்குற்றம் வலியுறுத்தப்படாமல், பரிவு காட்டப்பெறுகின்றது''

என அவர் ''அகிலத்தை அசைவித்த அருளாளர்கள்'' (The Saints that Moved the World) என்னும் நூலிற் குறிப்பிட்டிருக்கின்ருர்.

—ஆசிரியர்.

கந்தபுராணக் காப்பிய நலம்

"திருக்குறள்மணி" திரு. க. த. திருநாவுக்கரசு, M.A., M.Litt.,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை—2.

(முற்றொடர்ச்சி)

கச்சியப்ப சிவசாரியார் :

கச்சியப்ப சிவாசாரியருக்கு முன்னர், கந்தன் கதையைக் காப்பிய வடிவில் தமிழில் யாரும் பாடியதாகத் தெரியவில்லை. காஞ்சி மாநகரில், முருகப்பெருமானுடைய திருக்கோயிலில்-குமரகோட்டத்தில் தொண்டாற்றிய தூயவர் உள்ளம், இத் திருப்பணியில் ஈடுபட்டதைக் காணுகின்றோம். வடமொழியில் உள்ள கந்தபுராணம் ஆறு பெரும் பகுதிகளாக உள்ளன. அவற்றுள் ஐந்தாவது பகுதி சங்கர சங்கிதை என்பதாகும். அதனுள் சிறப்புற்று விளங்குவது சிவரகசிய காண்டமாம். அச்சிவ ரகசிய காண்டம், சம்பவ காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம், உபதேச காண்டம் எனும் ஏழு காண்டங்களைக் கொண்டதாகும். இந்த ஏழு காண்டங்களுள், முதல் ஆறு காண்டங்களை மட்டும் கச்சியப்ப சிவாசாரியர் தமிழில் தந்துள்ளார். இதனை,

''காந்தமாகிய பெருங் கடலுள் கந்தவேள்
போந்திடு நிமித்தமும் புனிதன் கண்ணிடை
ஏந்தல்வந் தவுணர்கள் யாரு மவ்வழி
மாய்ந்திட அடர்த்ததும் மற்றுங் கூறுகேன்''

—கந்த. 1 : 1 : 14

எனக் கச்சியப்ப சிவாசாரியரே அறிவிக்கின்றார்.

மாணவர்கள் :

ஆசிரியர் தொடங்கிய பணியை, அவருடைய மாணவர் இருவர் முழு நிறைவுடைய தாக்கியுள்ளனர். சிவரகசிய காண்டத்தின், ஏழாவது பகுதியாகிய உபதேச காண்டத்தைக் கச்சியப்பரின் சீடரான ஞானவரோதயர் என்பார் 85 படலங்களில், 2602 செய்யுள்களால் பாடியுள்ளார். தம் ஆசிரியர்பெருமானை, அவர், ''கருதரிய காஞ்சிவளர் கச்சியப்ப கற்பகத் தரு'' என்று போற்றிப் பாடியுள்ளார். இவ்வடியின் அமைதியை நோக்குகின்றபொழுது, உபதேசகாண்டம் இயற்றப்பட்ட காலத்தில், கச்சியப்பர் வாழ்ந்திருந்தமை புலனாகின்றது. அவருடைய மற்றொரு மாணவர், கோனேரியப்பர் என்பவராவர். அவரும், உபதேச காண்டத்தைத் தமிழாக்கம் செய்துள்ளார். கச்சியப்பரின் அரும்பெருஞ் சிறப்பினை,

போதமுறு சூதமுனி புகன்ற காந்தப்
புகழ்க்கடலிற் படிந்ததன்கண் பொருள தான
மேதகுவண் புனலருந்தி வைய முய்ய
வெய்யதுயர்ப் பிறவியெனும் வெம்மைதீரத்
தாதவிழ்பூம் பொழிற்காஞ்சிக் குவட்டி லேறிச்
சலதியமு தினைநிகர்செந்தமிழ தான
காதன்மழை பொழிந்தவருட் கொண்ட லான
கச்சியப்பன் இருபாதம் உச்சி வைப்பாம்

என்று சம்பந்த சரணாலய சுவாமிகள் எடுத்துரைக்கின்றார். கச்சியப்பர் தமிழ் நூல்களோடு வேதம், உபநிடதம், ஆகமம், தாந்திரிகநூல் நூல்கள் போன்ற வடமொழித் தத்துவ நூல்களையும், மடைநூல், படைநூல், இசைநூல், நாடகநூல், மருத்துவநூல், மதன நூல், பொருள்நூல் முதலிய நூல்களையும் கலைகளையும் கற்றுத் துறைபோகிய அறிஞராகவும் அறவோராகவும் கவிஞராகவும் காட்சி தருகின்றார்.

திகடசக்கரம் :

இவருடைய விநாயகர் காப்புச் செய்யுள் ''திகட சக்கரச் செம்முக மைந்துளான்'' எனத் தொடங்குகிறது. நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டபொழுது, 'திகழ் தசக்கரம்' என இரு சொற்களும் புணரும்பொழுது (நிலைமொழி ஈற்று ழகரம், வருமொழியின் முதல்எழுத்தான தகரத்தோடு சேரும்பொழுது), திகடசக்கரம் எனத் திரிவதற்கு இலக்கணத்தில் இடம் கிடையாது என்று ஒரு புலவர் மறுத்தாராம். மறுநாள் முருகனே, சோழநாட்டுப் புலவர் வடிவில் வந்து, வீரசோழியம் எனும் இலக்கண நூலில் (சந்திப்படலம் 18-ஆம் செய்யுளில் ''திகடசம்' எனப் புணர்கின்ற) இத்தகைய புணர்ச்சிக்கு விதி இருப்பதைக் காட்டி மறைந்தார் என்னும் கதை வழங்குகிறது. இக்கதை, கச்சியப்பரின் புலமை தெய்விகத் தன்மை வாய்ந்ததுஎன்பதை அறிவிப்பதாகும். திருஞானசம்பந்தர் தேவாரத்திலேயே இத்தகைய புணர்ச்சிகள் இடம் பெற்றிருப்பதை இக்கால மொழியியல் அறிஞர் காட்டுவர்.

ஆகம தாந்திரிகப் பயிற்சி :

கச்சியப்பர் ஆகமங்களிலும் தாந்திரிக நூல்களிலும் பயிற்சியுடையவர் என்பதை அவருடைய நூலினுள்ளே இலைமறை காய்போலப் பொதிந்துள்ள கருத்துகளாலும், தொடர்களாலும் அறியலாம்.

அந்தமில் ஆகமத்தின் அரும்பதம் மூன்றும் கூறப்
புந்தியது ஒடுங்கும் ஞானபோதகம் போதியென்றார்
—1.3.10

சொன்ம றைத்தொகை யாகமம் முதலிய துதிப்ப
—1 : 10 : 2

செய்ய வாகமம் பற்பல புரிந்ததிற் சிலர்கள்
உய்யு மாறருள் செய்தனன்
—1 : 16 : 7

என்பன போன்ற குறிப்புகளால், அவருக்கு இருந்த ஆகம ஈடுபாட்டை உணர முடிகின்றது.

சைவத் தந்திர விதியுளி நாடியே தாதை
எவ்வெக் காலமும் நிலையதோர் உருவுசெய விட்டான்
—1 : 24 : 67

தந்திர நெறிகளும் தவறில் பான்மையும்
மந்திர முறைகளும் மற்று முள்ளவும்
—2 : 6 : 23

வேதம் யாவையும் தந்திரப் பான்மையும் வேறா
ஓத நின்றிடு கலைகளும் அவ்வற்று உணர்வும்
போதம் யாவையும் குமரவேள் பொருவிலா உருவம்
—3 : 12 : 132

எந்தையுமை தேர்ந்திட இயம்பிய குமார
தந்திர நெறிப்படி தவாதறு முகற்கு
முந்திய குடங்கர்முதல் மூவகை இடத்தும்
புந்திமகிழ் பூசனை புரிந்தனர் பரிந்தே
—4 : 16 : 24

சுத்த வாதுளம் முதலிய தந்திரத் தொகுதி
உய்த்துணர்ந்திடும் நீரரே ஒருசிறிது உணர்வர்
—3 : 21 : 128

என்னும் பாடற்பகுதிகள், தாந்திரிக நெறியின் நோக்கையும் போக்கையும் நன்குணர்ந்தவர் இந்நூலாசிரியர் என்பதைத் தெரிவிக்கின்றன. இவையல்லாமல் உபநிடதத்திலும் கச்சியப்பர் வல்லவர் என்பதை,

தூய வீடுபேறு அருளுவது உபநிடத் துணிவாம்
வாய்மை யாவது புகலுவன் கேளென வகுப்பான்
—3 : 12 : 126

என்பதனால் அறியலாம். இத்தகைய பெரும் புலவர், தமிழ்ப்பற்றும், நாட்டுப்பற்றும் உடையவராக விளங்கினார்.

தமிழுணர்வு :

முருகன் தமிழ்ச் சங்கத்தில் தலைவனாக விளங்கிய கதையை, ''சங்கத் தவர்க்குள் தலை யாம் தமிழ்ப்புலவன்'' (4:12:446) எனக் குறிப்பிடுவதோடு அமையாது, முருகனே உருத்திர சன்மர் எனும் புலவராக வந்து, இறையனார் களவியலுக்கு நக்கீரர் உரையைக் கேட்டு மகிழ்ந்தான் என்னும் கருத்தமைய,

திருத்தமிழ் மதுரைதன்னிற்
சிவன்பொருள் நிறுக்கு மாற்றால்
உருத்திர சருமனாகி உற்றிடு நிமலன்
—4 : 13 : 231

எனவும் பாடியுள்ளார். தமிழ் வளர்த்த அகத்திய முனிவரை, ''சந்த நூல் தமிழ்த் தாபதம்'' (2:23:13), ''மெய்த் தமிழ் முனிவன்'' (2:24 ''வண்டமிழ் முனிவன்'' (2:26:4), ''தேக்கு தமிழ்தேர் வள்ளல்'' (2:27:45), ''முத்தண் தமிழ்தேர் முனி'' (2:27:53), ''அஃதுணர்ந் தான் தமிழ்நர் கோமான்'' (2:28:3), ''தமிழ் தேர் காட்சித் திருமுனி'' (4:2:22) எனப் பல வாறாகப் போற்றிப் பாடியுள்ளார். இவற்றாலும் 'அகத்தியன் முருகனிடம் பிரணவத்தின் பொருளைக் கற்றுத் தென்னாட்டிற்கு வந்தான்' எனக் கூறுவதாலும் அக்காலத்தில் இத்தகைய மரபு ஒன்று தமிழ்நாட்டில் நன்கு உருவாகி இருந்தமை தெரிகின்றது. தமிழகத்தைத் 'தீந்தமிழின் வைப்பான தெக்கிண தேயம்' (2:30:2) என அவர் பாடி இருப்பதும், அக்காலத் தமிழறிஞரின் மனப்போக்கினைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

ஆசிரியரின் காலம் :

கச்சியப்பரின் காலம், மேற்கண்ட கதைக் குறிப்பிலிருந்து, வீரசோழியம் எனும் இலக்கணத்தின் காலத்திற்கு (கி. பி. பதினோராம் நூற்றாண்டிற்கு) ம் பிற்பட்டது என்பதுபோதருகின்றது. மற்றும், மெய்கண்டாரின் சிவஞான போதத்தின்•கருத்துகளும் தொடர்களும், கச்சியப்பரின் பாடல்களின் இடையே களிநடம்புரிகின்றன. எனவே, மெய்கண்டாரின் காலமான கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிற்கு இவர் பிற்பட்டவராதல் வேண்டும். இவருடைய மாணவரான ஞானவரோதயரைக் காளமேகப் புலவர் பாராட்டிப் பாடியுள்ளார். காளமேகத்தின் காலம் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப் பகுதியாகும். ஞானவரோதயரே, 'வயலூரில் அருள்பெற்ற எந்தை' என்று அருணகிரிநாதரைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். அருணகிரியார், முருகனைப் போற்றும் பொழுது,

''மருவு புலவனார் கவிக்குளே சிறு
வழுவ தறைமகா சபைக்கு ளேகியே
வகைய பெயரதா இலக்கணா விதி மொழிவோனே''
—திருப். 525

''முற்பட்ட இலக்கண நூலிடை
தப்புற்ற கவிக்கெனவே அவை
முற்பட்டு புதுத்துறை மாறிய புலவோனே''
—திருப். 793

எனவும் கந்தபுராண அரங்கேற்றக் கதை நிகழ்ச்சியைச் சுட்டுகிறார். இதனால், அருணகிரிநாதரின் காலத்திற்கு (பதினைந்தாம் நூற்றாண்டிற்கு) முந்தியவர் கச்சியப்பர் என்பது எளிதிற் புலனாகின்றது.

இவை யாவற்றையும் ஒருங்கிணைத்து நோக்குகின்றபொழுது, கந்தபுராணத்தை இயற்றிய கச்சியப்ப சிவாசாரியார் கி. பி. 1350 முதல் கி. பி. 1420 வரை வாழ்ந்தவராக இருத்தல் கூடுமெனத் தோன்றுகிறது.

அந்தககவி வீரராகவர் :

தமிழ் நாவலர் சரிதையுடையாருள் பேரா சிரியர் கே. எ. நீலகண்ட சாத்திரியாரும், பல்கலைச் செல்வர் தெ பொ. மீனுட்சிசுந்தரனு ரும், கி. பி. பதினேழாம் நூற்ருண்டில் கச்சி யப்பர் வாழ்ந்ததாகக் கூறுதல் வியப்பூட்டு கிறது. கி. பி. பதினேழாம் நூற்ருண்டில் வாழ்ந்தவர் அந்தகக் கவி வீரராகவ முதலியார். அவர் சேயூர் முருகன் பிள்ளைத் தமிழில்,

''பொருஞ் சூரனைப் பெருங்கதை முதற்கந்தப்
புராணக் கடற் காணலாம்
அயில்வளச் செய்கையின் மயில்வளக் கந்தனுடன்
அம்புலி ஆட வாவே!

—அம்பு. பரு. 60

எனக் கந்தபுராணக் கடலைக் காண, அம்புலியை அழைக்கின்ருர். அக்காலத்தில், கந்தபுராணம் பெற்றிருந்த சிறப்பினை, இப்பாடற் பகுதி புலப்படுத்துகின்றது. அதே நூற்ருண்டில், தருமபுர ஆதீனத்தின் தவத்திரு சம்பந்த சரணுலய சுவாமிகள், கந்த புராணத்தினைச் சிறிய வடிவில் 'கந்தபுராணச் சுருக்கம்' என் னும் நூலாக 1048 செய்யுள்களில் பாடியுள் ளார். அவர் பாயிரத்துள் 'கச்சியப்பன் இரு பாதம் உச்சிவைப்பாம்' எனக் காப்புச் செய்யுள் பாடியுள்ளதை, முன்னரே நாம் கண்டோம்.

தொண்டை மண்டல சதகம் :

தொண்டை நாட்டில் தோன்றிய கச்சியப் பரைத், தொண்டை மண்டல சதகம் இயற்றிய படிக்காசுப் புலவர் மறவாமல் போற்றிப் பாடி யுள்ளார்.

அந்தப்புரமும் அறுநான்கு கோட்டத்தாரு மொன்
ருய்க்
கந்த புராணம்பதினு யிரம் சொன்ன கச்சியப்பர்
தந்தப் பல்லக்குச் சிவிகையும் தாங்கியச் சந்நிதிக்கே
வந்தப் புராணம் அரங்கேற்றினுர் தொண்டை
மண்டலமே!

—தொ. ச. 36

இம் முப்பெரும் புலவர்களுடைய பாடல் களிலிருந்து, தங்கள் காலத்திற்கு அண்மை யிலோ, சமகாலத்திலோ வாழ்ந்த புலவராகக் கருதிக் கச்சியப்பரை அவர்கள் போற்றியதாகத் தெரியவில்லை. எனவே, கந்தபுராண ஆசிரியர் இவர்களுக்குக் காலத்தால் முற்பட்டவர் என் பது போதருகின்றது. இதனுல், கச்சியப்பர் பதினேழாம் நூற்ருண்டினர் எனும் கருத்து பொருத்தமற்றது என்பது புலனுகின்றது. கி.பி. பதினன்காம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்பதே சாலவும் பொருந்தும்.



கோடம்பாக்கம் அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் ''தேவி தோத்திரத் திரட்டு'' பாடற்போட்டி நிகழ்ச்சியில், ஆணையர் திரு. M. K. பாலசுப்பிரமணியம், I.A.S. அவர்கள், முதற்பரிசு பெற்ற சிறுமிக்குப் பரிசு வழங்குதல். *(11-11-'77)*

பச்சையப்ப வள்ளலின் சமய அறப்பணிகள்

திரு. நல். முருகேச முதலியார், பி. ஏ.

தொண்டை நன்னாட்டில், காஞ்சிபுரம் விசுவநாத முதலியார் மகனாகப் பிறந்து, பெரிய பாளையத்தில் வளர்ந்து, துவிபாஷி பௌனி நாராயணப் பிள்ளையின் ஆதரவில், சென்னையில் கல்விகற்று, பின்னர்க் கிழக்கு இந்தியக் கம்பனியின் கீழும், தஞ்சாவூர் இராஜாவின் கீழும் துவிபாஷியும், ஆலோசகருமாய், திறமையுடன் பணியாற்றிப் பெரும்புகழும், பெரு நிதியும் திரட்டி வள்ளலாய் விளங்கிய பச்சையப்ப முதலியார் (1754-1794), இப்பூவுலகில் 40 ஆண்டுகளே வாழ்ந்திருந்தும், தம் செல்வத்தை அறப்பணிகளுக்கே அர்ப்பணித்துச் சென்றார்.

வள்ளல் பச்சையப்பர் செய்த அறப் பணிகள் கணக்கற்றவை. அவைகளில் ஏழை எளியோர்கட்குக் கல்வி பயில்விக்க நியமிக்கப் பட்டவை பல. மற்றும், பல திருக்கோயில் திருமடம் முதலிய சமயக் கட்டளைகளும் ஆகும். கடமையில் ஓயாது உழைத்து வந்தவராயினும், தினமும் மாலையில் தமிழ்ப் புலவர்களுடன் சிறிது நேரம் அளவளாவித் தேவார திருவாசகங்கள் ஓதவைத்து, ஆன்ம லாபத்தைத் தேடியவராவர். ''அறத்தால் வருவது ஒன்றே இன்பம்'' என்பதை முற்றும் உணர்ந்தவர். இவற்றில் பச்சையப்பர்க்கு உறுதுணையாக நின்றவர், தெய்வ சிந்தனையுடையவரும், அவர் தம் தமக்கையும், மாமியாருமான சுப்பம்மாள் ஆவார். சிறு வயதில் கணவன் இறந்தபின், மகனைக் காப்பாற்றி முன்னேற்றிய அவர்தம் தாயார் செய்த தவப்பயனும் ஆகும். எனவே பச்சையப்பரின் அறக்கட்டளைகள், சுமார் 135 ஆண்டுகள் ஆகியும், இன்றும் நன்கினிது நடைபெற்று வருகின்றன.

பச்சையப்பர், செங்கல்பட்டு மாவட்டத்தில் திரு. நிக்கோலஸ் துரையிடம் தண்டல் அதிகாரியாக இருந்தபோது, அவருக்கு வயது 20 தான். தமிழ், ஆங்கிலம், கணிதம், வியாபார முறைகள், சட்டம் முதலியவைகளில் தேர்ச்சி பெற்றிருந்து திறம்பட விளங்கினார். கும்பெனியார், கர்நாடக நவாபு, தஞ்சாவூர் இராஜா இவர்கள் எல்லாரும் அவரது சேவையை நாடினார்கள். அவ்வமயம் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலில் கல்யாண மண்டபம் ஒன்று கட்டுவித்து, படிமங்கள் பிரதிட்டை செய்து கும்பாபிஷேகம் செய்து வைத்தார். பிறகு சல்லிவன் துரையால், தஞ்சை திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பச்சையப்பர் அவருக்கு உதவி அலுவலராக நியமிக்கப்பட்டார். கர்நாடக நவாபும், தஞ்சை இராஜாவும் கம்பெனியாருக்குக் கப்பம் கட்டமுடியாத சமயத்தில், பச்சையப்பர் வெகுதிறமையுடன் அந்த இன்னல்களைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தார். பின் சர். ஆர்ச்சிபால்டு காம்பெல் துரை ஆளுநராக வந்தபோது, அவர் பச்சையப்பரைத் தஞ்சை வருவாய்த் தொகைகளைச் சேகரிக்க, மாவட்ட அதிகாரி வில்லியம் பெட்ரி என்பவருக்கு உதவியாக அனுப்பிவைத்தார்.

இந்தச் சமயத்தில் பச்சையப்பருக்கு சிதம்பரம், திருவிடைமருதூர், திருவையாறு, குடந்தை முதலிய தலங்களில் ஈடுபாடு மிகுந்தது. 1791-ம் ஆண்டில், தில்லைச் சபாநாயகருக்கு ஏராளமான கைங்கர்யங்களைச் செய்தார். மூலத்தானத்தை அழகுபடுத்தியது மட்டுமின்றி, கிழக்குக் கோபுரத்தைக் கட்டுவிக்கச் செய்தார். இது அரசர்களால் செய்யத்தக்க மகத்தான தர்மம். இன்றும் கிழக்குக் கோபுரத்தில் பச்சையப்பர், தமக்கை சுப்பம்மாள் படிமங்கள் சுவரில் இருப்பதைக் காணலாம். பச்சையப்பர் சபாநாயகர் கோயிலுக்குப் பல வெள்ளிச் சாமான்களைச் செய்து கொடுத்தார். சபாநாயகருக்கு ஒரு அழகான தேரும் செய்து அர்ப்பணித்தார். தஞ்சை அரசர் தாம் செய்து வைக்க நினைத்திருந்ததைக் கைவிட்டு, நண்பர் பச்சையப்பரது அபரிமிதமான ஈடுபாட்டுக்கு வியந்து, அந்தப் பணியைப் பச்சையப்பருக்கு விட்டுக் கொடுத்தார் என்று கூறப்படுகிறது. தேர்நிலையையும், பச்சையப்பர் கட்டிக் கொடுத்தார். பின் தனது உயில் சாசனத்தில் ஆனித் திருமஞ்சனத் தேர் விழாவுக்கு, வருடாந்தரக் கட்டளை

யாகச் சுமார் 800 வராகன்கள் எழுதி வைத்தார். கும்பகோணத்தில் ஒரு குளம் வெட்டினார்.

தனது உயில் சாசனத்தில் காஞ்சிபுரம், சென்னை, சிதம்பரம், சீர்காழி, திருவிடைமருதூர், குடந்தை திருவையாறு, திருவாரூர் திருவானைக்கா, ஸ்ரீரங்கம், தஞ்சை, இராமேசுவரம் திருவொற்றியூர், திருவண்ணாமலை, திருவல்லிக்கேணி, காசி முதலிய பல தலங்களில் கட்டளைகளுக்காகப் பணம் ஒதுக்கி வைத்தார். இராமேசுவரத்தில் சத்திரம் கட்டினதுபோல், காசியிலும் கட்ட முயற்சித்தார். கடைசியில் திருவையாற்றில் சிலநாள் வதிந்து சிவலோகப் பிராப்தி அடைந்தார்.

பச்சையப்ப வள்ளலின் பலவேறு அறப்பணிகளை விடுத்து, இங்கு அவர் அமைத்த திருக்கோயில் கட்டளைகளை மட்டுமே, கீழே குறிப்பிடுவாம்.

சிதம்பரம் சபாநாயகர் ஆனி உற்சவத்தில் [illegible]பாத்திராதானம், மார்கழித் திருமஞ்சனம் சுமார் ரூபாய் 2500 விகிதம். தில்லைக் கோவிந்தராஜருக்கு அரிசிக் கட்டளை ரூ. 290. திருமுல்லைவாயில் ரூ. 25 மாதாந்தரம். ஆவுடையார் கோயில், மதுரை, இராமேசுவரம், ஸ்ரீரங்கம், தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருவையாறு, சீர்காழி, திருவிடைமருதூர், காஞ்சி மாதக்கட்டளை ரூ. 20 முதல் 90 வரை. சிதம்பரம் ரூ. 245 மாதாந்தரம். (தினசரி அன்னதானம்). சென்னை பார்த்தசாரதிசுவாமி ரூ.75, முத்திங்கள் முறை. அழகர்கோயில் சந்தனாபிஷேகம், மதுரை சிவராத்திரி, நவராத்திரிகள் சிறுதொகைகள், குடந்தை சாரங்கபாணிகோயில் ஜேஷ்டாபிஷேகம் ரூ. 500 ஆண்டு. தம்பதி பூஜை, திருவையாறு சரவணதேசிகர்குருபூசை, சென்னை ஆதிபுரீசுவரர், ரங்கநாதர்கோயில்கள் முதலியன.

தில்லைச் சபாநாயகருக்குப் பச்சையப்பர் சமர்ப்பித்த திருவாபரணங்கள், எளிதில் மதிப்பிடத்தக்கதல்ல. அவைகள் இன்றும் அணிவிக்கப்படுகின்றன. மேற்படி கட்டளைகள் பச்சையப்பர் வைத்துச் சென்ற சொத்துக்களின் வருவாயிலிருந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அறப்பெருஞ் செல்வர் பச்சையப்பரைப்போல் நிகராக மற்றொருவரைக் கூறுதல் எளிதன்று. அவர் நிறுவிய நல்லறங்கள் ஓங்குக! அவரைப்போலச் சிறந்த அறப்பெருஞ் செல்வர்கள் பலர், நம் நாட்டில் இனியும் மேன்மேல் தோன்றுக!

***

அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின், நூபுர கங்கை புதிய படிகட்டுகளை ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்., அவர்கள் திறந்து வைத்தல்.

[24-10-1977]

இராமாநுச நூற்றந்தாதி

(முற்றொடர்ச்சி)

அண்ணல் இராமாநுசன்:

நமக்கெல்லாம் தலைவனான திருமால் தானே, இப் பூமியிலுள்ள மனிதர் விலங்கு முதலிய பல பிறவிகளிலும் அவதரித்து, எல்லாருடைய கண்களும் காணும்படி நின்றாலும், அவனை நம்முடைய தலைவன் என்று காணமாட்டாமல் இருந்த இவ்வுலகத்தார் எல்லோரும், இராமாநுசர் இங்கே வந்து தோன்றியருளிய உடனே, பெறுதற்கரிய ஞானம் பெரிதும் கிடைக்கப் பெற்று, நாராயணனாகிய திருமாலுக்கு அடியவர்கள் ஆயினர்.

மண்மிசை யோனிகள் தோறும்
  பிறந்து, எங்கள் மாதவனே
கண்ணுற நிற்கிலும், காணகில்லா
  உலகோர்கள் எல்லாம்,
அண்ணல் இராமாநுசன் வந்து
  தோன்றிய அப்பொழுதே,
நண்ணருஞ் ஞானம் தலைக்கொண்டு
  நாரணர்க்கு ஆயினரே (41)

தீதில் இராமாநுசன்:

திருமகள் கேள்வனான பெரிய பெருமாளே, எல்லா உயிர்களுக்கும் தலைவர் என்று உபதேசித்தருள்பவரும், மிகத் தூய்மை வாய்ந்தவரும், எவ்வகைக் குற்றமும் இல்லாதவருமாகிய இராமாநுசர், அழகிய அணிகலன்கள் தரித்த மகளிரின் முலைத் தடத்தில் தங்கிப் படிகின்ற, ஆசையாகிய சேற்றிலே அழுந்தி, அழிந்து போகின்ற என் ஆருயிரை, இன்று எத்தகைய காரணமும் இன்றி, இயல்பாகப் பொங்கி எழுகின்ற தம் பேரருளின் திறத்தினால், பிறவிக் கடலினின்று எடுத்துக் கரையேற்றி உய்வித்துக் காப்பாற்றி அருளினார்.

ஆயிழையார் கொங்கை தங்கும்
  அக்காதல் அளற்று அழுந்தி,
மாயும்என் ஆவியைவந்து எடுத்தான்
  இன்று; மாமலராள்
நாயகன் எல்லா உயிர்கட்கும்
  நாதன் அரங்கன், என்னும்
தூயவன், தீதில் இராமாநுசன்
  தொல்அருள் சுரந்தே (42)

பெருமை இராமாநுசன்:

இவ்வுலகத்தில் உள்ளவர்களே! நான் உங்களுக்கு ஒரு நன்மையைச் சொல்லுகின்றேன். அறநெறியின்பால் சீற்றம் உடையதாய், கொடுமை மிகுந்ததான கலி என்கிற தீங்கினைத் துரத்தி ஓட்டி, நலஞ்செய்ய வல்ல இராமாநுச ருடைய திருநாமத்தைச் சொல்லுங்கள். அ னனம் சொன்னால் உங்களுக்குப் பக்திப் பெ செல்வமும், ஞானமும் மேன்மேற் பெ அந்தத் திருநாமத்தைச் சொல்லத் தொ போதே, உங்கள் வாயில் அமிழ்த பரவும். மிகப் பெரிய கொடிய பாவ லாம் அடியோடே ஓடிப் போய்விடும்!

சுரக்கும் திருவும் உணர்வும்,
  சொலப்புகில் வாய்அமுதம்
பரக்கும், இருவினை பற்றற
  ஓடும், படியிலுள்ளீர்!
உரைக்கின்றனன் நுமக்கு யான்;
  அறம்சீறும் உறுகலியைத்
துரக்கும் பெருமை இராமாநுசன்
  என்று சொல்லுமினே! (43)

நல்லோர் பரவும் இராமாநுசன்:

மிகவும் விரிந்து பரந்த இவ்வுலகத்தில் உள்ளவர்கள், சொல் நிரம்பிய இயல் இசை நாடகம் என்கின்ற ஒப்பற்ற மூன்று தமிழையும், நான்கு வேதங்களையும், கணக்கில்லாத அற நூல்களையும், மற்றும் எல்லாக் கலைகளையும், நன்கு கற்று ஆராய்ந்து அறிந்தவராகவும், அளவிட்டு அறிய முடியாத அரும்பெரும் குணங்களை உடையவராகவும், நல்ல பெரியவர்களால் துதிக்கப்படுபவராகவும் விளங்குகின்ற, இராமாநுசருடைய திருப்பெயரை, நம்பிக் கற்கின்றாரில்லை. இராமாநுசரின் திருப்பெயரைக் கூறுதலே, நமக்கு எல்லா நலங்களையும் விளைவிக்கும் என்று அறியாதவர்களாய், இவ்வுலக மக்கள், தமக்கு நன்மை தரும் உறுதிப் பொருள் யாது? என்று வீணே வினவிக் கொண்டிருக்கின்றனர்.

சொல்லார் தமிழ்ஒரு மூன்றும்,
  சுருதிகள் நான்கும், எல்லை
இல்லா அறநெறி யாவும்
  தெரிந்தவன்; எண்ணருஞ்சீர்
நல்லார் பரவும் இராமாநுசன்
  திருநாமம் நம்பிக்
கல்லார் அகலிடத்தோர், எதுபேறு
  என்று காமிப்பரே. (44)

செம்மை இராமாநுசன்:

இராமாநுசரே! நும்முடைய திருவடிகளைத் தவிர அடையத் தகுந்த பொருள் (உபேயம்) வேறு ஒன்றும் இல்லை. நும் திருவடிகள் ஆகிய அடையத் தக்க பொருளைத் தருவதற்கு, அத் திருவடிகளைத் தவிர அடையும் நெறி (உபாயம்) பிறிது எதுவும் இல்லை. இந்த உண்மைப் பொருளைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக் கின்ற பெரியோர்களுக்கும், இந்தத் தெளிவு சிறிதும் இல்லாத அடியேனுக்கும், எந்த வகை யான வேறுபாடும் இன்றி, சமமான நிலையி லேயே, நும்மை அறிந்து கொள்ளும்படி காட்டிக் கொடுத்தருளிய, நும்முடைய சிறந்த மேலான பெருந் தகைமைக் குணமானது, உண்மையைச் சொல்வதாயின், எம்முடைய புல்லிய வாயைக் கொண்டு சொற்களாற் சொல்லும் தரமுடைய [illegible]ன்று.

[illegible]பறுஒன்றும் மற்றுஇல்லை நின்சரண்
அன்றி; அப்பேறு அளித்தற்கு
[illegible]ஒன்றும் இல்லை, மற்றுஅச்சரண் அன்றி;
[illegible] என்று இப்பொருளைத்
[illegible]தேறும் அவர்க்கும், எனக்கும் உனைத்தந்த
செம்மை, சொல்லாற்
கூறும் பரம் அன்று; இராமாநுச!
மெய்ம்மை கூறிடிலே. (45)

ஏறும் குணன் இராமாநுசன்:

மனம் சென்றபடி பலவற்றைச் சொல்லிக் கொண்டிருக்கின்ற, அறுவகைப் புறச் சமயங் களும் தலைசாயும்படி, இவ்வுலகத்தில் நம்மாழ் வார் அருளிச் செய்த, தமிழ் வேதத்தைக் கற்று அறிந்தவராகவும்; அறிவில்லாதவனாகிய யானும் தெளியும்படி என் உள்ளத்தில் வந்து தாமே புகுந்தவராகவும்; எல்லாத் திசைகளிலும் பர விய புகழ்மிக்க திருக்குணங்களை உடையவராக வும் இருக்கின்ற இராமாநுசரை, யாம் வணங் கினோம்.

கூறும் சமயங்கள் ஆறும்
குலையக், குவலயத்தே
மாறன் பணித்த மறை
உணர்ந்தோனை, மதியிலியேன்
தேறும்படி என்மனம் புகுந்தோனைத்,
திசை அனைத்தும்
ஏறும் குணனை, இராமாநுசனை
இறைஞ்சினமே. (46)

அறம் செப்பும் இராமாநுசன்:

எல்லோராலும் வணங்கத் தக்க, மேலான சிறந்த தெய்வம் எது என்றால், ஈசன் ஆகிய திருவரங்கநாதனே என்று, இவ்வுலகத்தில் உண்மை அறத்தை விளக்கி, நிலை நிறுவுகின்ற வராக விளங்குகின்ற இராமாநுசர், என்னு டைய போக்குதற்குரிய தீவினைத் திரள்களை யெல்லாம் அடியோடு போக்கி, எல்லாக் காலத் திலும் என் உள்ளத்தினுள்ளே, முழு நிறைவாக, ஒப்புமையில்லாதபடி எழுந்தருளி வீற்றிருக்கின் றார். இங்ஙனம் அவர்தம் அருளைப் பெற்ற எனக்கு, ஒப்பாகக் கூடியவர் ஒருவரும் இல்லை.

இறைஞ்சப் படும்பரன், ஈசன்
அரங்கன் என்று, இவ்வுலகத்து
அறம்செப்பும் அண்ணல் இராமாநுசன்,
என் அருவினையின்
திறம்செற்று, இரவும் பகலும்விடாது,
என்றன் சிந்தையுள்ளே
நிறைந்து, ஒப்புஅற இருந்தான்;
எனக்கு ஆரும் நிகர்இல்லையே! (47)

பெருமை இராமாநுசன்:

பெரியோர்கள் பேசிப் புகழ வேண்டும் படியான, மிகச் சிறந்த பெருமையை உடைய இராமாநுசரே! என்னுடைய ஒப்பற்ற புன்மைத் தன்மைக்கு, நும்முடைய திருவருளின் இடத் தில் தவிர, வேறு எந்த இடத்திலும் ஒதுங்கு வதற்கு இடம் இல்லை. நும்முடைய அந்தச் சிறந்த அருட்டிறனுக்கும், என்போல்வாருடைய அந்தப் புன்மைத் தன்மையே காரணம். ஆக, இவ்வகையால் அடியேனால் நுமக்குப் பயன்; நும்மால் அடியேனுக்குப் பயன் என்பது தெளிந்த முடிவாகிவிட்ட பின்னர், இனியும் நாம் வீணே பிரிந்திருத்தற்குக் காரணம் யாது?

நிகர்இன்றி நின்றஎன் நீசதைக்கும்,
நின்அருளின்கண் அன்றிப்
புகல்ஒன்றும் இல்லை; அருட்கும்
அஃதே புகல்; புன்மையிலோர்
பகரும் பெருமை இராமாநுச!
இனி நாம்பழுதே
அகலும் பொருள்என்? பயன்
இருவோமுக்கும் ஆனபின்னே! (48)

மன்னும் இராமாநுசன்:

தாமரை மலர்களில் உண்டான மகரந்தப் பொடியானது, ஆறுபோலப் பெருகப் பெற்ற வயல்களை உடைய, திருவரங்கத்தில் எழுந்தருளி யிருக்கின்ற பெரிய பெருமாளின் திருவடிகளைத் தலைமேல் தரித்துக் கொண்டு, தாம் அத்திருவடி களிலேயே ஈடுபட்டவராக விளங்குகின்ற இரா மாநுசர், இவ்வுலகில் தோன்றியருளியதனால், நிலைநிறுவப் பெற்ற அறநெறியானது, வலிவும் பொலிவும் பெற்றது. பொய்யே நிறைந்து கிடக்கின்ற அறுவகைச் சமயங்களும், அடி யோடு அழிந்தொழிந்தன. கொடிய கலியுகமும் இறந்தொழிந்து போயிற்று.

ஆனது செம்மை அறநெறி;
பொய்ம்மை அறுசமயம்
போனது; பொன்றி இறந்தது
வெங்கலி; பூங்கமலத்
தேன்நதி பாய்வயல் தென்னரங்கன்
கழல் சென்னிவைத்துத்,
தான்அதில் மன்னும் இராமாநுசன்
இத்தலத்து உதித்தே! (49)

எதித்தலை நாதன் இராமாநுசன்:

உலகமெங்கும் பரவிய சிறந்த மங்கல குணங்களை உடையவரும், துறவிகளுக்கெல்லாம் மிகச் சிறந்த தலைவரும், ஆகிய இராமாநுசரின் திருவடி இணைகள், உயர்ந்த தகுதி மிக்க அன்பர்களின் திருவுள்ளங்களில் ஒளி வீசுபவை;

மாற்றுருடைய நெஞ்சம் அஞ்சி வருந்தும்படி, மாறி மாறி வைத்து நடக்கும் அழகுடையவை; மிகுதியான பெரிய குற்றங்களெல்லாம் பதிந்து கிடக்கின்ற, என்னுடைய புன்மை மிகுந்த பாடல் வகைகளையும் துதியாக ஏற்றுப் பெற்றுக் கொண்டவை.

உதிப்பன உத்தமர் சிந்தையுள்;
ஒன்னலர் நெஞ்சம் அஞ்சிக்
கொதித்திட மாறி நடப்பன;
கொள்ளை வன்குற்றமெல்லாம்
பதித்தஎன் புன்கவிப் பாஇனம்
பூண்டன; பாவுதொல்சீர்
எதித்தலை நாதன் இராமாநுசன்
தன் இணையடியே! (50)

அடியவர்க்கு அமுதம் இராமாநுசன்:

முற்காலத்தில் தன் திருவடிகளைப் பற்றிக் கொண்டு, அதனால் பெருமிதமுற்றுப் பொங்கி எழுந்த பஞ்ச பாண்டவர்களுக்காகப், பாரதப் போரில் துரியோதனன் முதலியவர்கள் அழியும் வண்ணம் குதிரை பூட்டிய பெரிய தேரைச் செலுத்திய கண்ணபிரானை, முழுவதும் உணர்ந்து தெளிந்து கொண்ட அடியவர்களுக்கு, அமுதம் போன்ற சிறப்பு மிக்க இராமாநுசர், இவ்வுலகத்தில் வந்து தோன்றியருளியது, அடியேனை ஆட்கொண்டு அருளுவதன் பொருட்டேயாகும். ஆராய்ந்து பார்க்குமளவில், இராமாநுசரின் திருஅவதாரத்திற்கு, இது தவிர வேறு ஒரு காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

அடியைத் தொடர்ந்துஎழும் ஐவர்கட்காய்,
அன்று பாரதப்போர்
முடியப் பரிநெடுந் தேர்விடும்
கோனை, முழுதுணர்ந்த
அடியர்க்கு அமுதம், இராமாநுசன்
என்னை ஆளவந்து,இப்
படியிற் பிறந்தது; மற்றில்லை
காரணம் பார்த்திடிலே! (51)

அற்புதஞ் செய் இராமாநுசன்:

இராமாநுசர், வேத நெறிக்குப் புறம்பான, அறுவகைச் சமயங்களும் பதைக்கும் படியாகத் திருக்கண் செலுத்தினர். இந்நிலவுலகம் முழுவதையும் தமது புகழாகிய போர்வையினால், போர்த்து மறைத்து விட்டார். அற்பனாகிய அடியேனின் பக்கல், தாமாகவே காரணம் ஏதும் கருதாது எளிமையாக வந்து புகுந்து, எனது கொடிய பெரிய பாவங்களையெல்லாம் போக்கியருளினர். திருவரங்கநாதனுடைய அழகிய திருவடிகளிற் கொண்டுபோய், என்னைச் சேர்ப்பித்தருளினர். ஆக இந்தச் செயல்களெல்லாம், என் பொருட்டு எம் தலைவரான இராமாநுசர் செய்தருளிய, வியக்கத் தக்க செயல்களாகும்.

பார்த்தான் அறுசமயங்கள் பதைப்ப;
இப்பார் முழுதும்
போர்த்தான் புகழ்கொண்டு; புன்மையினேன்
இடைத் தான்புகுந்து
தீர்த்தான் இருவினை; தீர்த்து அரங்கன்
செய்ய தாள்இணையோடு
ஆர்த்தான்; இவைஎம் இராமாநுசன்
செய்யும் அற்புதமே! (52)

கற்பகம் இராமாநுசன்:

என்னை ஆட்கொள்வதற்காக வந்து தோன்றியவரும், வள்ளன்மை வாய்ந்தவரும், ஞானிகள் விரும்பத் தகுந்த சீல குணத்தை உடையவரும், வியக்கத் தக்க பெருஞ் செயல்களை உடையவரும் ஆகிய இராமாநுசர்; நினைக்கவும் இயலாதபடி எண்ணிறந்து நிறைந்திருக்கின்ற உயிர்க் கூட்டங்களும், அவற்றிற்கு உறைவிடமான அளவிறந்த எல்லா உலகங்களும், எம்பெருமானுக்கே உரிய உடைமைப் பொருள்களாகும் என்கின்ற உண்மையயான நல்ல சிறந்த கருத்தை, இவ்வுலகத்தில் வந்து அவதரித்து, அனைவருக்கும் தெளிவுறுத்தி நிலைநிறுத்தியருளினர்.

அற்புதன் செம்மை இராமாநுசன்;
என்னை ஆளவந்த
கற்பகம்; கற்றவர் காமுறு
சீலன்; கருதரிய
பற்பல் உயிர்களும், பல்உலகு
யாவும் பரனது,என்னும்
நற்பொருள் தன்னை, இந்நானிலத்தே
வந்து நாட்டினனே!

சீலத்து இராமாநுசன்:

இவ்வுலகத்தில் மேன்மேலும் திரளாகச் சேர்த்துக் கொண்ட, சிறந்த சீல குணங்களை உடைய இராமாநுசரின், இயல்புகளை நோக்கி, நிலைநிறுத்தப் பெற்றிருந்த இழிந்த புறச் சமயங்களெல்லாம், அழிந்தொழிந்தன. திருமாலைப் புகழ்ந்து துதித்த வேதங்கள், இனி நமக்கு ஒரு குறையும் இல்லை என்று பெருமிதம் கொண்டன ; அழகிய திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியில் தோன்றியருளிய, நம்மாழ்வார் அருளிச் செய்த, ஒரு குறையும் அற்ற சிறந்த தமிழ் வேதமான திருவாய்மொழி என்னும் திவ்வியப்பிரபந்தம், பெருமையும் வாழ்வும் பெற்றது!

நாட்டிய நீசச் சமயங்கள்
மாண்டன; நாரணனைக்
காட்டிய வேதம் களிப்புற்றது ;
தென்குருகை வள்ளல்,
வாட்டம் இலாவண் தமிழ் மறை
வாழ்ந்தது; மண்ணுலகில்
ஈட்டிய சீலத்து இராமாநுசன்
தன் இயல்பு கண்டே! (54)

தொண்டர் குலாவும் இராமாநுசன்:

அளவு இல்லாத இசை நலங்களை உடைய வேதங்கள், இவ்வுலகில் ஓங்கி வளரும்படி செய்தருளியவரும், மிகப் பெரிய வள்ளன்மை வாய்ந்தவரும்; காண்பவர்களின் நெஞ்சைக் கவர்கின்ற, மணம் மிக்க சோலைகள் சூழ்ந்த, தென்னரங்கத்திற்குத் தலைவரான பெரிய பெருமாளுக்கு அடிமைப்பட்ட, அன்பர்களால் புகழ்ந்து கொண்டாடப்படுவரும், ஆகிய இராமாநுசரை அடைந்து பணிந்து ஒழுகுகின்ற குலம், எங்களுக்குத் தலைமையான சிறந்த குலமாகும்.

கண்டவர் சிந்தை கவரும்
கடிபொழில் தென்னரங்கன்
தொண்டர் குலாவும் இராமாநுசனைத்,
தொகை இரந்த
பண்தரு வேதங்கள் பார்மேல்
நிலவிடப் பார்த்தருளும்
கொண்டலை, மேவித் தொழும்
குடியாம், எங்கள் கோக்குலமே! (55)

கீர்த்தி இராமாநுசன்:

அரசர் குலத்தில் தோன்றியவர்களை, இருபத்தொரு தலைமுறையளவும், கூர்மை பொருந்திய ஒரு மழுவால், பரசுராம அவதாரத்தில் அழித்தொழித்த திருமாலைத், துதித்துப் போற்றுகின்ற புனிதம் மிக்கவரும்; உலகமெங்கும் பரவிய சிறந்த புகழை உடையவருமான, இராமாநுசரை அடைக்கலம் புகுந்த பின்பு, [illegible]னுடைய வாக்கானது இனி உள்ள கால[illegible]லாம் வேறு எந்தச் செய்தியையும் கூருது; [illegible] மனமும் அவ்வாறே வேறு எதனையும் [illegible]து!

[illegible]கோக்குல மன்னரை மூவெழுகால்
ஒருகூர் மழுவாற்
போக்கிய, தேவனைப் போற்றும்
புனிதன், புவனம்எங்கும்
ஆக்கிய கீர்த்தி இராமாநுசனை
அடைந்தபின், என்
வாக்கு உரையாது; என்மனம்
நினையாது;இனி மற்ருென்றையே. (56)

நற்றவர் போற்றும் இராமாநுசன்:

வேறு பயன்களைக் கருதாமல், அழகிய மணவாளனுடைய திருவடித் தாமரைகளுக்கு அடிமைப் பட்டவர்களையே, தமக்குரிய உயிர் உறவினர்களாகத் திருவுள்ளம் பற்றுகின்ற, தலையாய உத்தமராகவும், பிரபத்தி நெறியில் நிற்கும் பக்தர்களால் புகழப் பெற்றவராகவும், இருக்கின்ற இராமாநுசரை, இந்த உலகத்தில் யான் அடையப் பெற்றேன்; அடையப் பெற்ற பின்பு, வேறு பொருள்களை விரும்புதல் முதலிய எவ்வகையான அறியாமைச் செயல்களையும், யான் அறிந்ததில்லை.

மற்ருெரு பேறும் மதியாது,
அரங்கன் மலரடிக்குஆள்
உற்றவரே, தனக்கு உற்றவராக்
கொள்ளும் உத்தமனை,
நற்றவர் போற்றும் இராமாநுசனை,
இந் நானிலத்தே
பெற்றனன்; பெற்றபின் மற்று
அறியேன் ஒருபேதைமையே. (57)

வாதில் வென்றவன் இராமாநுசன்:

வேதத்தை மேற்கோளாகக் கொள்ளாத அறிவிலிகள், 'நாங்கள் கூறுகின்ற இதுவேதான் வேதத்தின் பொருள்' என்று கூறிக்கொண்டு, 'பரப்பிரம்மமானது எல்லாவற்றினும் மேலானது' என்று சொல்லி, 'அந்தப் பரப்பிரம்மம் தவிர மற்றைய எல்லா உயிர்த் திரள்களும் அந்தப் பிரமமே யாகும்' என்றும்; 'உயிர்த் திரள்கள் உடலை விட்ட பிறகு எல்லாவற்றிற்கும் மூலகாரணனுன பிரம்மமாகிய இறைவனுடன் ஒன்று சேர்ந்து விடுகின்றன' என்றும் கூறி வருகின்ற, அந்தக் குழப்ப மயக்க உரைகளை யெல்லாம், மெய்யுணர்வுக் கடலாகிய எங்கள் இராமாநுசர், தம் வாதத்தினுல் அழித்து வெற்றி கொண்டார்.

பேதையர் வேதப்பொருள் இது
என்று உன்னிப், பிரமம்நன்றுஎன்று
ஓதி, மற்று எல்லா உயிரும்
அஃதுஎன்று, உயிர்கள்மெய்விட்டு
ஆதிப் பிராைேடு ஒன்ரும்;என்று
சொல்லும் அவ்அல்லல்எல்லாம்,
வாதில் வென்றுன் எம்இராமாநுசன்;
மெய்ம் மதிக்கடலே! (58)

இருளைத் துரந்த இராமாநுசன்:

நான்கு பெருங் கடல்களையும் எல்லையாக உடைய, இவ்வுலகத்தின் எல்லா இடங்களிலும், கலி புருடனுகிய பேரிருளே நிறைந்து பரவிக் கிடந்த காலத்தில், இராமாநுசன் திருவவதாரம் செய்து, நான்கு வேதங்களின் அளவற்ற பேரொளியைக் கொண்டு, அந்தக் கலியுகத்தின் இருளைப் போக்கியிராமற் போனுல், 'எல்லா உயிர்களுக்கும் தலைவன் திருமாலேயாவான்' என்று, யாரும் தெரிந்து கொண்டிருக்க மாட்டார்கள்.

கடல் அளவாய திசை எட்டின்
உள்ளும், கலியிருளே
மிடைதரு காலத்து, இராமாநுசன்
மிக்க நான்மறையின்
சுடர்ஒளியால், அவ்விருளைத்
துரந்திலனேல், உயிரை
உடையவன் நாரணன் என்று,
அறிவார்இல்லை யுற்றுணர்ந்தே! (59)

குணந்திகழ் கொண்டல் இராமாநுசன்:

உயிர்க் குணங்களால் சிறந்துயர்ந்து விளங்குபவரும், வள்ளன்மையில் காளமேகத்தை ஒத்தவரும், எங்கள் பாகவத குலத்துக்குத் தலைவருமான இராமாநுசர், கற்றுணர்ந்த தத்துவ ஞானிகளுடைய திருக்கூட்டங்களிலும், நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியின் நறுமணம் கமழ்கின்ற சிறந்த இசை பாடப் பெறும் இடங்களிலும், பிராட்டி சிறிதும் பிரியாமல் இருந்து வாழ்கின்ற அழகிய மார்பையுடைய திருமாலின் திவ்விய தேசங்களிலும், சென்று பொருந்தி, என்றும் நிலைபெற்று எழுந்தருளியிருப்பார்!

உணர்ந்தமெய்ஞ் ஞானியர் யோகந்தொறும்;
திருவாய் மொழியின்
மணந்தரும் இன்னிசை மன்னும்
இடந்தொறும்; மாமலராள்
புணர்ந்த பொன்மார்பன் பொருந்தும்
பதிதொறும்; புக்குநிற்கும்
குணந்திகழ் கொண்டல் இராமாநுசன்,
எம்குலக் கொழுந்தே! (60)

அருமுனிவர் தொழும் இராமாநுசன்:

அருமையான கல்வி கேள்விகளை உடைய பெரு மக்களால் தொழப் பெறுபவரும், பிர பத்தி நெறியாகிய தவத்தை உடையவரும், ஆகிய எங்கள் இராமாநுசர், மேன்மேல் துளிர் விட்டு வளர்ந்து படர்வனவும், கொடுமை மிகுந் தனவுமாகிய தீவினைகளால், உலகியல் வாழ்க் கையாகிய நரகத்தில் அழுந்திக் கிடந்த என்னை, அருளுடன் வந்து ஆட்படுத்திக் கொண்ட பின்பும், அவருடைய மேலான சிறந்த குணங்கள் சிறிதும் ஒளி குன்றுமல், முன்பிலும் சிறப்புற்று ஒளி வீசி விளங்கி நிற் கின்றன. அதனைக் கண்டு, விரிந்து பரந்த இவ்வுலகம், மிகுந்த வியப்பைக் கொண்டது!

கொழுந்துவிட்டு ஓடிப் படரும்
வெம்கோள் வினையால், நிரையத்து
அழுந்தியிட் டேனைவந்து ஆட்கொண்ட
பின்னும், அருமுனிவர்
தொழும் தவத்தோன், எம்இராமாநுசன்
தொல்புகழ், சுடர்மிக்கு
எழுந்தது; அத்தால் நல்அதிசயம்
கண்டது இருநிலமே! (61)

இருவினை கழற்றும் இராமாநுசன்:

எங்கள் இராமாநுசருடைய சிறந்த திரு வடித் தாமரைகளில் சேராத இயல்புடைய நீசர்களுக்கு, எத்தகைய உதவியும் செய்யாத, பெரிய பெருமாளைப் போற்றுகின்ற, கூரத்தாழ் வான் ஆகிய பெரியோனுடைய திருவடிகளை, இன்று யான் அடைக்கலம் புகுந்தேன் ; அதன் பின்பு புண்ணியம் பாவம் என்னும் இரு வகை வினைகளாகிய பாசங்களிலிருந்து, விடுபட்டு உய்ந்தேன். இவ்வாறு விடுபட்டு உய்தி பெற்ற வனுகிய யான், இனிமேல் எதற்கும் சிறிதும் வருத்தப்பட மாட்டேன்.

இருந்தேன் இருவினைப் பாசம்
கழற்றிஇன்று; யான்இறையும்
வருந்தேன்இனி; எம் இராமாநுசன்
மன்னும் மாமலர்த்தாள்
பொருந்தா நிலையுடைப் புன்மையினேர்க்கு,
என்றும் நன்மைசெய்யாப்
பெருந்தேவரைப் பரவும்
பெரியோர்தம் கழல்பிடித்தே! (62)

மிக்க பண்டிதன் இராமாநுசன்:

வேதத்திற்குப் புறம்பான அறுவகைச் சமயங்களாகிய, புதர்த்தூறுகளிலேபடிவதற்குக் காரணமான, அறியாமை நிறைந்த மூடர்கள், அவமானமடைந்த அஞ்சி ஓடும்படியாக, இவ் வுலகில் வந்து அவதரித்து, எம்மைப் போன்ற வர்களை ஆட்கொள்வதற்காகப் பின் தொடர் கின்ற, பெரும் பண்டிதராகிய இராமாநுசரே! பெண் யானையைப் பின்பற்றித் திரிகின்றஆண் யானையைப் போல, அடியவனுகிய யான், அழகும் மணமும் அருளும் முதலிய சிறந்த குணங்கள் விளங்குகின்ற, நும்முடைய திருவடி களைப் பின்பற்றும்படி அருள் செய்தல் வேண் டும்!

பிடியைத் தொடரும் களிறுஎன்ன,
யான்உன் பிறங்கியசீர்
அடியைத் தொடரும்படி நல்க
வேண்டும்; அறுசமயச்
செடியைத் தொடரும் மருள்செறிந்தோர்
சிதைந்துஓட வந்து,இப்
படியைத் தொடரும் இராமாநுச!
மிக்க பண்டிதனே! (63)

பசுந்தமிழ் இராமாநுசன்:

எங்கள் தலைவராகிய இராமாநுச முனிவர் என்னும் மத யானை, நம்மாழ்வார் இசை நலங் களுடன் அருளிச் செய்த, பசுந் தமிழாகிய திருவாய் மொழியால் விளைந்த ஆனந்தமானது பெருகிப் பாயும் மத நீராக ஒழுகப் பெற் உண்மை நிறைந்த நல்ல வேதமாகிய தண்டத்தை ஏந்திக் கொண்டு, இவ் உங்களை நோக்கி வேகமாக நெருங்கிக் வந்து, மேலிடா நின்றது. புன்சமயவா இனி உங்களுடைய பொய்ம்மைப் பி அற்றுப் போயிற்று.

பண்தரு மாறன் பசுந்தமிழ்
ஆனந்தம், பாய்மதமாய்
விண்டிட, எங்கள் இராமாநுச
முனிவேழம், மெய்ம்மை
கொண்ட நல்வேதக் கொழுந்தண்டம்
ஏந்திக், குவலயத்தே
மண்டிவந்து ஏன்றது; வாதியர்காள்!
உங்கள் வாழ்வு அற்றதே! (64)

ஞானம் தந்த இராமாநுசன்:

நம்முடைய இராமாநுசர் அருளிய ஞானத் தினல், நெடுநாளாக இருந்து வந்த குதர்க்க வாதிகளுக்கு, வாழ்ச்சி அற்றுப் போயிற்று , மறையவர்களுக்கு இனி எந்நாளும் குறை ஒன்றும் இல்லாதபடி தீர்ந்தது ; உலகம் சிறந்த பேற்றைப் பெற்றது ; தத்துவ ஞான நூல்கள், ஐயங்களைப் போக்கி உண்மைப் பொருள்களைத் தெளிவாகத் தெரிவிப்பனவாக அமைந்தன ; பலவகைக் குற்றங்களும் நிறைந்த இயல்பையுடைய உலக மக்களுக்கு, அந்தக் குற்றங்களெல்லாம் தீர்ந்து ஒழிந்தன!

வாழ்வு அற்றது தொல்லை வாதியர்க்கு;
என்றும் மறையவர்தம்
தாழ்வு அற்றது; தவம் தாரணி
பெற்றது; தத்துவநூல்
கூழ் அற்றது; குற்றம்எல்லாம்
பதித்த குணத்தினர்க்கு,அந்
நாழ் அற்றது; நம்இராமாநுசன்
தந்த ஞானத்திலே. (65)

—ஆசிரியர்.

—(தொடரும்....)

திருக்கோயில்களில் இசைத்தூண்கள்

[கவிஞர் திரு. மனசை ப. கீரன், B.A.B.T.]

முன்னுரை :

திருக்கோயில்கள் விந்தை பல கொண்டவை. அவற்றுள், திருக்கோயில்களில் உள்ள இசைத் தூண்கள் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளிக்கின்றன. நமது திருக்கோயில்கள் சமுதாய இடங்களாகவும், இறைவழிபாட்டுத் தலங்களாகவும், கல்வியும் கலையும் வளர்க்கும் கலைகளின் உறைவிடங்களாகவும், தமிழ்ப் பண்பாடு [illegible] வாழ்வியல்கள் பலவும் சங்கமம் ஆகின்ற திருப்பதிகளாகவும் திகழ்கின்றன, என்ருல் மிகையில்லை. இயலும் இசையும் கூத்தும் வளர்த்துவரும் திருக்கோயில்களில் இசையைப் போற்றி வளர்ப்பதற்குச் சான்ருக-இசையின் ஒரு வடிவாகத் திருவோலக்கப் பொலிவளிப்பன, தமிழ்நாட்டுக் கோயில்கள் பலவற்றிலும் காணப்படுகின்ற இசைத் தூண்கள்.

காலம் :

இவ்விசைத் தூண்கள் 12-ஆம் நூற்ருண்டுடுக்குப் பின்னவையாகவே கருதப்படுகின்றன. ஏனெனில், பல்லவ மாமன்னர்கள் கட்டிய பெருங்கோயில்களில் இசைத்தூண்கள் காணப்படவில்லை. அவர்களுக்குப் பிற்பட்ட விசய நகர மன்னர்கள் ஆண்ட, சுமார் 16-ஆம் நூற்ருண்டுக் கோவில்களிலேயே அவை விளங்குகின்றன. இவை திண்டுக்கல்லுக்கு அருகிலுள்ள தாடிக்கொம்பு, மதுரை, திருநெல்வேலி, சுசீந்திரம், ஆழ்வார்திருநகரி, திருவனந்தபுரம் முதலிய இடங்களிலுள்ள கோயில்களிலெல்லாம் இருக்கின்றன.

அமைப்பு :

மிகப் பெரிய பாருங் கல்லிலிருந்து பெருந்தூண்களைக் குடைந்து, தூண்களின் அடிப்பாகமும் மேற்பாகமும் குடையப்பெருமல் இடைப்பாகம் மட்டும் ஜன்னல்கம்பிகளைப் போலக் குடையப்பட்டிருக்கின்றன. இவற்றை மரச் சுத்தியல்களால் தட்டும்பொழுது ஒவ்வொரு கம்பியும் வெவ்வேறு இசைஒலியை எழுப்புகிறது. அவை ஜலதரங்க இசையை ஒத்துள்ளன.

மதுரை :

மதுரை மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மிகப் புராதனமானது. தேவர்களின் தலைவனும் தேவேந்திரனே, கோவிலில் சுந்தரேசுவரரை வழிபட்டதாகக் கூறுவார்கள். 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்திலேயே மாலை நேரங்களில் சிவன் திருவீதி வலமாக எடுத்துவந்து வழிபட்டதாக இலக்கியங்கள் இயம்புகின்றன. திருஞானசம்பந்த நாயனுர் மதுரைக்கு எழுந்தருளியபோது, கூன்பாண்டியனின் துணைவி மங்கையர்க்கரசியும், அமைச்சர் குலச்சிறையும் வரவேற்று உபசரித்தார். மாணிக்கவாசகர் சுந்தரேசுவரரை வழிபட்டு இனிய கவிமலர்களைச் சொரிந்துள்ளார். சொக்கநாகர் அடியார்களுக்கு அருள்பாலிக்க 64 திருவிளையாடல்களைப் புரிந்துள்ளார்.

கோவிலின் அமைப்பு-வரலாறு :

மீனுட்சி சுந்தரேசுவரர் ஆலயம், எட்டு வேழங்கள் தாங்குவதுபோல அமைக்கப்பட்டுள்ளது. அஷ்டதிக்கஜங்கள் தம் தோள்களில் விமானத்தைத் தாங்குகின்றன. அண்டசராசரங்களை எட்டுயானைகள் தாங்குவதாக இலக்கியங்கள் இசைக்கின்றன. அண்ட சராசரமே கோவிலாக அனுமானிக்கப்பட்டு, எட்டுயானைகள் தாங்குவதாகப் படைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு இந்திரவிமானம் எனப்படும். இந்தக் கோயிலின் அமைப்பை வேறெங்கும் காண இயலாது.

சுந்தரேசுவரர் சந்நிதியிலிருந்து வெளி வந்ததுமே முன்மண்டபத்தில் சிவன் கூத்தாடும் கோலத்திலும், அவனது துணைவி காளி அழகிய வடிவிலும், அக்கினி வீரபத்திரரையும், அகோர வீரபத்திரரையும் காணலாம்.

மதுரை நாயக்கர்களும், அவர்களுக்கும் முற்பட்டு - இப்பகுதியைவென்று ஆண்ட சோழர்களும் இக்கோவிலைப் போற்றிப் பணிந்துள்ளனர். மூன்ரும் குலோத்துங்க சோழன் மதுரையை வென்றதும், சுந்தரேசுவரர் திருக்கோவிலுக்கு எழுந்தருளினுன்; சுந்தரேசுவரருக்கு விழா எடுத்து ஆண்டவனைத் திருவீதி வலம் எடுத்தபோது குலோத்துங்கன் தெருவில் நின்று ஆண்டவனைச் சேவித்தான் என்ருல், பண்டைய மன்னர்களின் பக்தியை உணரலாம்.

மதுரை வரலாற்றிலும் கலைவளர்ச்சியிலும், சிறப்பிடம் பெறுகின்ற திருமலைநாயக்கன் மீனுட்சியம்மையின் பெரும் பக்தன். அவன் ஆண்டுதோறும் அம்மைக்கு விழா வெடுத்து, எட்டாம்நாள் திருவிழா அன்று அம்மனைச் சிறந்தமுறையில் அணிகலங்களால் அலங்கரிக்கப்பட்ட சிம்மாசனத்தில் வீற்றி

ருக்கச்செய்து, அவளின் கையிலிருந்து தனது நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட செங்கோலைப் பெற்று, செங்கோலைப் பட்டத்து யானையின்மேல் வைத்துப் பவனி வரச்செய்து, அரண்மனைக்குக் கொணர்ந்து, அரியணையில் இருத்தி, அவன் அணித்திருந்து பணிந்தான்; மீனாட்சி நாடாளத் தான் ஒரு தொண்டனாக இருப்பதாகக் காட்டினான். குமரகுருபரர் இவனோடு திருக்கோவிலுக்குச் சென்று மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழ் பாடியதாகச் சொல்வர். இவனுக்கு அடுத்து வந்த அரசி மங்கம்மாளும் இதே முறையில் செங்கோலைப் போற்றி ஆண்டாள்.

அழகிய மண்டபத்தில் சக்தியர் எண்மரின் சிற்பங்கள் உள்ளன. திருமலை நாயக்கனின் அரசி கட்டிய மண்டபம் அது. முற்காலத்தில் மன்னர்கள் 1008 தூண்களுடன் 1000 கால் மண்டபங்களைக் கட்டியுள்ளனர். மதுரையிலும் அத்தகைய ஒரு மண்டபம் உண்டு. திருமலை நாயக்கன் புதிய பொலிவுடன் கூடிய சிற்பங்கள் திகழும் மண்டபம் ஒன்று கட்டினான். அதனால் அம்மண்டபம் இன்றும் 'புதுமண்டபம்' என்றே வழங்கப்படுகின்றது. அதில் இன்று பல கடைகள் இருக்கின்றன.

மதுரைக் கோவிலில் இசைத்தூண்களைக் காண வடக்குக் கோபுரத்திற்குப் போக வேண்டும். இதற்கு மொட்டைக்கோபுரம் என்றொரு பெயரும் உண்டு. இக்கோபுர வாயிலின் வலது புறமும், இடதுபுறமுமாக இருஇசைத்தூண்கள் உள்ளன.

சுசீந்திரம் :

நாகர்கோவிலிருந்து சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவில், கன்னியாகுமரி போகும் வழியிலுள்ளது சுசீந்திரம். பல குன்றுகளும் பசிய வயல்களும் சூழ்ந்த இப்பகுதி பண்டைக் காலத்தில் 'மலைநாடு' என்று வழங்கப்பட்டது. நாகர்கோயிலுக்குப் புராதனப் பெயர் கோட்டாறு. சுசீந்திரம் கோவிலுக்குப் பாண்டியர்கள், சோழர்கள், வேணாட்டு மன்னர்கள், நாயக்கர்கள் முதலியோருடன் திருவனந்தபுரத்துக் கேரள வேந்தர்களும் பொன்னும், மணியும் நிலமும், பொருளும் வழங்கிப் போற்றியுள்ளனர்.

சுசீந்திரம் கோயிலில் தாணுமாலயப் பெருமாள் என்று அழைக்கப்படும் சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் தனித்தனிக் கோவில்கள் உண்டு. இவ்விரண்டும் வடகேதம் தென் கேதம் என்று வழங்கப்படுகின்றன. கைலாச நாதர்கோவில் மிகப் புராதனமானதாக உள்ளது. இங்கே பல மண்டபங்கள் உள்ளன. 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ரிஷப மண்டபம், உதயமார்த்தாண்ட மண்டபம், செண்பக ராமன் மண்டபம், அலங்கார மண்டபம் ஆகியவற்றைக் காணலாம். இவற்றில் அலங்கார மண்டபத்தில்தான் இசைத்தூண்கள் இருக்கின்றன.

இக்கோவிலில் 4 இசைத்தூண்கள் உள்ளன இரு தூண்கள் ஒவ்வொன்றிலும் 33 கற்கம்பிகளும், வேறிரண்டு தூண்கள் ஒவ்வொன்றிலும் 25 கற்கம்பிகளும் உள்ளன.

ஆழ்வார் திருநகரி :

திருநெல்வேலி-திருச்செந்தூர் நெடுஞ் சாலையில் உள்ளது. ஆழ்வார் திருநகரி, வைணவ ஆழ்வார்களில் புகழ் பெற்ற ஒருவரான நம்மாழ்வார் இவ்வூரில் பிறந்து என்றென்றும் பக்திமணம் பரப்பும் பிரபந்தங்களைப் பாடியுள்ளார். அவருக்குச் சடகோபன் என்ற பெயருமுண்டு. தொன்னூட்களில் ஆழ்வார் திருநகரிக்குக் குருகூர் என்ற பெயரும் இருந்தது. வழுதி வளநாடு என்ற ஒரு பகுதியின் 18 நாடுகளைச் சேர்ந்த வைணவர்கள் 14-நூற்றுண்டில் இப்பகுதியில் ஒரு மடத்தைத் தோற்[...] வித்தனர். அது பாண்டியன் குலசேக[...] காலம். அந்தமடம் அருளாளதாசன் [...] என்று வழங்கிற்று. அங்கே திருவா[...] மாமுனி இருந்திருக்கிறார். இங்குள்ள [...] வன் திருநாடுடையபிரான் எனத் தி[...] தீந்தமிழில் அழைக்கப்படுகின்றான். [...] பாண்டியன் காலத்தில் 1249-1251-க்கிடையி[...] சக்ரபாணி நல்லூரைச் சேர்ந்த பல்லவராயன் வராகருக்கு ஒரு மண்டபம் எடுப்பித்தான். கலி பிராமகரின், கவிதையொன்று ஆதிநாதப் பெருமாளுக்கு அழகிய மண்டபம் ஒன்றை மழவராயன் கட்டியதாகக் கூறுகிறது. பூதலவீர உதய மார்த்தாண்ட வர்மன் காலத்தில்தான் தலைவாயிற் கோபுரம் கட்டப்பட்டிருக்கக்கூடும். திருமுடி சுற்றினான் நந்தவனம் என்றொரு அழகிய பூந்தோட்டமும் இருந்திருக்கிறது.

ஆழ்வார் திருநகரின் அழகிய கண்ணாடி மண்டபத்தில் நான்கு இசைத் தூண்கள் இருக்கின்றன.

சிலைகளும் தூண்களும் செய்து, கோயில் கட்டக் 'கணீர்' என்று ஒலிக்கும் சிறந்த கற்களையே பயன்படுத்தி வந்துள்ளனர். 'பொத்: பொத்' என்று தட்டும்போது ஒலித்தால் அவை சிலைசெய்யத் தக்கவை அல்ல என்று ஒதுக்கி விடுவர். ஆகவே சிறந்த கற்களில் செய்யப்பட்ட தூண்களையும், சிலைகளையும் தட்டிப் பார்த்தால் 'கணீர்' என ஒலிக்கும் தூண்களைக் குடையும்போது நடுவில் ஒரு தூணும் சுற்றிக் கம்பிகளுமாகக் குடைந்து பல கோயில்களில் அழகுபடுத்தியுள்ளனர். அமைப்புக்கேற்ப அவை ஒலி வேறுபாடுகளையும் காட்டும். இசை விற்பன்னற்களுக்கு அவை 'இசைத் தூண்' களாக இசைபாடுகின்றன. ஆனால், காண்போரெல்லாம் அவற்றைத் தட்ட ஆரம்பித்தால் சிதைந்து உடைந்து போகும். ஆதலின் இவை பற்றி அறிய நிபுணர்களின் உதவியுடன் தொடாமல் அணுகிக் கண்டு வியந்து காத்தல் நம் கடன்.

இந்தியப் பெருந் தத்துவ ஞானிகள்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

(முற்றொடர்ச்சி)

நிம்பார்க்கர் (கி. பி. 11-ஆம் நூற்றாண்டு) :

இவர் ஆந்திர நாட்டில், தைலங் பிராம[illegible]ண குலத்திற் பிறந்தவர். இராமாநுசருக்குப் [illegible]னர், கி.பி. பதினொன்றும் நூற்றாண்டில் [illegible]தவராகக் கருதப் பெறுகின்றார். பிரம்மம் [illegible]சித்து என்னும் முப்பொருள்களும் [illegible] உடன்பாடு. பிரமத்தை, இவர் [illegible]ன் அல்லது அரி என்னும் சிறப்புச் [illegible]ற்களால் வழங்குகின்றார். பிரம்மம் உல[illegible]கத்திற்கு உபாதான காரணமாகவும், நிமித்த காரணமாகவும் விளங்குகின்றது என்பது, இவருடைய கொள்கை. ஏனைய வைஷ்ணவ வேதாந்திகளைப் போன்று, இவரும் பிரம்மமே உலகமாகப் பரிணமிக்கின்றது என்கின்றார். கடவுள் தமக்கு ஒரு லீலையாகவே உலகத்தைப் படைக்கின்றார் ; ஆனந்தமயனாகிய கடவுளிடம் இருந்தே தமது நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப உயிர்கள் இன்ப துன்பங்களை அடைகின்றன. பற்றற்ற செயல்களினால், உயிர்கள் துன்பங்களினின்று விடுபடுகின்றன. பிரம்மம் என்பது நிர்க்குணப் பொருள் அன்று ; பேரறிவு பேராற்றல் பேரழகு பேரருள் பேரின்பம் முதலிய பல சிறந்த குணநலங்களை யுடையது.

பிரம்மம் ஆகிய பொருளை நாம் நமது கட்புலனாலும் கருதலளவையாலும் அறிதல் இயலாது. இறைவனும் ஞானிகளும் அருளிச் செய்துள்ள நூல்களாகிய வேத ஆகமப் பிரமாணம் கொண்டே, பிரம்மப் பொருளை அறிதல் கூடும். உயிர்கள் எண்ணற்றன ; அணு பரிமாணம் உடையன. முத்தி நிலையிலும் உயிர்கள் தனித் தன்மையுடையனவாய், இறைவனோடு ஒன்றாகாமல், வேறுபட்டே நிற்கும். இறைவனை அடைவதற்குக் கருமம்—ஞானம்—பக்தி—பிரபத்தி—குரு உபசத்தி என்னும் ஐந்து சாதனங்கள், மிகவும் இன்றியமையாதவை. உலகத்துப் பொருள்கள் பிராகிருதம், அப்பிராகிருதம், காலம் என மூன்று வகைப்படும்.

சங்கரரின் கேவலாத்துவைத வாதம், சைதன்யரின் அசிந்திய பேதவாதம் என்பவற்றின் வேறாக, நிம்பார்க்கரின் கொள்கைக்குப் பேதாபேதவாதம் என்னும் பெயர் வழங்கப் பெறுகின்றது. பிரமத்தோடு உலகமும் உயிரும், காரணமும் காரியமும் போல ஒரு வகையில் வேறுபட்டும், ஒரு வகையில் வேறுபடாமலும் விளங்குகின்றன என்பது, நிம்பார்க்கரின் பேதாபேதவாதத்தின் முடிவு. இதனைச் 'சுவபாவிக பேதம்' என்றும் கூறுவர். இவரது 'சக்தி வாதம்' சமயத் துறையிற் பல சிக்கல்களை விடுவிக்கின்றது. இறைவன்பால் அவனது ஐசுவரியப் பிரதானம் பற்றிய பக்தி செலுத்துதலை விட, மாதுர்யப் பிரதானம் பற்றிய பக்தி செலுத்துதலையே, நிம்பார்க்கர் பெரிதும் வற்புறுத்துகின்றார். இல்லற நெறி நின்றும் இறைவனை அடையலாம் என்பது இவர் கொள்கை.

பிரம்மசூத்திரத்திற்கு இவர் வகுத்த பேருரை நூல் ஆகிய வேதாந்த பாரிசாத செளரபம், தச சுலோகி, மந்திர ரகசிய சோடசி, பிரபந்த கல்பவல்லி, கிருஷ்ணாஷ்டகம், இராதாஷ்டகம், இராதா ஸ்மரண ஸ்தோத்திரம் முதலியன, நிம்பார்க்கர் இயற்றிய நூல்கள். ஸ்ரீநிவாசர் என்பவர், இவரது சீடர்களுள் முதன்மையானவர். பிரம்ம சூத்திரத்திற்கு அவர் வேதாந்த கௌஸ்துபம் என்னும் உரை நூலை இயற்றியுள்ளார்.

குரு நானக் (கி.பி. 1469-1538)

இவர், இந்தியாவில் வடமேற்குப் பகுதியில், முதன்மையாகப் பஞ்சாப் மாநிலத்தில், மிகுதியாகப் பரவியுள்ள 'சீக்கியம்' என்னும் மதத்தினை நிறுவியவர் ஆவர். சீக்கிய மதம் கடவுளைக் குருவாகக் கொண்டு போற்றும். சீக்கியம் என்னும் சொல் சிஷ்ய நெறி எனப் பொருள்படும். கி.பி. 1469ஆம் ஆண்டில், ரவி நதிக்கரையில், லாகூர்க்கு அருகேயுள்ள தால்வண்டி என்னும் இடத்தில், க்ஷத்திரிய குலத்தில், குரு நானக் பிறந்தார். தந்தையார் ஓர் இந்து; அவர் ஓர் இசுலாமியரிடம் வேலை செய்து வந்தார். இந்து சமயக் கூறுகளும், இசுலாமியக் கூறுகளும், சீக்கிய மதத்தில் கலந்து சிறந்து விளங்குவதற்கு, இஃதும் ஓர் அடிப்படையாக அமைந்தது போலும்! இவருக்குக் குழந்தைப் பருவத்திலேயே, இறைவழிபாட்டில் ஈடுபாடு மிகவும் ஏற்பட்டிருந்தது. இவர் எப்போதும் துறவிகள், தூயோர்கள், ஆகியோரின் சூழலையும், நட்பையுமே நாடி நின்றார். இளமையிற் சில காலம் உறவினர் வற்புறுத்தியதனால், இல்லற வாழ்வில் இருந்தார். இரண்டு குழந்தைகள் பிறந்தன. ஆயினும் இவரது உள்ளம் இறையருளையே நாடி விழைந்து நின்றது.

ஒரு நாள் இவர் காட்டிற்கு ஓடி மறைந்தார். அங்கே தியானத்தில் இருந்த போது கடவுட் காட்சி கிடைத்தது. ''நாம செபம் செய், தருமம் புரி, வழிபாடு இயற்று, தியானத்தில் அழுந்து, அனைவருக்கும் இறையருளைப் பரப்பு, குருவாக விளங்கு'' என இறைவன் தமக்கு ஆணை பிறப்பித்ததாக இவர் உணர்ந்தார். துறவறம் மேற்கொண்டார். நெற்றியில் குங்குமம் அணிந்து, தலையில் ஒரு தலைப்பாகை தரித்து, அரையில் எளிய ஆடை உடுத்து, எங்கணும் சென்று இறையருளின் திறனைப் பரப்ப முற்பட்டார். மர்த்தனர் என்னும் இசுலாமிய இசைவாணர் ஒருவர் இவருடன் சேர்ந்து, மாணவரானார். நானக் தமது கருத்துக்களைச் செய்யுட்களாகப் பாடுவார். மர்த்தனர் அவற்றை இன்னிசைக் கருவியில் இனிதாக இசைப்பார். இங்ஙனம் இறைவனின் அருள் நலனை, 'நாளும் இன்னிசையாற் பரப்பும்' நற்பணியில், நானக் ஈடுபட்டு வந்தார். காசியில் இருந்து மெக்கா வரையிலும், காஷ்மீரத்திலிருந்து இலங்கை வரையிலும், பல இடங்களுக்கும் நானக் பயணம் புரிந்ததாகக் கூறப்படுகின்றது. இவர் தமது இறுதிக் காலத்தைக் கர்த்தார்பூர் என்னும் இடத்திற் கழித்தார். கி.பி. 1538இல் மறைந்தார்.

சாதி சமய வேறுபாடுகள் பொருளற்றவை என்றும் ; எல்லாருக்கும் ஈசன் ஒருவனே என்றும்; அவனை வாயினுற் பாடி, மனத்தினுல் சிந்தித்து வழிபட்டு, அவனருள் பெற்று அவனை அடைவதே மனிதப் பிறவியின் பயன் என்றும்; நானக் தாம் சென்ற இடமெல்லாம் நன்கு விளக்கினுர். ''பிரம்மம் பரப்பிரம்மம் பரமேசுவரன் நாராயணன் கோவிந்தன் அரி அல்லா முதலிய பெயர்கள் யாவும் வேறுபாடின்றி, ஒரே கடவுளையே சுட்டுவனவாகும். வீடு பேறு அடையச் சடங்குகளும் யாகங்களும் செய்யத் தேவையில்லை. கடவுள் உருவம் அற்றவர். அவரை அறிவதற்கு ஆசிரியர் (குரு), மிகவும் இன்றியமையாத துணை ஆவார். உலக வாழ்வு நிலையற்றது, பயனில்லாதது, வெறும் பொய்யாய்க் கனவாய்ப் போவது. மனிதன் தனக்கென ஓர் ஆற்றலும் துணையும் உடையவன் அல்லன். உயிர்களின் வாழ்வை உருவாக்கி இயக்கும் ஊழ் என்னும் இயற்கை நியதி ஒன்று உண்டு. கடவுள்பாற் செய்யும் பக்தியினுல் மட்டுமே, மனிதன் உய்தி பெற முடியும் '' என்றெல்லாம், குரு நானக் யாவருக்கும் எடுத்துரைத்தார்.

சீக்கிய வேதம் :

சீக்கிய வேதம், 'கிரந்த சாகிப்' எனப்படும். அது 29,480 செய்யுட்கள் கொண்டது; வெவ்வேருக அமைந்த செய்யுள் வகைகளையுடையது. இதன்கண் கபீர் தாசர், நாமதேவர், இராமாநந்தர் போன்ற பல சிறந்த பெரியோர்களின் பாடல்களும் உண்டு. இந்துக்களும் இசுலாமியரும் ஆக மொத்தம் 37 பெரியார்களின் பாடல்கள், இதன்கண் சேர்க்கப்பெற்றுள்ளன. பிற மதங்களின் வேதங்கள், அவ்வவற்றிற்குரிய ஒரு மொழியிலேயே பெரும்பாலும் அமைந்திருக்கும். சீக்கிய மதத்தின் வேதமோ, பஞ்சாபி, மூல்ட்டானி, பாரசீகம், பிராகிருதம், இந்தி, மராத்தி ஆகிய ஆ[illegible] மொழிகளில் ஒருங்கே அமையப் பெற்றுள்ள[illegible] அமிர்தசரஸ் என்னும் இடத்திலுள்ள பொற் கோயிலின் கருவறையில், சீக்கியர்களின் வேதம் ஆகிய 'கிரந்த சாகிப்' என்பது, உருவம் கொண்ட ஒரு கடவுள்போல் வைத்துப்பெரிதும் போற்றப்படுகின்றது. அவ்வேதம், நாள் தோறும் காலையில் சரிகை பின்னிய பட்டுஆடைகளால் அணி செய்யவும், விலையுயர்ந்த அணி கலன்கள் பதித்த விதானத்தின் கீழ் அமர்த்தவும், இரவில் பொற்கட்டிலில் ஓய்வு கொள்ளுமாறு உபசரிக்கவும் பெறுகின்றது. நாள் திங்கள் பருவம் ஆண்டு என்னும் எல்லாக் காலத்திலும், இரவு பகல் என்னும் வேறுபாடு இன்றி, அமிர்தசரஸ் நகரிலுள்ள பொற்கோயி லின் ஒருபுறத்தில், அவ்வேதம் இடையறு[illegible] தொடர்ந்து ஓதப்பெற்று வருகின்றது.

சீக்கியக் குருமார்கள் :

குருநானக் நிறுவிய சீக்கிய மதம், [illegible]ருக்குப் பின்னர்ப் பலரால் மேலும் தொடர்ந்[illegible] வளர்க்கப் பெற்றது. குரு அங்கதர் (கி.பி. 1538—1552) என்பவர், பஞ்சாப் மொழிக்குரிய 'குருமுகி' என்னும் எழுத்து வரிசை (Alphabet) முறையினைத் திருத்தியமைத்து ஒழுங்குபடுத்தினுர். குரு அமரதாசர் (கி.பி. 1552—1574) சீக்கிய சமூகத்தினைத் திரட்டி ஒன்றுபடுத்தி வலிமைப்படுத்தினுர். குரு ராமதாசர், அமிர்தசரஸ் (Amritsar) என்னும் நகரத்தையும், அங்குள்ள புகழ்மிக்க பொற் கோயிலையும் தோற்றுவித்தார். குரு அருச்சுனர் (கி.பி. 1581—1606), 'கிரந்த் சாகிப்' என்னும் சீக்கிய மத வேதத்தை முதன் முதலில் தொகுத்தார். டெல்லி அரசனுடன் ஏற்பட்ட போரில் மாண்டார். குரு அரிகோவிந்தர் (1606—1638) தமது தலைமையின் அடையாளமாகக் கூர்வாள் இலச்சினையை (Badge) மேற்கொண்டார். சீக்கியர்களை வீரமும் போர்த் திறனும் மிக்க இனத்தினராக விளங்கும்படி செய்தருளினுர். குரு அரிதாசர் (1638—1660), அவுரங்கசீப் என்னும் மொகலாய மன்னனுடன் போர் புரிந்தார். குரு அரிகிருஷ்ணர் (கி.பி. 1660—1664), பல போர்களில் அஞ்சாமல் கலந்து கொண்டு, சீக்கிய மதத்தையும் இனத்தையும் காக்கப் பெரும் பணி புரிந்தார். குரு தேஜ் பகதூர் (கி.பி. 1664—1673) என்பவரும், மொகலாயருடன் இடையறாது போர் புரிந்து ஒரு சிறந்த வீரராக விளங்கினுர். இவரது பாடல்கள் பல, சீக்கிய வேதத்தில் சேர்க்கப் பட்டுள்ளன. குரு கோவிந்த சிங் (கி.பி. 1675—1708) என்பவரே, சீக்கிய மதத்தின் பத்தாம் குருவும், இறுதிக் குருவும் ஆவார். சீக்கிய மதத்தை வீரம் செறிந்ததொரு சிறந்த மதமாக (Militant Theocracy) விளங்கும்படி செய்வித்தவர் இவரே. 'சிங்' (சிங்கம்) என்னும் பட்டத்தினை முதன் முதலில் தாம் சூடிக் கொண்டு, அதனை எல்லாச்சீக்கியர்களும் தங்கள் பெயருடன் சேர்த்து வழங்கிக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தி, அங்ஙனம் வழங்குவித்

தவர் இவரேயாவர். சீக்கிய மதத்தின் தலைமையைத் தனக்குப் பின்னர்த் தனி ஒருவருக்[illegible]கன இல்லாமல், 'கிரந்த சாகிப்' என்னும் [illegible]வத நூலுக்கே உரியதாக மாற்றினார். குரு[illegible]தவிக்குப் பதிலாக, கல்சா (Khalsa) என்னும் [illegible]பெயரில், சான்றோர்களின் பேரவையினை இவரே நிறுவினார்.

பஞ்ச ககாரங்கள் :

சாக்த மதத்தில் வழங்கப்படும் 'பஞ்ச மகாரங்கள்' போல, இவரும் சீக்கிய மதத்திற்குரியனவாக 'பஞ்ச ககாரங்கள்' என்பவற்றை விதித்தார். ஒவ்வொருவர் உள்ளத்திலும் வளர வேண்டிய பண்பு நலன்களுக்குரிய வெளியடையாளங்களாகச் சிலவற்றைச் சீக்கியர்கள் அனைவரும் தரிக்க வேண்டும் என, இவர் பணித்[illegible]ருளினார். அவற்றின் பெயர்கள் ''க'' என்னும் [illegible]ழுத்தின் இனத்தில் தொடங்குவதாலும், [illegible] என்னும் எண்ணிக்கையின் அளவில் [illegible]ந்ததனாலும், அவை **"பஞ்ச ககாரங்கள்"** [illegible]ம். சீக்கியர் ஒவ்வொருவரும், தூய் [illegible] குறிப்பதாகிய கங்கம் (சீப்பு), நேர் [illegible] சுட்டுகிற கரம் (கைவளையம்), [illegible]னடக்கத்தை உணர்த்தும் கச்சம் (இடுப்புத் துணி), ஆன்மிக ஆற்றலை அறிவிக்கும் கிர்பான் (கத்தி), தியாகவுணர்வைத் தெரிவிக்கும் கேசம் (நீண்ட தலைமுடி) என்னும் ஐந்தையும், தமக்குரிய அணிகலன்களாகக் கொண்டு,சிங்கத்தைப் போல அஞ்சா நெஞ்சுடன், கடவுளின் ஊழியராக வாழ வேண்டும் என்று, குரு கோவிந்த சிங் விதித்தார். கலியுகத்தில் இறையருளையும் வீடு பேற்றையும், எய்துவதற்குரிய எளிய இனிய வழி, இறைவனின் திருப்பெயர்களை இடையறாது ஓதும் திருநாம செபமேயாகும் என்பதுதான், குரு நானக் அவர்கள் நிறுவிய சீக்கிய மதத்தின் சிறந்த சாரமான போதனையாகும்.

பசவேசுவரர் (கி.பி. 1131-1167) :

இவர், இலிங்காயதம் என்னும் வீர சைவ மதத்தைப் பரப்பியருளிய சான்றோர். கன்னட நாட்டில் பீஜப்பூர் மாவட்டத்தில்இங்குளாபுரம் பாகேவாடி என்னும் ஊரில், பிராம்மண குலத்தில் பிறந்தவர். தந்தை மாடிராசன், தாய் மாடாம்பாள். மேலைச் சாளுக்கிய மரபைச் சார்ந்த மூன்றாம் சோமேசுவர மன்னரின் பின் வந்த இரண்டாம் சகதேக மல்லர், மூன்றாம் தைலபன் ஆகியோரின் கீழ் இருந்த சிற்றரசனும், கலாசூரி மரபைச் சேர்ந்தவனும், கல்யாணபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தவனுமான, விச்சலன் (கி.பி. 1156—1167) என்னும் சமண அரசனுக்கு அமைச்சராகவும், தலைமைக் கணக்கராகவும் விளங்கியவர். அவ்வரசனின் படைத் தலைவராகப் பணியாற்றியவரும், தமது தாய் மாமனாரும் ஆன, பலதேவர் என்பவரின் மகள் கங்காம்பிகையை மணந்து கொண்டார். பீசப்பூர் மாவட்டத்தில் உள்ள கூடலசங்கமம் என்னும் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபட்டு அவரால் இலிங்க தீட்சை பெற்றார். கல்யாண புரத்தில் 'அனுபூதி மண்டபம்' என்னும் சமய சங்கம் நிறுவினார். இதனால் இலிங்காயத இயக்கம் பெரிதும் பரவத் தலைப்பட்டது. பசவேசுவரரைத் திருநந்தி தேவரின் அவதாரமாக இலிங்காயத மதத்தைப் பின்பற்றும் வீர சைவ மக்கள் போற்றுகின்றனர்.

பசவர் உபதேசங்கள் :

(1) மனிதர் அனைவரும் சம நிலையினரே. (2) மனிதர்களில் எவரும் பிறப்பினாலோ தொழிலினாலோ பாற்பகுப்பினாலோ, தம்முள் சிறிதும் உயர்வு தாழ்வு உடையவர் அல்லர். (3) மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலோ, அன்றி ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலோ, வேறுபாடு எதுவும் இருத்தலாகாது. (4) ஆன்மீக வளர்ச்சி நெறியில் ஓர் ஆணுக்குப் போலவே, ஒரு பெண்ணுக்கும் சம உரிமைகள் உண்டு. (5) தான் விரும்பும் ஒரு தொழிலை ஒவ்வொருவரும் செய்யலாம். வேலையில்லாமையும் பிச்சையேற்றலும் ஆகிய சமுதாயத் தீங்குகள் அறவே ஒழிக்கப்படல் வேண்டும். (6) பெண்களும் கூட ஒரு தொழிலை மேற்கொள்ளலாம். (7) உடலுழைப்பால் செய்யப்பெறும் தொழில் எதுவாயினும், அது பெருமைக்குரியதேயாகும் ; தொழிலில் உயர்வு தாழ்வு என்பது இல்லை. (8) வருணம் ஆசிரமம் பற்றிய வேறுபாடுகள் புறக்கணிக்கத் தக்கவை. (9) உடலுழைப்பின் மூலமாகவே ஆன்மீக வளர்ச்சியைத் தேடிக் கொள்ளுதல் கூடும். (10) வெறும் துறவும், காடுகளிற் சென்று வசித்தலும், வாழ்க்கைத் துன்பங்களிலிருந்து தப்பியோட முயலும் கோழைத்தனமே யாகும். (11) கலப்பு மணங்களும், கலந்து உணவு உண்ணலும், பெரிதும் போற்றி வளர்க்கத் தக்கனவாகும். (12) சமுதாய வாழ்வில் தீண்டாமை என்பது கூடாது; மக்கள் அனைவரும் ஒரு குடும்பத்தினர் போலக் கலந்து பழகுதல் வேண்டும். (13) ஆன்மீகத் துறையிலும் சமுதாயத் துறையிலும் ஒவ்வொரு மனிதனும், தானே சுயமாகச் சிந்திக்க உரிமையுடையவன் ஆவான். (14) நிரந்தரமான சிந்தனைக்கும் ஆன்மீக முன்னேற்றத்திற்கும், அறிவும் அனுபவமுமாகிய இரண்டும்தான் உண்மை வழி காட்டக்கூடிய ஒளி விளக்குகளாகும். (15) ஆன்மீகக் கல்விக்கும், உலகியற் கல்விக்கும், மக்கள் வழங்கும் தாய்மொழியே உரிய கருவியாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். (16) சமய ஆராய்ச்சிகளில் கலந்து கொள்ளுவதற்கும், ஆன்மீக ஞானத்தைப் பெறுவதற்கும், ஆன்ம வளர்ச்சி நெறியைப் பின்பற்றுவதற்கும், எல்லா மனிதர்களும் சம உரிமை உடையவர்களாவர்.

சமய வாழ்வியற் சாதனங்கள் :

பசவேசுவரர், இலிங்காசாரம், சதாசாரம், சிவாசாரம், பிருத்தியாசாரம், ஞானாசாரம் என்னும் பஞ்ச ஆசாரங்களை வகுத்தார். பக்தன் மாகேசுவரன் பிரசாதி பிராணலிங்கி சரணன் ஐக்கியன் என்னும் ஷட்ஸ்தலங்களையும், குரு லிங்கம் சங்கமம் பாதோதகம் பிரசாதம் விபூதி உருத்திராக்கம் மகாமந்திரம் என்னும் அஷ்டாவரணங்களையும் அமைத்துக் கொடுத்தார். இவற்றுள் பஞ்சாசாரங்கள் என்பன, ஒரு தனி மனிதன், உலகியலில் சீலம்

மிக்க உயரிய சிறந்த வாழ்க்கைநடத்துவதற்குப் பெரிதும் துணை புரிகின்றன. அஷ்டாவரணங்கள் என்பன, ஒருவன் ஆன்மீக நெறியில் சென்று உறுதி பெறுவதற்கு நற்பெரும் துணையாக அமைந்து நலம் விளைவிக்கின்றன. ஒருவன் ஆன்மீக நலத்தில் வளர்ச்சியுற்றுச் சிறப்பெய்தி இறைவனோடு ஒன்றி இயைவதற்கு உரிய படிகளாக ஷட்ஸ்தலங்கள் அமைகின்றன. இவை மூன்றும் சமய வாழ்வில் தலைசிறந்த பெரும் சாதனங்களாகும். இவற்றை வகுத்து உருவாக்கித் தந்த பெருமை பசவேசுவரருக்கே உரியதாகும்.

சித்தராமையர் :

அல்லமாப் பிரபுவினால் ஆட்கொள்ளப் பெற்றவர், சித்தராமர் என்பவர். அவர் சாமளாதேவி என்னும் அரசியால் ஆளப்பெற்று வந்த சோலாப்பூர் என்னும் இடத்தில் சுக்கவே மாதையன் என்பவரின் புதல்வராகப் பிறந்தவர். இரேவண சித்தரின் அருள் வாழ்த்துப் பெற்றவர். இளமையிலேயே துறவு நெறி மேற்கொண்டு, காவளர்த்தல் குளம்தொடுதல், போன்ற பல சமூகநலப் பணிகள் செய்து வந்தார். ஒரு சமயம் அல்லமாப் பிரபு சோலாப்பூர் சென்றபோது, சித்தராமர் குளம் வெட்டிக் கொண்டிருத்தலைக் கண்டார். ''வழுக்கைத் தலை அழுக்கற்ற மனத்தைக் காட்டாது; உடலாகிய குளத்திற்கு மனமாகிய கரையைக் கட்டு; நல்லொழுக்கமாகிய படிக்கட்டுகளை அமை; இறையருளின்பம் ஆகிய நீரை நிரப்பு; ஞானம் ஆகிய அருள் வெள்ளத்தின் பெருக்கமாக் அந்த நீர் அமைவதாகும். புறத்தே செய்யப்பெறும் மூர்த்தி பூசை, பொதுமக்களுக்குரியது. நீ யோகியாக விளங்கி இறைவனை உள்ளத்திலே வழிபடுக'' என்று உபதேசித்துச் சித்தராமரை ஆட்கொண்டார்.

அல்லமாப் பிரபு :

பசவேசுவரரின் சம காலத்தில் விளங்கியவர் அல்லமாப் பிரபு என்னும் வீர சைவச் சான்றோர். அவர் ஷிமோகா மாவட்டத்தில், பெல்காம் என்னும் இடத்தில் பிறந்தவர். மிருதங்கம் வாசிப்பதில் மிக்க தேர்ச்சி பெற்றவர். பெல்காவியில் உள்ள யோகேசுவரர் கோயிலில், கமலதேவி என்னும் அழகிய நங்கையைச் சந்தித்துக் காதலித்து மணந்தார். எதிர்பாராத வகையில் அவள் சில ஆண்டுகளில் இறந்துவிடவே, வாழ்க்கையை வெறுத்துத் துறவு நெறி மேற்கொண்டார். குகேசுவரர் என்னும் இஷ்டலிங்கத்தை வழிபட்டார். சீவன் முக்தராகவும், நிர்விகல்ப சாதகராகவும் திகழ்ந்தார்.

சென்ன பசவர் :

பசவேசுவரரின் சகோதரியாகிய நாகலாம்பாள் என்பவரின் புதல்வர் சென்ன பசவர். கல்யாணி நகரத்தில் அமைந்திருந்த 'அனுபவ மண்டபம்' என்னும் சமய சங்கத்தில் சிறந்து விளங்கி வந்த, சான்றோர் பெருமக்கள் ஆகிய பசவர் அல்லமர் சித்தராமர் என்னும் மூவரையும் அன்புடன் போற்றிப் பின்பற்றியவர் இவர். வீர சைவத்திற் பெரிதும் போற்றப்படும் ''ஷட்ஸ்தலம்'' என்னும் சிறந்த சமுதாய அடிப்படைக் கொள்கையினைப் போதித்துப் பரப்பியவர் சென்னபசவரேயாவர். சாதி வேறுபாடுகளைக் கடிந்து, மக்களிடையில் உயர்வு தாழ்வற்ற சமய உணர்வினை வளர்க்க, இவர் பெரிதும் முயன்றார். ''மக்களுள் ஆயிரத்தில் ஒருவனே சத்தியன்; இலட்சத்தில் ஒருவனே பக்தன்; கோடியில் ஒருவனே சரணன் (அடியவன்) ஆவான்'' என்பது, இவர் தம் அருளுரைகளில் ஒன்று.

கடவுள் ஒருவரே என்பது வீர [illegible] கொள்கை. இலிங்கத்தைச் சிவபிரா[illegible] அடையாளமாகக் கொண்டு, அதனை [illegible] பிரிவற அணிந்து கொண்டு அன்புடன் வழிப[illegible] முறையினை வற்புறுத்துவதனால், இதற்கு இலிங்காயதம் எனவும் பெயர் வழங்கும். ''உலகம் உள் பொருளே. பிறர் சிலர் சொல்வது போல, வெறும் பொய்த் தோற்றம் அன்று. பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் வருண பேதங்களும், பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் ஆச்சிரமபேதங்களும், அவ்வவற்றிற்கெனத் தனித் தனியே வகுக்கப்பட்டுள்ள கடமைகளும் பிறவும், ஞான மோட்ச சாதனங்கள் அல்ல. மக்கள் அனைவரும் உடன்பிறப்பாளர், இறைவனே உயிர்களுக்கெல்லாம் தந்தை. எவ்வுயிர்க்கும் ஊறு செய்யாது, இரக்கம் காட்டிப் போற்றுதல் அனைவர்க்கும் கடமை'' என்பது வீர சைவக் கொள்கை.

இலிங்கதாரண சந்திரிகை, வேதாந்த சாரம், வீர சைவ சிந்தாமணி, சித்தாந்த சிகாமணி, பிரபுலிங்க லீலை முதலியன, வீரசைவப் பெருநூல்கள் ஆகும். பக்திக்குப் பசவரும், வைராக்கியத்திற்கு அல்லமரும், ஞானயோகத்திற்குச் சென்ன பசவரும், கருமயோகத்திற்குச் சித்தராமரும், சிறந்த எடுத்துக் காட்டுகளாவர் எனலாம். வீர சைவ மகளிருள், அக்கமா தேவி நீலாம்பிகை மகாதேவியம்மை இலக்கம்மை, முத்தாயியம்மை என்பவர்கள், மிகவும் குறிப்பிடத்தக்க சிறப்புடையவர்கள் ஆவர்.

—தொடரும்

தமிழகத்துச் செப்புப் பட்டயங்கள்

[திரு. நடன. காசிநாதன், எம்.ஏ., தொல்பொருள்துறை, சென்னை.]

திருமுகம்:

...ரு செப்புப் பட்டயங்கள் பொதுவாக அரச ...ள் ஆணையை வெளிப்படுத்துவனவாகக் ...ப்படும். அரசனது ஆணை முதலில் பனை ...லோ அல்லது துணியிலோ எழுதப்படும். ...கல்லிலும், செம்பிலும் வெட்டப் ...இதைக் கல்வெட்டுகள் ''செம்பிலும் ...எழுதி'' என்று கூறும். அரசனால் ...பட்டு ஓலையில் எழுதப் பெற்றதும் அதற்குத் திருமுகம் என்று பெயர் வழங்கப் பட்டிருக்கிறது.

செப்பேடு வெளியிடப்பட்ட காரணம்:

அரசன் பல காரணங்களால் ஆணை பிறப் பித்து அவை செப்பேடுகளில் எழுதப்பட்டிருக் கின்றன. தம் ஆளுகையின் கீழுள்ள எந்த ஊரைச் சார்ந்த ஒரு கோயிலிலாவது வழிபாடு நின்று, அதை யாராவது ஒருவர் அரசனிடம் முறையிட்டபோதோ, அல்லது யாராவது ஒருவ ருக்கு முன்னாளில் கொடையாக அளிக்கப்பட்ட ஒரு பொருள் நாளா வட்டத்தில் பல காரணங் களால் கைமாறி விடத் திரும்பவும் முன்னர் அளிக்கப்பட்டவரின் சந்ததியைச் சேர்ந்த வர்கள் தம் உரிமையை ஆதாரத்துடன் நிரு பித்து அரசனிடம் தமக்கு அக்கொடை சேர்தல் வேண்டும் என்று விண்ணப்பிக்கும் போதோ: அல்லது முன்னர் ஒரு ஆலயத்துக்கு அளிக்கப் பெற்ற தானம் போதாது என்று கூறி, மேலும் அதற்குத் தானம் வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கும்போதோ அளிக்கப் பெற்றதாக அமைந்திருக்கும்.

செம்புத் தட்டுப்பாடு:

அரசர்கள் இவ்வாறு கொடையளித்த போதெல்லாம் செம்பில் எழுதி, நாட்டில் செம்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது என்று அரசர்களின் கொடைத் தன்மையைப் பாராட்டி ஒரு வடமொழிச் சுலோகம் காணப்படு கிறது. பாரதத்தில் கி.மு. ஆறும் நூற்றாண்டி லேயே செப்பேட்டில் எழுதும் பழக்கம் இருந் துள்ளது என்பது, உத்தரப் பிரதேசத்தைச் சார்ந்த சோகுரா என்னுமிடத்திலிருந்து கிடைத்துள்ள செப்புப் பட்டயத்தால் புலனா கிறது. செப்பேட்டில் எழுதும் பழக்கம் இந்தியா எங்கணும் பரவியிருந்தது.

செப்பேடு எழுதும் முறை:

செப்பேடுகள் எவ்வாறு எழுதப்படுதல் வேண்டும் என்று ஒரு வரன்முறையும் அமைந் திருந்தது என்பதை விஷ்ணுபுராணமும், யாக் ஞவல்க்யமும் தெரிவிக்கின்றன.

1. அரசன் பிராம்மணர்களுக்கு நிலத் தைக் கொடையாக அளித்தல் வேண்டும்.

2. செப்பேட்டில் அரச முத்திரை பதிப் பிக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

3. கொடுக்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் பரப்பு ஆகியவை தரப்பெற்றிருத்தல் வேண்டும்.

4. அரசனது முன்னோர்களைப் பற்றி எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

என்று விஷ்ணுபுராணம் கூறுகிறது.

மேலே கூறப்பட்டுள்ள வரன்முறைகளுக்கு உட்பட்டு எழுதப்பட்டுள்ள செப்பேடுகள் இந்தியாவில் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைத்திருக்கின்றன. அதிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவிலிருந்து பல்லவர்களுடைய செப்பேடுகளாகக் கிடைத்திருப்பது மகிழ்தற் குரியது. பல்லவ மன்னன் சிவஸ்கந்தவர்மனின் காலத்தைச் சேர்ந்த மயிதவோலு, ஹிரஹத கல்லிச் செப்பேடுகள், ஸ்கந்தவர்மன் காலத் திய குணபதேயச் செப்பேடு ஆகியவைகளை உதாரணமாகக் கூறலாம்.

தமிழகத்துச் செப்பேடுகள்:

தமிழகத்தில் இதுவரையில் நூற்றுக்கு மேற்பட்ட செப்பேடுகள் கிடைத்திருக்கின்றன, இவைகளில் பல்லவர் காலத்தியவை முப்பத் தொன்று, சோழர் காலத்தியவை பதினொன்று, பாண்டியர் காலத்தவை ஆறு, ஒய்சள மன்னர் களின் காலத்தவை நான்கு, மற்றும் ஏராளமான விஜயநகர, நாயக்க மன்னர்கள் காலத்தியவை ஆகும்.

பல்லவர்களின் செப்பேடுகள் கி. பி. 4-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை சேர்ந்த தாகும். அவர்களது பெரும்பாலான செப்

பேடுகள் இரு பகுதிகளை உடையதாக இருக்கும். முதற்பகுதி சமஸ்கிருத மொழியிலும், கிரந்த எழுத்திலும் எழுதப் பெற்றும்; இரண்டாம் பகுதி தமிழ் மொழியிலும் தமிழ் எழுத்திலும் எழுதப்பட்டுள்ளன. பாண்டியர், சோழர் களின் செப்பேடுகளும் இதே முறையில் எழுதப் பெற்றிருக்கின்றன.

கவிதைநடை:

பல்லவ, சோழ மன்னர்களின் செப்பேடு களில் கொடை வழங்கும் மன்னனின் முன் னோர்களைப் பற்றிய செய்திகள் சமஸ்கிருதப் பகுதியில் காணப்படுகின்றன. ஆனுல் பாண்டி யர்களுடைய செப்பேடுகளில் இரு பகுதிகளி லும் காண முடிகின்றன. மேலும் பல்லவ, சோழ மன்னர்களின் செப்பேடுகளில் சமஸ் கிருதப் பகுதி மட்டும் கவிதை நடையிலும், தமிழ்ப்பகுதி உரைநடையிலும் எழுதப்பட்டி ருக்கும். பாண்டியர்களின் செப்பேடுகளில் இரு பகுதிகளும் கவிதை நடையில் எழுதப் பெற்றி ருக்கும். பல்லவர்களுடைய செப்பேட்டின் சம்ஸ்கிருதப் பகுதி சோழர்களின் செப்பேட் டின் சம்ஸ்கிருதப் பகுதிக்கு அடிப்படையாகத் திகழ்ந்திருக்கிறது. அதைப்போன்றே பாண்டி யர்களின் செப்பேட்டுத் தமிழ்ப் பகுதி சோழர், பிற்காலப் பாண்டியர்களின் கல்வெட்டுகளில் காணப்படும் மெய்க்கீர்த்திப் பகுதிக்கு முன்னு தாரணமாக விளங்கியிருக்கிறது.

செப்பேட்டின் அமைப்பு:

பல்லவ, பாண்டியர், சோழர் காலத்தியச் செப்பேடுகள் ஒரு கம்பி வளையத்தில் கோர்க்கப் பட்டுக் காணப்படும். வளையத்தில் அச் செப் பேட்டை வெளியிடும் மன்னனின் முத்திரையும், பெயரும் பொறிக்கப்பட்டிருக்கும். பல்லவர் களுடையதாக இருந்தால் முத்திரையில் நந்தி கால்களை மடித்து வைத்துப் படுத்திருப்பது போன்றும், நந்திக்கு மேலே எண்மங்கலக் குறி களும் இருக்கும். பாண்டியர்களுடைய முத்தி ரையில் இரு கயலும், விளக்குகளும் காணப் படும். சோழர்களின் முத்திரையில் இரு கால் களை மடக்கி வைத்து, இரு கால்களைக் குத்திட்டு வைத்து அமர்ந்திருக்கும் புலி, இருகயல் விளக்குகள், கொடிகள் இவைகளுக்குக் கீழே வில் ஆகியவைகளும், மேல் பகுதியில் சாமரம், குடை ஆகியவைகளும் பொறிக்கப்பட்டிருக்கும். இந்தச் சின்னங்களை வைத்தே அச்செப்பேடு எந்த மன்னர் குலத்தைச் சார்ந்தது என்பதை எளிதில் நிர்ணயித்து விடலாம்.

செப்பேடுகள் வளையத்தோடு கோர்க்கப் பட்டிருக்கும் முறையையும் அவைகளின் அமைப் பையும் பார்த்தால் ஓலைச்சுவடிகள் நூலினுல் கோர்க்கப்பட்டுக் கட்டப்பட்டிருப்பதுபோன்றே தோற்றமளிக்கும். எனவே செப்பேட்டுக்கு அடிப்படை ஓலைச்சுவடிகளாக இருத்தல் கூடும். செப்பேடுகளின் இடப்பக்கத்தில் துவாரம் காணப்படும். துவாரத்துக்கு அருகில் செப் பேட்டுப் பக்கங்களின் எண் பழையதமிழ் எண் களில் தரப்பட்டிருக்கும். பெரும்பாலான செப்பேடுகளில் முதல் ஏட்டின் வெளிப்புறப் பகுதியும், இறுதி ஏட்டின் வெளிப்புறப் பகுதி யும் எழுதப் படாமல் இருக்கும். அத்தோடு ஒவ்வொரு செப்பேட்டின் ஓரங்களும் ச[illegible] உயர்ந்து காணப்படும். இப் பாதுகாப்புக[illegible] எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்கள் அழிந்[illegible] விடக்கூடாது என்ற காரணத்தினுலேயேயாகு[illegible]

விஜயநகர, நாயக்க மன்னர் செப்பேடுகள்:

விஜயநகர நாயக்க மன்னர் செப்பேடுகள் பெரும்பாலும் சதுர வடிவிலோ அல்லது நீண்ட சதுர வடிவிலோ அமைந்திருக்கும். செப்பேட் டின் மேல் பகுதியில் நடுவில் சிறிது நீண்டு காணப்படும். அதில் துவாரமும் சிலவற்றில் இருக்கும். அப்பகுதி கையால் பிடித்துத் தூக்கு வதற்கோ அல்லது கயிறு இட்டு கட்டிக் எடுத்துச் செல்வதற்கோ வசதியாக அமைக்கப்பட்[illegible] காணப்பெறும். இவர்கள் காலத்திய [illegible] பேடுகளில் சிலவற்றில் அரச முத்திரையும் [illegible] வற்றில் தெய்வங்களின் உருவங்களும் [illegible] கப்பட்டிருக்கும். முற்காலத்திய [illegible] களில் உருவங்கள் புடைப்பு உ[illegible] இருக்கும். பிற்காலத்தியச் செ[illegible] உருவங்கள் வரையப்பெற்றுக் காணப்ப[illegible]

கடவுள் வாழ்த்து:

பல்லவர், பாண்டியர், சோழர் காலத்தி யச் செப்பேடுகளில் பொதுவாக சம்ஸ்கிருதப் பகுதியில் கடவுள் வாழ்த்துக்களும், கொடை யளிக்கும் மன்னனின் குலத்தோற்றமும் அவ னது முன்னோர் பரம்பரையும் காணப்படுகிறது. பின்னர் அரசனின் ஆட்சியாண்டைத் தெரிவித்து அளிக்கப் பெற்ற கொடையையும், யாருக்கு அளிக்கப் பெற்றது என்பதையும், அவர் எந்த ஊரைச் சார்ந்தவர் என்பதையும் சுருக்கமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்ப்பகுதி கொடை யளிக்கும் மன்னனின் பெயர் கூறி, ஆட்சி ஆண்டு தெரிவித்து கொடையளிக்கப்பட்ட பொருள், அதன் அமைவு, அளிக்கப்பட்டவர், அவர் அமைவு ஆகியவற்றைத் தெரிவித்துவிட்டு, கொடுக்கப்பட்டது நிலமாயின் அதன் எல்லைகளை விரிவாகக் கூறும். சம்ஸ்கிருதப் பகுதி எந்த அளவுக்கு அரசியல் வரலாற்றை அறிந்து கொள்ள உதவுகிறதோ அதைவிட அதிகமாகத் தமிழ்ப்பகுதி அன்றைய சமுதாயச் சூழலைத் தெரிந்து கொள்வதற்கு மிகவும் உறுதுணையாக உள்ளது. இந்த இரு பகுதிகளையுமே அக்காலத் திய பெரும் கவிஞர்கள் யாத்திருக்கின்றனர். அவர்களைச் சிறப்பிக்கும் முகத்தான் நிலக் கொடைகளும் பொற்கொடைகளும் தரப்பட்டி ருக்கின்றன.

செப்பேடு எழுதியவருக்கு நிலக்கொடை:

இவைகளைச் செப்பேட்டில் பொறித்த தச் சர்களும் சிறப்பிக்கப்பட்டிருக்கிறுர்கள். அவர்கள் பெருந்தச்சன் என்ற விருது பெற்றி ருக்கிறுர்கள். நிலக்கொடையும் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அண்மையில் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறையால் திருத்தணிக்கு அருகில் உள்ள வேலஞ்சேரியில் கிடைத்த அபராஜிதனின் செப்பேட்டில் 'திரு

முகம் அட்டின பட்டைநாகன் மகன் விடேல் விடுகு பெருங்கன்னனு''க்கும் நிலக்கொடை ...ரிக்கப்பெற்றிருப்பது தெரிய வருகிறது.

செப்பேடு வெளியிடப்பட்ட முறை:

பொதுவாகச் செப்பேடுகள் அரசன் ஆணையிட, அதைத் திருவாய்க் கேள்வி கேட்டு, திருமந்திர ஓலையிடம் கூற, திருமந்திர ஓலை அதை எழுதி, திருமந்திர ஓலை நாயக்கத்திடம் தர, திருமந்திர ஓலை நாயகம் அதைச் சரிபார்த்து வரிப்பொத்தகக் கணக்குக்கு அனுப்ப, அவர் அதைத் தம் வரிப்பொத்தகத்தில் குறித்துக் கொண்டு, புரவு வரித் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்த, அவர் அதைத் தம் பதிவேடுகளில் குறித்துக்கொண்டு முகவெட்டு, கண்காணி ...யவர்களுக்கு அனுப்புவார். அவர்கள் அவ் ஓலையை (திருமுகத்தை) யானையின்மீது ...த் கொடை தரப்பட்ட நிலம் அமைந் ...ஊருக்கு எடுத்துச் செல்வர்.

[illegible]லை தருதல் :

''அவ்வூரைச் சார்ந்த நாட்டார் திருமுகம் வருகின்ற செய்தி அறிந்து எதிர்கொண்டழைக்கக் கூட்டமாக வருவர். திருமுகத்தைக் கண்டதும் தலை தாழ்த்தித் தொழுது, தம் கைகளில் அதைப் பெற்றுக்கொண்டு திருமுகத்தில் காணப்பட்டுள்ள நிலத்துக்குச் சென்று, பெண் யானை பின்னே வர எல்லையை வரையறை செய்வர். நான்கு பக்க எல்லைகளிலும் எல்லைக்கல் நடுவர். நிலத்தின் ஓரங்களில் கள்ளியை நடுவர். அவ்வாறு வரையறை செய்த பின்னர் அவர்கள் அந்நிலத்தைப் பரிசாகப் பெற்றவனுக்கு 'அறையோலை' என்னும் ஓலையைத் தருவர். அதுவே பின்னால் செப்பேட்டில் எழுதப்பட்டுப் பாதுகாக்கப்படும்.

இப்பகுதியை முதலாம் இராசராசனின் பெரிய லெய்டன் செப்பேடு, ''நாட்டோமுக்குத் திருமுகம் வர, நாட்டோமும் திருமுகம் கண்டு எதிரெழுந்து சென்று, தொழுது, வாங்கித் தலைமேல் வைத்துப் பிடி சூழ்ந்து பிடாகை, நடந்து எல்லை தெரித்து, கல்லுங்கள்ளியும் நாட்டி'' என்று அழகாக விளக்குகிறது.

எந்தெந்தப் பகுதி :

கொடையளிக்கப்பட்ட நிலத்தில் எவையெவை கொடையளிக்கப்பட்டவனுக்கு உரிமையாகிறது என்பதை,

''இந்நாற்பாற் கெல்லைக்குட்பட்ட
உண்ணிலம் ஒழிவின்றி உகும்போடி ஆமை
தவழ்ந்த இடமெல்லாவற்றேடும், கீழ்நோக்கிய
கிணறும், மேல்நோக்கிய மரமும், மீன்படு
பள்ளமும் தேன்படு பொதும்பும், புற்றும், தெற்றியும்,
மனையும், மனைப்படப்பும் ஆகிய எல்லாம்''

என்று எந்த ஒரு பகுதியும் விடுபட்டு விடாமல் கூறும். பிற்காலத்தியச் செப்புப் பட்டையங்களில் இத்தகைய விளக்கங்களைக் காண முடியாது. ஆனாலும் அவைகளும் அப்பொழுது நடைபெற்ற அரசியல், சமுதாய இயல் ஆகிவைகளைத் தெளிவாக விளக்குவனவாக உள்ளன. இத்தகைய செப்பேடுகள் தமிழகத்தில் இன்னும் கண்டு வெளிக்கொணரப்படவேண்டியவை நிரம்ப உள்ளன. இவை பற்றிய முக்கியத்துவம் பொதுமக்களுக்குத் தெரியாமலிருக்கின்ற காரணத்தால் அவைகளை அவர்கள் உருக்கி மற்ற பொருட்கள் செய்துவிடுகின்றனர். அதனால் தமிழகத்தின் தொன்மை வரலாறு அழிந்துவிடுகின்றது.

திருத்தணிகைச் செப்பேடு :

சில நாட்களுக்கு முன்பு வரை பல்லவ மன்னன் கம்பவர்மனுக்கும் அபராஜித வர்மனுக்கும் என்ன உறவு, இவர்களில் யார் முன்னர் ஆட்சி செய்தவர் என்ற வரலாறு தெரியாமல் இருந்து வந்தது. அண்மையில் கிடைத்த அபராஜிதவர்மன் காலத்திய செப்புப்பட்டயத்தால் கம்பவர்மன் அபராஜிதனுக்குத் தந்தை என்பதும், கம்பவர்மன்தான் முன்னர் ஆண்டவன் என்பதும், கம்பவர்மனின் மனைவி கங்க குலத்தைச் சேர்ந்த விஜயை என்பதும்; அபராஜிதன், பாணர், பாண்டியர் சோழர் ஆகியவரோடு போர்புரிந்து வெற்றியடைந்திருக்கிறன் என்பதும் தெரியவந்துள்ளது. அத்தோடு திருத்தணியில் குடி கொண்டுள்ள சுப்பிரமணியர் கி.பி. 900-க்கு முன்பேயே மக்களால் பெரிதும் வழிபடப்பட்டிருக்கிறர் என்பதும் இச்செப்பேட்டால் புலனுகின்றது. இத்தகைய அரிய செய்திகளை வாரி வழங்கும் செப்பேட்டுச் சாசனங்களைப் போற்றிப் பாதுகாப்பது தமிழ் மக்களின் தலையாய கடமை அல்லவா? செப்புப் பட்டயங்களைப் பாதுகாப்போம், தக்காரிடம் தந்து செய்தி அறிந்து கொள்வோம் என்று ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்

(முற்றொடர்ச்சி)

மகாவித்வான் பண்டித நடேசனார், பி.ஏ., ஜே.பி.

‘‘சென்னம்மன் குப்பமே’’ சென்னை மாநகரின் மிகப் பழைய நாமம் ஆகும். இக் குப்பத்தின் காளியம்மன் பெயரே சென்னம்மன் என்பது. சென்னம்மன் எனில் செந்நிற முடையவன் எனப் பொருளாகும். காளி எனில் கருநிறத்தள் என்றும், நீலி எனில் நீல நிறத்தள் (நீலமேனி வாலிழை—ஐங்குறுநூறு) என்றும், காலி எனில் காலத்திற்கு அப்பாற்பட்டவள் என்றும் பொருள் கூறுப. திருவிளக்குப் பூசையில் அம்மையப்பர் திருக்கோலம் காண்பர் சைவர். காரணம்: நீலம் அல்லது கருநிறப் புகையை நீலியாகவும், செஞ்சுடரின் சிவப்பு நிறத்தைச் சிவனாகவும் மேற்கொண்டு தரிசிக்கின்றனர் பெரியோர்.

கருநிறக் காளிக்குச் செந்நிறம் வந்தவாறு யாதோ எனில், அனுமானடியார்கள் ஆஞ்சநேய சுவாமிக்குச் செந்தூரமும் வெண்ணெயையும் அப்பி வணங்குதல் போல், தேவி தாசர்கள் (விஸ்வகருமர்கள்) இக் காளியம்மனுக்குக் குங்குமப் பொடி அப்பி, சிவப்பாடை உடுத்து, கெம்பு பதித்த பொன்னாபரணங்களை அணிவித்து, செம் மலர்களைச் சூட்டி வணங்குவது வழக்கம். இன்றும் இக்கோயிலில் மாதம் இருமுறை நடக்கும் அஷ்டமி துர்க்கா பூஜையில் மூலவர்க்குச் செந்நிற ஆடையையும், செந்நிறப் பூ அலங்காரத்தையும், குங்கும அருச்சனை புரிதலையும் அன்பர்கள் காணலாம். தில்லைக் காளி கோயிலிலும் மதுரை மீனாட்சி மண்டபத் தூணிலுள்ள காளி பீடத்திலும் இவ்வழக்கம் இன்றும் காணலாம். மராட்டியர் சிவப்பு நிறமில்லாச் சிலைகளை வணங்கார். செம்மேனியம்மானாகிய சிவனது சிவையைச் சிவப்பாகப் பார்க்க அன்பர்களும் அடியார்களும் நினைப்பது இயற்கையே. சிவனைப் பட்டினவர்களும் கரையாளர்களும் (சென்னம்மன் குப்பத்தில் வாழ்ந்தவர்கள்) ‘சென்னப்பன்’ என்றும் சிவையைச் ‘சென்னம்மை’ என்றும் கூறும் வழக்கம் இக்குப்பத்தாரிடையே இருந்தது. சென்னிமலை (சிரகிரி) போற்றும் அடியார்கள் தம் குழந்தைகளுக்குச் ‘‘சென்னியப்பன்’’ சென்னிமலையான் (முருகன்) என்று பெயரிடுகின்றனர். சிரகிரி முருகனைக்குறிக்கும் பெயர் சென்னப்பன். சென்னம்மன் குப்பத்தார் சிவனுக்குச் ‘சென்னப்பன்’ என்று கூறினர். சிவையை (காளி)ச் சென்னம்மை, சென்னியம்மன், சேணியப்பன் சேணியம்மன், சின்னப்பன் சின்னம்மை என்பன செம்படவர், பரவர் வாழும் குப்பங்களில் இன்றும் அன்றுபோல் வழக்கில் உள்ளன.

சென்னம்மன் குப்பத்தில் வாழ்ந்தோரிடையே தேவியினுடைய பெயரைத் தம் மக்களுக்கு இடும் ஒரு நல்ல வழக்கம் இருந்தத[illegible] காளியம்மனாகிய சென்னம்மா வரத்தால் பெ[illegible] பெண்மகவுக்குச் ‘‘சென்னம்மா’’ என்[illegible] ஆண்மகவுக்குச் ‘‘சென்னப்பன்’’ என்றும் [illegible]ரிடுதலேயாம். இக்குப்பத்தில் வாழும் [illegible] ‘செட்டிமார்’ எனப் பட்டம் சூட்டி [illegible] வேண்டும். கடல்மேல் செல்லும் [illegible] தார் காளியையே நம்பி வாழும் உண்மை[illegible] பக்தர்கள். உண்மையில் பிறர்போல் மக்க[illegible]யும் மாக்களையும் நம்பி வாழாதவர். கடவுளின் துணைகொண்டே தினசரி வாழ்பவர் பரத குலத்தவர். இவர்களில் முதல் மகனை ‘‘நாயக்’’ என்பர். ‘‘நாயக்’’ எனும் பதம் சேனையில் தலைமைப் பதவியிலுள்ளவர்களையும், காடு வெட்டிச் சாலை போடுபவர்களையும் குறிக்கும் சொல்லாகும்.

இச் சென்னம்மன் குப்பத் தலைவனிடமே வடவாறுகுப்பம், மதராஸ்குப்பம், சென்னைக் குப்பம் மூன்றனையும் ஆங்கிலேயர் கி.பி. 1639-இல் விலைக்கு வாங்கினர். இத் தலைவனது பெயர் ‘‘சென்னப்ப நாய்க்கன்’’ என்று ஆங்கிலேயர் எழுதியுள்ள வரலாற்று நூல்களில் காண்கின்றோம். புராணங்களில் சென்னம்மன் குப்பத்திலிருந்து காளிகாம்பாளை ‘‘நெய்தல் நிலக் காமாட்சி’’ என்று கூறப்பட்டுள்ளன. காஞ்சிபுரக் காமாட்சி வேறு என அறியலாம். கேட்ட வரங் கொடுக்கும் தேவியாக விளங்கியதால், நெய்தல் நிலக் காமாட்சியைச் செல்வரும் வறியரும் கல்லாரும் கற்றாரும் சேனாநாய்க்குகளும் மராட்டிய வீரர்களும் சத்ரபதி சிவாஜியும் இன்றும் உள்ள ‘‘சென்னம்மனை’’ வணங்கிச் சென்றார்கள். இக் குப்பத்தின் தேவியருளால் பிறந்த ஒரு செல்விக்குச் ‘‘சென்னம்மா’’ என்று பெயர். அச் சென்னம்மா கீழ்த் திருப்பதியில் கோயில் திருப்பணி செய்ததாகக் கல்வெட்டொன்று கூறுகின்றது. (பார்வை: 1492 எண்ணுள்ள திருப்பதிக் கல்வெட்டு) “கீழ்த் திருப்பதியைச் சேர்ந்த கோவிந்தராஜப் பெருமாள் கோயிலும் கல்வெட்டும் வடசுவரில் சில சிலை உள்ளன-கோபுரச் சுவர்களில் ஆங்காங்குக் காணும் தெய்வீகச் சிற்பங்கள் உருவாக்கப் படக் காரணமாக இருந்தவர்கள் திருவேங்கட நாதராஜரும் அவரது மனைவி, சென்னம்மாவுமே என்பதை இன்னொரு கல்வெட்டு குறிக்கிறது’’ (பார்வை 28-3-70-ல் வெளியான சுதேசமித்திரன் ஞாயிறு மலர்).

சென்னப்பட்டினம் காவிரிப்புகும் பட்டினம் போன்று சங்க காலப் பட்டினமாகும். [illegible]ழைய கற்கால ஆயுதங்களும் பொருட்களும் [illegible]ண்டியருகே கண்டெடுத்தனர் அரசினர். [illegible]தெலுங்கரும் கன்னடரும் சென்னையைச் '[illegible]ென்னபுரி' என்பது சென்னை என்பது சென்னம்[illegible]மனுக்குச் சார்த்தும் சிவப்புப் புடவை; திருவிழாவில் ஊர்வலத்துக்காகக் காளிக்குக் கட்டும் ஒருவகை ஆடையைக் குறிப்பதே. சென்னை எனும் பதம், ''சென்னை'' ''கூரை நாடு'' வாங்கி வந்தேன்'' எனில் இடவாகு பெயராக அவ்விடங்களில் குறும்பரால் நெய்த துணிகளையே குறிக்கும். ''மதரூஸ்'' வாங்கினேன் என்று ஓர் ஆங்கிலேயன் கூறின் 'மதரூஸில் நெய்த உலகப் புகழ்பெற்ற ஒரு நீலத் துணியையும் சிவப்புப் புடவையையும் குறிக்கும். [illegible]பேரிச் செட்டிமார் தம் சரக்குகளை விற்கப் [illegible]ரிசை (சென்னை) கொட்டி மக்களை அழைப் [illegible]. காளி கோயிலின் விழாவினையும் கோயில் [illegible]தியின் புறப்பாட்டினையும் அறிவிக்கும் [illegible]க்கைதச் 'சென்னை' என்றே கூறினர் [illegible] சென்னக்கூனி (இறால்) யையும் [illegible]'' மீனையும் பிடிக்கும் செம்படவர் [illegible] ''சென்னைவலை'' என்று பெயர். [illegible]ர்வை: சென்னை சர்வகலாசாலைப் பதிப்பு: [illegible]லெக்சிகன் தொகுதி 3, பக்கம் 1623). கிழக்கிந்திய வணிகர் குழுவினர் இவ்வலைகளை வாங்கி மேனுட்டிற்கு அனுப்பி லாபம் அடைந்தனர். ''சென்னை'' ஆடைகளையும் புட்வைகளையும் நெய்து விற்கவே காஞ்சியிலிருந்தும் வாலாஜாவிலிருந்தும் நெசவாளர்களைச் சிந்தாதிரிப் பேட்டையில் குடியேற்றினர் ஆங்கிலேயர். இன்றும் அன்று வந்த பட்டுநூற்காரர் எனும் சாதியினரைச் சிந்தாதிரிப் பேட்டையிற் காணலாம். இவர்கள் சிவாஜி மகாராஜா சென்னைக்கு வருதலைக் கேட்டுப் பல இடங்களில் பதுங்கி வாழ்ந்தார்கள் என்று வரலாறு கூறுகின்றது. அவர்களைத் தேடிச் சென்ற சிவாஜி, மக்களுக்கு விரோதி சிவாஜியல்லன் என்றுராம். சென்னைக் கோட்டை வழியாகப் பூந்தமல்லி சாலைக்கு வந்து, சிந்தாதிரிப்பேட்டையைக் கடந்து, மலைச்சாலை (அண்ணுசாலை) யாகப் ''பூந்தண்மல்லி''யைச் சிவாஜி ராஜா கொள்ளையடித்தார் என்று ஆங்கிலேயர் குறித்துள்ளார். (பார்வை: எச். டி. லங் இயற்றிய சென்னையின் வரலாறு-தொகுப்பு 1, பக்கம் 528).

சென்னம்மன் குப்பத்திலிருந்த காளி கோயிலை ஆங்கிலேயர், ''கல்யாண டெம்பில்'' (Kalyana Temple) என்றும், கௌளியான பகோடா (Cawleyana Pagoda) என்றும் ''காரணேஸ்வரி டெம்பில்'' (Karaneswari Temple) என்றும் ''காமீஸ்வரி பகோடா'' (Comisery Pagoda) என்றும் அழைத்தனர். (பார்வை: மேற்கண்ட வரலாற்று நூல் தொகுப்பு 3 பக்கம், 338, 388 என் 3, 258 டபிள்யூ 6) சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கோயிலிலுள்ள சிவலிங்க மூர்த்திக்குக் ''கமடேஸ்வரர்'' என்று பெயர். எனவே, அம்பாளைக் கல்யாணி, கௌளியாணி, காரணேஸ்வரி, கமடேஸ்வரி எனப் பல பெயர்களால் அழைத்தனர் என அறியலாம். சென்னம்மன்-அழகான அம்மை; சென்னபுரி-அழகான கோட்டை எனப்பொருள் காண்க. கன்னடத்தில் சென்ன-அழகு.

—(தொடரும்)

அன்பர்கள் கவனிக்க

கடந்த 20 ஆண்டுகளாக, மிகவும் நல்ல முறையில், சிறப்புற நடைபெற்று வரும் நமது ''திருக்கோயில்'' திங்கள் இதழின் சந்தா ஆண்டு, ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலமாகக் கணக்கிடப் பெறுகின்றது. ஆதலின், திருக்கோயில் இதழின் புதிய சந்தாதாரராகச் சேர்ந்து, 1978 ஜனவரி மாதம் முதல் 1978 டிசம்பர் மாதம் வரைக்குரிய, 12 இதழ்களையும் தவறாமல் முறையே பெற விரும்புபவர்கள், இம்மாத இறுதிக்குள், முன்னதாகவே சந்தாத் தொகையை விரைந்து அனுப்பி, தங்கள் பெயரைச் சந்தாப் பட்டியலில் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர். இடையில் சேர்ந்தால், முன்னைய மாத இதழ்கள் பல, பெற முடியாமல் தவறிப் போய்விடும்.

ஆதலின், 1978ஆம் ஆண்டுக்குரிய சந்தாத் தொகையை, இம்மாத இறுதிக்குள் அனுப்பி வைத்து, சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளும்படி, அன்பர்கள் வேண்டிக் கொள்ளப்பெறுகின்றனர்.

1978—ஆம் ஆண்டு ஜனவரி முதல் சந்தா விபரம்

உள்நாடு — **ரூ. 15—00**

வெளிநாடு — **ரூ. 25—00**

சந்தாத் தொகை அனுப்புபவர்கள் ''திருக்கோயில் இதழின் சந்தாத் தொகை'' என்று மறவாமல் குறிப்பிட்டு,

உயர்திரு ஆணையர் அவர்கள்,

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,

நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-600 034

என்னும் முகவரிக்குப் பணவிடை [M. O.] மூலம், அனுப்புதல் வேண்டும். மற்றும் பணவிடைத் தாளின் கீழ், தமது (1) முழுப் பெயர், (2) வீட்டின் எண், (3) தெருவின் பெயர், (4) ஊர் அல்லது நகரத்தின் பெயர், (5) வட்டம் (6) மாவட்டத்தின் பெயர், (7) அஞ்சலக எண் [PIN CODE] ஆகிய முழு விபரங்களையும் தெளிவாகக் குறித்து அனுப்புதல் வேண்டும். அப்போதுதான் இதழ்கள் தவறாமல் மாதா மாதம் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். பழைய சந்தாதாரர்கள், தங்கள் சந்தா எண்ணை மறவாமல் குறிப்பிடுதல் வேண்டும்.

—ஆசிரியர்

திருச்சிற்றம்பலக் கோவையார்

(கருத்துத் தொகுப்புச் சுருக்கம்) (முற்றொடர்ச்சி)

(17) வரைவு முடுக்கம்.

[தோழி, தலைவியை விரைவில் திருமணம் புரிந்து கொள்ள வேண்டுமென்று, தலைவனை வற்புறுத்திக் கூறுதல்.]

தோழி : இளங் குலைகளை உடைய வாழைத் தோட்டத்தின்கண் இனிய கனிகளைத் தின்று, இளைய சிறிய குரங்குகள், முதிர்ந்த குலைகளை உடைய வாழைத் தோட்டத்தினது, நல்ல குளிர்ந்த நிழலின்கண் அச்சம் சிறிதும் இன்றி, இன்பமாக உறங்குகின்ற மலைநாட்டுத் தலைவனே! திருச்சிற்றம்பலத்தில் உள்ள கூத்தப் பெருமானை நினையாத பாவிகளைப் போல, வேல் போலும் கண்களை உடைய தலைவியானவள், அயலவர் கூறும் பழிச் சொற்களாலும், தாயின் காவல் மிகுதியாலும், நின்னைச் சந்திக்க முடியாமல் அழுது வருந்திக் கொண்டிருக்கின்றாள். அவளது வருத்தத்தை மாற்றுதற்கு, நீ செய்ய இருக்கும் அருளின் திறம் யாதோ? தலைவனே! நீ எமது தலைவியை விரைவில் திருமணம் புரிந்து கொண்டருள்க.

(இள மந்திகள், இடையறாமல் இளங்குலையும் செழுங் குலையுமாகப் பழுக்கின்ற செழுவிய வாழைத் தோட்டத்தின்கண் உள்ள கனிகளை நுகர்ந்து, எதற்கும் வெருவாது வாழை நிழலின்கீழ் இன்புற்றுத்துயிலும் மலைநாடனே! என்று தோழி விளித்தமை, தலைவியானவள் நீ திருமணம் புரிந்து கொள்ளுதலால் இடையறாது பேரின்பம் துய்த்து, தாயின் கடுஞ் சொல்லாலும், காவல் மிகுதியினாலும் உள்ளம் நடுங்க வேண்டாமல், நின் தாள்நிழற்கீழ் மகிழ்ச்சியுற்று வாழ்தல் வேண்டும் என்றும் உள்ளுறை நுண் பொருள் உணர்த்தும்.] *(250)*

தலைவன் : தோழியே! இதோ இக் குன்றினிடத்துத் தோன்றும் இந்த இடம், தில்லை வானவன் ஆகிய சிவபெருமானின் வானகத்தைச் சேர்ந்த தெய்வ மகளிர் வாழும் இடமோ? அல்லது யானையின் தந்தங்களை வேலியாக அமைத்த குடிசைகளை உடைய குறத்தியர்கள் வாழும் இடமோ? இன்னதென்று நீ கூறுக. யான் உமது தலைவியை எட்டவும் இயலாத தெய்வப் பெண் என்றே கருதி இருக்கின்றேன்; அவள் வாழும் இடத்தையும், தெய்வ மகளிராகிய அரம்பையர்கள் வாழும் இடம் என்றே கருதியுள்ளேன். அத்தகைய தெய்வநலஞ் சான்ற நும் தலைவியை, எளிய இநந் நிலவுலகில் வாழும் யான் எங்ஙனம் மணம்புரிந்து கொள்ள வல்லேன்? *(251)*

தோழி. தலைவனே! இளஞ் சிறுவர்கள் தம் கையிலுள்ள கவண் கற்களைத் தப்பாமல் குறிவைத்து எறிய, அவைகள் பட்டதனால் பெரிய தேன்கூடுகள் சிதைந்து, இழும் எ[illegible]னும் ஓசையுடன் பெருகி வரும் தேன் வெள்[illegible]மானது, எமது சிறிய குடிசைகளை ஈர்த்[illegible] செல்லுகின்ற, இம் மலையிடமானது, எ[illegible]தையின் முற்றூட்டு ஆகும்; எம்மு[illegible]வினர்கள், இம்மலையில் வாழும் [illegible] ஆவர்; எம்மைப் பெற்ற தாயும் குற[illegible]தைச் சேர்ந்தவளே; யாங்களும் இம்மலை[illegible] உள்ள பெரிய தினைப்புனத்தைக் காவல் புரிந்து வருகின்ற, எளிய குறவர் குலப் பெண்களே ஆவோம். இங்ஙனமாகவும், நீர் எம் தலைவியைத் தெய்வ மகள் என்று வீணே புனைந்து கூறுகின்றீர்! எம் தலைவியை நீர் மணம் புரிந்து கொள்ள விரும்பாமையினாலேயே, இங்ஙனம் போலியாகப் புனைந்து கூறுகின்றீர் போலும்!

[இளஞ் சிறுவர்கள் எறிந்த கவண் கற்களால் தேன்கூடுகள் சிதைந்து, தேனடைகளினின்று பெருகும் தேன்வெள்ளம், குறவர்களின் சிறு குடிசைகளிற் பரவி ஈர்த்துச் செல்லும் மலையிடம் என்று, தோழி கூறியமை, அயலார் கூறும் பழிச் சொற்களால், நுமது மறைந்த களவொழுக்கம், பலரும் அறியப் பரவி வெளிப்பட்டுவிட்டது என்னும் உள்ளுறை நுண்பொருட் குறிப்பு உடையதாகும்]. *(252)*

அன்புமிக்க தலைவனே! பலவாகிய சிங்கங்கள், யானையாகிய உணவைத் தேடிக் கொண்டு, இராப்பொழுதுகளில் காடுகளில் பல இடங்களிலும் சென்று தேடிப் பார்க்கின்ற, கொடிய இருள்மிகுந்த வழியின்கண், நீ தனிமையாக, வேலை ஏந்திக்கொண்டு, அச்சமின்றி எம் தலைவியைக் காண வருகின்றாய். அஃது எமக்கு நீ செய்யும் பெருந் தலையளியேயாகும். ஆயினும் அத் தலையளித் திறனும், சிவபிரானின் தில்லையம்பலத்தைப் பணியாத பாவிகள் வருந்துமாறு போல், எம்மைப் பெரிதும் அச்சமுற்று வருந்துமாறே செய்கின்றது. ஆதலின் இங்ஙனம் நீ கொடிய காட்டு வழியில், இருளின்கண் வந்து துன்புற வேண்டாதபடி, நீ எம் தலைவியை விரைவில் மணம் புரிந்து கொண்டு இன்புற்று வாழ்க. *(253)*

ஆண் யானைகள், யானை பிடிப்போர் அகழ்ந்து மறைத்து வைத்த பெருங் குழிகளில் விழுந்து வருந்துகின்ற துயரத்தை நீக்கும் பொருட்டு, அவற்றின் துணையாகிய பெண் யானைகள், அங்கு மலைச்சாரலில் வளர்ந்துள்ள பெரிய பெரிய மரங்களைத் தம் துதிக்கையால்

முறித்து எடுத்து வந்து அக்குழிகளில் இட்டு நிரப்பி மீட்பதற்கு முயன்று பிளிறுகின்ற, வான ளாவிய பெரிய மலைகளை உடைய நாடனே! அன்னப் பெடை போலும் நடையை உடைய, சிவகாமி அம்மையுடன் சேர்ந்து விளங்கும் திருமேனியைக் கொண்ட சிவபிரானின், திருச் சிற்றம்பலத்தை நினையாத பாவிகளைப் போல, நாங்கள் துன்பப்படுமாறு, நீ பகற் காலத்தில் பலரும் காணுமாறு எம்மிடம் வந்து எமக்குச் செய்கின்ற அருளானது, எமக்கு மிகப் பெரிய பழியாக வெளிப்படுகின்றது. ஆதலின் நீ எங்கள்பால் பகலில் வாராது ஒழிக. (254).

தலைவனே! யாளி சிங்கம், புலி முதலிய வற்றிற்கு அஞ்சி, குழிந்த கண்ணை உடைய யானைகள் ஓரிடத்தே திரண்டு நின்று கொண்டு அவ்விடத்தினின்று சிறிதும் புடை பெயர்ந்து செல்லாத அச்சம் விளைவிக்கின்ற இரவு நேரத் [illegible]ன் இருளில், கண்ணீர் பெருக்கி மயில்போல [illegible]ந்தித் துவளுகின்ற எம் தலைவியின் காரண [illegible] நீ வருதலை ஒழிக. நின் திருவடிகளைக் [illegible] தொழுது, நின்னை யான் இரந்து திரு[illegible]து வேண்டிக் கொள்கின்றேன். இருள் [illegible]க்க இரவின்கண், அச்சந் தரும் கொடிய காட்டு வழியின்கண், எம்பொருட்டு நீ வருதல், எமக்குப் பெருந் துயரத்தை விளைவிக்கின்றது. ஆதலின், பகலில் மட்டுமேயன்றி இருள்மிக்க இரவில் மறைந்தும்கூட, நீ இங்கு வருதல் வேண்டா (255)

தோழி: (தலைமகளுக்குக் கூறுதல்போலச் சிறைப்புறமாகத் தலைவனுக்குக் கூறுதல்)

கார் காலத்து மயிலைப் போன்ற தலைவியே! தில்லையின் வளவிய எழிலை உடைய, இந்தக் கானற் சோலையின்கண், நள்ளிரவில் மணிகளை உடைய ஒரு பெரிய நெடிய தேர் வந்ததாகல் வேண்டும் என்று, உற்றுநோக்கி உணர்ந்து கொண்ட நம் அன்னை, தன் கண்கள் சிறிதே சிவந்து, என்னையும் பார்த்தனள். சினந்து பார்த்த நம் அன்னையினுடைய சிவந்த கண் களின் குறிப்பு, தலைவன்பால் நாம் கொண் டுள்ள களவொழுக்கத்தினை, அவள் அறிந்து கொண்டனள் என்பதனை உணர்த்திற்று. (256)

தோழி: தலைவனே! தனது நீண்ட திருமுடி யின்கண் கங்கை நதியாகிய பெண்ணை வைத்து, உமையம்மையையும் தன் திருமேனியின் இடப் பாகத்தில் வைத்தருளிய சிவபெருமானின், தில்லைமாநகர் போலும் அழகிய எம் தலைவி, வானளாவி ஓங்கி உயர்ந்த பொழிலின்கண் உள்ள, நல்ல மாங்கனிகளை ஆண்குரங்கானது தேனில் தோய்த்து, தன் பெண் குரங்காகிய மந்தியினுடைய வாயில் கொடுத்து உண்பித்து, இரண்டுமாக மகிழ்தலைக் கண்டு, தன் மனம் பெரிதும் சோர்ந்தாள். அறிவில்லாத விலங்கு களும்கூட, தம்முள் ஒன்றனை ஒன்று விரும்பிக் காதலித்து இன்பமுற்று மகிழ்கின்றன. இத்த கையதோர் அன்பும் இன்பமும், நம் காதலர்க்கு நம்மிடத்தில் நிகழ்கின்றிலவே என்று, நீ தன்னை மணம் புரிந்து கொள்ளாமையை நினைந்தே, எம் தலைவி அங்ஙனம் மனம் சோர்ந்து வருந்தினள் போலும். (257).

கொன்றை மலரை அணிந்த சடையை உடையவனும், திருச்சிற்றம்பலத்தில் திரு நடம் புரிபவனுமாகிய, சிவபெருமானின் தில்லை மாநகரின்கண், அணைக்கு அடங்காமல் பொங் கிப் பெருகுகின்ற, நீர்மிகுந்த சிறந்த நகரத்தை இரவிற் காவல் புரிகின்ற, சிவந்த வேல் ஏந்திய இளைஞர்களின் காவற் பறை ஒலிக்குந்தோறும், இள முலைகளையும், பசுமையான வளையல் களையும் உடைய, எம் தலைவியின் வேல்போலும் கூரிய கண்கள், ஒரு சிறிதும் உறக்கங் கொள் ளாமல் வருத்தமுற்றன. (258)

தலைவனே! தீய மக்களாக உள்ளவர்கள் நினைந்து தியானிக்காத, தில்லையம்பலவனின் திருவடிகளுக்கு, அன்பில்லாதவர்களின் தீவினை களைப் போல, இருள் மிகவும் செறிந்து புலராத இரவும்; மின்னி முழங்கிப் பொழிவது போலத் தோன்றி, பொழியாது ஒழிந்த மழையும் ஆகிய இரண்டும்; எங்களுக்குப் புண்ணின்கண் நுழை யும் வேலும்கூட, மெல்லிய இனிய மலராகி விடும் வண்ணம், மிகக் கொடிய துன்பத்தை விளைவிக்கின்றன. இதற்கு நும் மலையிடத்தில் ஒரு மருந்தும் இல்லையோ?

['மருந்து' என்றமையால் வரையிடத்து என்றுள். வருத்துதலே யன்றித் தணித்தலும் உண்டோ? என்பதுபட நின்றதனல், 'மருந்தும்' என்னும் உம்மை, எச்ச உம்மையாகும். இரவின் கண் வந்து செல்லா நிற்பவும், இரவு உறு துயரம் தீர்க்கும் மருந்து இல்லையோ என்று வினவியதனுல், எம் தலைவியை நீ வரைந்து கொள்ளுதல் அல்லது இவ்வாறு ஒழுகுதல் அதற்கு மருந்தாகாது என்று, தோழியின் குறிப் பைப் புலப்படுத்திற்று.] (259)

மேகங்கள் நெடுங்காலம் தொடர்ந்து மழை பெய்யாமல் அற்றுப் போனதனுல், அவைகள் மழை பொழிதல் வேண்டுமென நினைந்து, மலைகளில் வாழும் குறவர்கள், தம் மலைமேல் உறையும் தெய்வங்களைப் பரவிப் பூசை நிகழ்த்தி, ஆரவாரம் செய்கின்ற மலை நாட்டையுடைய தலைவனே! பவளம்போன்ற திருமேனியை உடைய சிற்றம்பலவனை நினை யாதவர்கள், வருந்துமாறு போல, இடையில் மேகலையை அணிந்த எம் தலைவி வருந்துமாறு, நீ பகற் காலத்தில் இங்கு வந்து செய்கின்ற அருளானது, மிகவும் பழிச் சொல்லாகப் பரவித் துயர் விளைவிக்கின்றது. அதனுல், நீ பகற் காலத்தில் இங்கு வருதலை விடுக!

[''மலை நிலத்தில் வாழும் குறவர் குல மக்கள், தெய்வத்தைப் பரவிப் பூசைகள் நிகழ்த்தும் பருவத்தில், தெய்வம் பராவிப் பூசைகள் புரியாமல், பின்னர் மழைபெய்யாமல் பொய்த்ததனுல், துன்பமுற்று, அதன் பின்னர் தெய்வத்திற்குப் பூசைகள் நிகழ்த்துவர்; அது போலத் தலைவனுகிய நீயும் இதுபோது எம் தலைவியை மணந்து கொள்ள விரைந்து முற் படா தொழியின், அவளை எய்துவதற்கு இய லாத நிலை நேர்ந்து, பின்னர் மணந்து கொள் ளப் பெரிதும் துன்புற்றுப் பெரு முயற்சிகள் செய்ய நேரும்'' என்பது, ''இறவரை உம்பர்கள் கடவுட் பராய் நின்று, எழிலி உன்னிக் குறவர் கள் ஆர்க்கும் குளிர் வரை நாட!'' எனவரும் தோழியின் விளியில் அமைந்துள்ள குறிப்பு நுண்பொருளாகும். (260)

தலைவனே! சுழித்துப் பொங்கிப் பெருகி வரும் கங்கை வெள்ளத்தினை அடக்கித் தன் சடைமுடியின்கண் வைத்தவனும், தனக்குத் தொண்டு செய்தற்கண் நீங்காதபடி, என்னைத் தன்னருளால் செய்தருளியவனும் ஆகிய சிற்றம்பலவன், தன் திருக்கையில் வைத்துள்ள மானின் விழியைப் போல, அழகிய மருண்ட கண்களை உடைய, மென்குழலாள் ஆகிய எம் தலைவியின்பால், நீ பகற்காலத்தில் வரின், உண்மையாகவே ஊரில் மிகுந்த பழிச் சொற்கள் விளையும். இராக் காலத்தில் வரின், நின்னைச் சந்தித்தல் எமக்கு அரிதாக இருக்கும். ஆதலின் நீ இரவில் வந்தும் எமக்குப் பயன் இல்லை. அதனால் பகல் இரவு என்னும் இருபொழுதுகளிலுமே, நீ வருதல் வேண்டா. விரைவில் எம் தலைவியை மணந்து கொள்ளுதலே, நீ செய்தற்குரிய செயலாகும்.

[''சுழியா வரு பெருநீர், சென்னி வைத்தான்'' என்றது, இறைவன் பரந்துவரும் கங்கை நதியின் பெரும் புனலை வேகம் தணித்துத் தன் சென்னியின்கண் வைத்தாற்போல், நில்லாது பரக்கும் நெஞ்சை உடைய என்னைத் தன் அருட்கண் அடக்கினான் என்பது கருத்து.] (261)

இருள் நிறைந்த வாழைக் காட்டின்கண், வருக்கைப் பலாவின் பழச் சுளைகள் விழுதலால், கதலிக் கனியொடு கூடிப் பெருகிவரும் தேன் வெள்ளத்தினை, இளம் குரங்குகள் தம் அறியாமையினால் பெரிதும் வருந்தி, அதன்பின் மயக்கமுற்றுச் சோர்ந்து துயில்கின்ற, பெரிய மலைநாட்டுக்குத் தலைவனே! முழு நிலாவானது குறைவின்றி மண்டலமாக ஒளிபரப்பி, பரிவேடம் கொண்டு நின்றது. வேங்கை மரங்கள் பூத்துப் பொன்மாலை போல அழகுற்றுத் தோன்றுகின்றன. இனி நீ நினைத்தால், நினக்குச் செய்தற்கியலாத அரிய செயல் யாதுளது?

[''மை ஆர் கதலி வனத்து, வருக்கைப் பழம் விழுதேன், எய்யாது அயின்று இள மந்திகள் சோரும் இரும் சிலம்பா'' என்ற தோழியின் விளி, ''நின் மலைக்கண் வாழும் எளிய விலங்குகளும்கூட, வருக்கைப் பலாவும் வாழைக் கனியும் கலந்து விளைந்த தேன் வெள்ளத்தினை இயல்பாகப் பெற்று இன்புற்றுத் திளைத்து வாழும் எனின், நினக்கு அரியது யாது? நீ நினைந்து முனைந்தால், எங்கள் தலைவியை விரைவில் மணந்து இன்புறலாம் என்னும் குறிப்பு நுண்பொருளை உணர்த்திற்று.

வேங்கை மரங்கள் பூக்கும் காலமும், சந்திரன் வானத்தில் மண்டலித்துப் பரிவேடம் கொள்ளும் முழு நிலா நாளும், மலைநிலத்து மக்கள் திருமணத்துக்குரியனவாகக் கருதுவர். ''வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன; நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே'' எனவும் ''வருமோ தோழி நன்மலை நாடன், வேங்கை விரிவிடம் நோக்கி, வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே'' எனவும் வரும் அகநானூற்று வரிகளும்; ''புனவர் புனமயில் அனைய மாதரொடு மைந்தரும் மணம்புணரும் நாள், கனகம் என மலர்கள் அணி வேங்கைகள் நிலவு காளத்தி மலையே'' எனவரும் திருஞானசம்பந்தர் பாடல் வரிகளும், இங்கு நாம் நினைந்து இன்புறுதற்குரியன.] (262)

தலைவியே! தேமாஞ் சோலைகள் நிறைந்த தில்லைச் சிற்றம்பலத்தின்கண் தேவர்கள் வணங்கவும், நாமெல்லாம் விரும்பவும் ஐந்தொழிற்றிருக்கூத்து ஆற்றும் சிவபெருமான்பாற் சென்று புகலடையாத பாவிகளைப் போல, ஊரவர் கூறும் அவரால் வரும் நாணத்தினையும், தம்மைக் காணாமையால் நாம் எய்தும் ஆற்றாமையையும் அடைந்து வருந்தும் நம் அல்லலை, நம் தலைவர் தாமாக அறிந்து தீர்க்கிலர் என்றால், தோழியாகிய யான் சென்று அவர்பால் சொல்லும் தன்மைகள் யாவை உள? வேண்டுமாயின், நீயே சென்று அவர்பாற் கூறவேண்டுவன கூறிக் கொள்க. (263)

கார்காலத்து மயிலைப்போலும் தோழியே; சிற்றம்பலவரைப் புகலடையாத பாவிகளைப் போல் நாம் வருந்த, சிங்கமானது தன் ஆண் யானையைச் சென்று தாக்காதபடி, பெ[illegible] யானையானது இரண்டிற்கும் இடையே சென்[illegible] புகுந்து தடுத்துக் காக்கும் காட்டு வழியின் [illegible] நீங்கள் இங்கு எவ்வாறு வந்தீர்கள்? [illegible] பரிவுடன் வினவுபவரை நாம் பெற்[illegible] கரடிகள் தமக்கு உணவாகிய கு[illegible] பெறுவதற்காகப் பெரிய புற்றுக்க[illegible] கின்ற, செறிந்த இருளின்கண்ணும், அஞ்சா[illegible] சென்று அத்தகையோரை அடைதல், நமக்கு அரியதொரு செயல் அன்று. ஆனால் அவ்வாறு கொடிய இருளிலும் அஞ்சாது நாம் சென்றோமாயினும், நம்மை இங்கு நீங்கள் எவ்வாறு வந்தீர்கள்? என்று, தலைவர் நம்மை அன்புடன் வினவுகின்றிலரே! நான் என் செய்வேன்? (264)

யானைகளின் தந்தங்களிலிருந்து உதிர்ந்த முத்துக்களை, மலைநிலத்தில் வாழும் மகளிர், கள்ளிற்கு விலையாக முகந்து கொடுக்கின்ற சிறந்த மலைநாடனே! கங்கை நதியாகிய பெண்ணிற்குக் கொடுத்தற்குப் பொருந்திய, நல்ல பெரிய சடை முடியை உடைய சிவபெருமானின் தில்லையில் உள்ள, அழகிய மயில்போன்ற எம் தலைவி, எம் உறவினரின் காவல்களையெல்லாம் கடந்து, நின்னை விரும்பி, நின் வயத்தளாய், நின்னையே நினைந்து பொலிவழிந்து வருந்துகின்றாள். இங்ஙனம் அவள் தன் தன்மையை இழந்து, இத் தன்மையை எய்தி வருந்துவது எற்றுக்கு? பெறுதற்கரிய எம் தலைவியை நீ மணந்து கொள்ள முற்படாமல் இவ்வாறு இகழ்ந்து மதித்துக் காலந் தாழ்த்துதற்குக் காரணம் என்னை?

[''அணைதற்கு அரிய யானையின் தந்தத்தினின்று உதிர்ந்த முத்துக்களின் அருமையைக் கருதாமல், மலைநாட்டு மகளிர் தமக்கு மகிழ்ச்சியைத் தரும் கள்ளைப் பெறுவதற்கு முத்துக்களைத் தருவர்; அதுபோல நீயும் எம் உறவினரின் காவலைக் கடந்து, நின்பாற் காதல் வயப்பட்டுள்ள எம் தலைவியின் அருமை பெருமைகளை நினையாமல், நினக்கு இன்பஞ் செய்யும் களவொழுக்கம் காரணமாக, அவளை இகழ்ந்து மதித்துக் காலந் தாழ்த்துகின்றாய்'' என்பது, ''வாரிக் களிற்றின் மருப்பு உகும் முத்தம், வரை மகளிர் வேரிக்கு அளிக்கும் விழுமலை நாட'' எனவரும் தோழியின் விளியில் அமைந்துள்ள உள்ளுறையாகும்.] (265)

(வரைவு முடுக்கம் முற்றிற்று)

*தணிகைப் புராணக் கவிதை நலம்

ந. ரா. முருகவேள், M.A, M.O.L.

முன்னுரை:

அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழியின்கண் உள்ள இலக்கிய வகைகள் பல [illegible]றுள், தலபுராணங்கள் என்பனவும் சிறப்பு [illegible]னவாகும். ஆழ்வார்களாலும் நாயன்மார் [illegible] புகழ்ந்து பாடித் துதிக்கப் பெற்ற [illegible] அனைத்திற்குமே, தலபுராணங்கள் [illegible] அவைகள் அனைத்துமே, ஒவ்வொரு [illegible]கையில் இலக்கியச் சிறப்பும் சுவையும் வாய்ந்தனவாகும்.

தணிகைப்புராணம்:

எனினும், அவற்றுள்ளும் மிக்க பெருஞ் சிறப்புடையனவாகக் காஞ்சிப் புராணம், கோயிற்புராணம், திருவிளையாடற்புராணம், திருக்குற்றாலப் புராணம், அருணசலபுராணம், திருவானைக்காப்புராணம், சீகாளத்திப்புராணம்: திருநாகைக் காரோணப்புராணம், பேரூர்ப் புராணம், சேதுப்புராணம் முதலியன, அறிஞர்களால் பெரிதும் மதித்துப் போற்றப்படுகின்றன. இவைகளுள் தணிகைப்புராணம், மிகவும் தலைசிறந்த தொன்றாகப் புலவர் பெருமக்களால் பெரிதும் புகழ்ந்து போற்றப்படுகின்றது.

தணிகைப்புராண ஆசிரியர்:

கச்சியப்ப முனிவர் என்பவர், இற்றைக்கு ஏறத்தாழ 180 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த மாபெருங் கவிஞராவர், இவரைக் ‘கவி ராட்சசர்’ எனக் கற்றுவல்ல புலவர் பெருமக்கள் பாராட்டிப் புகழ்ந்து போற்றுவர். சிவஞான போதச் சிற்றுரை, பேருரை முதலிய பல பெருநூல்கள் இயற்றியருளிய மாதவச் சிவஞான சுவாமிகள் அவர்களின் மாணக்கர்களுள் தலைசிறந்தவர் இவரே. இவ்விருவரும் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த, சிறந்த சைவ சித்தாந்தச் சான்றோர்களாவார்கள். கந்தபுராணம் இயற்றியருளிய கச்சியப்பசிவாசாரியர், இவரின் வேறுவர்; அவர் இவருக்கு மிகவும் முற்பட்டு வாழ்ந்தவர்.

கச்சியப்ப முனிவர் இயற்றியருளியுள்ள நூல்கள் பல. திருவானைக்காப்புராணம், பூவாளூர்ப் புராணம், விநாயகபுராணம், காஞ்சிப் புராணத்தின் இரண்டாம் காண்டம் ஆகிய வேறு பல பெருநூல்களையும் இவர் இயற்றியுள்ளார். இவர் தம் நூல்களில், அறிஞர்கள் எல்லோராலும் இனிதெடுத்து மிகப் பெரிதும் பாராட்டப் பெறுவது, செய்யுள் நலங்களிற் சிறந்த திருத்தணிகைப் புராணம் ஆகும்.!

தணிகைப் புராணத்தின் கவிதைநலம்:

கச்சியப்ப முனிவரின் நூல்கள் பலவற்றுள்ளும், கலைநலம் பெரிதும் சிறந்தது தணிகைப் புராணம். அந்நூல் புலமையின் பெருஞ் சிகரம் எனப் பிறங்குகின்றது; கவிதை நலம் கனிந்தது; சமயக் கருத்துக்கள் நிறைந்தது; தத்துவ நுண் பொருள்கள் செறிந்தது; இயற்கை வருணனைகளாலும், இனிய உவமைகளினாலும் சைவ சித்தாந்த உண்மைகளை ஆங்காங்கே அழகுற விளக்கிச் செல்வது; சங்க நூல்களின் நடை நலம் சான்றது; கற்பனை வளம் சிறந்து நற்பெரும் சுவை பயப்பது; இலக்கண இலக்கியப் பெரும் புதையல் எனத் திகழ்வது; கற்று வல்லோர்க்கும் தெற்றென விளங்காத கடுமை வாய்ந்தது! இத்தகைய சிறப்புகள் மிக்க தணிகைப் புராணத்தின் இனிய கவி நலங்கள், ஒரு சிலவற்றை மட்டும் இங்குக் காண்போம்.

விநாயகர்:

விநாயகப் பெருமானுக்கு ஐந்து திருக்கைகள் உண்டு. அதனால் அவருக்கு ‘ஐங்கரன்’ என்றும் ஒரு பெயர் வழங்கும். கச்சியப்ப முனிவர் தம் கற்பனைத் திறனால், விநாயகப் பெருமானின் ஐந்து திருக்கைகளும் செய்யும் செயல்களை அழகுற விளக்குகின்றார்; விநாயகர் தம்முடைய ஒரு கையில் மோதகம் ஏந்தியிருக்கின்றார். மற்றொரு கையில் ஏகதந்தம் ஆகிய ஒற்றைக் கொம்பை வைத்திருக்கின்றார். பிறிதொரு கையில் நீர் நிறைந்த பொற்கலசம் இருக்கின்றது. எஞ்சிய இரண்டு கைகளில், அங்குசமும் பாசமும், அமைந்துள்ளன. மோத

*திருத்தணிகையில் வழக்கம்போல் ஜனவரி மாதம் முதல் தேதியில் நடைபெறும் “திருப்படித் திருவிழா” நிகழ்ச்சியினை ஒட்டி, இக்கட்டுரை வெளியிடப் பெறுகின்றது.

—ஆசிரியர்.

கம் ஏந்திய கையைத் தமக்காகவும், ஒற்றைக் கொம்புள்ள கையினைத் தேவர்களைப் பாதுகாக்கவும், பொற்கலசம் ஏந்திய கையினைத் தம் தாய் தந்தையர்களாகிய பார்வதி பரமேசுவரனை வழிபடுவதற்காகவும், அவர் பயன்படுத்துகின்றார்.

இங்ஙனம், ஒவ்வொரு கையினையே பிற செயல்களுக்காகப் பயன்படுத்தும் விநாயகப் பெருமான், தம்முடைய அடியார்களுக்காக மட்டும், இரண்டு கைகளை ஒருங்கே தொழிற்படுத்துகின்றார். தம்மை வழிபடும் அன்பர்களாகிய அடியார்களின் துன்பங்களை ஒழித்து இன்பங்களையே தரும் இயல்பினராகிய அவர், ஆணவமலம் என்னும் கொடிய யானையை அடக்கிப் பிணித்து, அடியார்கட்கு அருள் புரிவதற்காக, அங்குசம் பாசம் என்னும் இரு கருவிகளைத் தம் இரு கரங்களிலும் ஏந்திக் கொண்டுள்ளார்.

''பண்ணியம் ஏந்தும் கரம்தனக்கு ஆக்கிப்,
பால்நிலா மருப்புஅமர் திருக்கை
விண்ணவர்க்கு ஆக்கி, அரதனக் கலச
வியன்கரம் தந்தைதாய்க்கு ஆக்கிக்,
கண்ணில் ஆணவவெங் கரிபிணித்து அடக்கிக்
கரிசினேற்கு இருகையும் ஆக்கும்
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபற்
சகாயனை, அகம்தழீஇக் களிப்பாம்''

விநாயகப் பெருமான், தம் அடியார்களின் மீது கொண்டுள்ள எல்லையற்ற பேரருளின் திறனை, இப்பாடலில் இனிதெடுத்து விளக்கியிருக்கும் கச்சியப்பரின் அழகிய கவிதை நலம் பெரிதும் போற்றுதற்கு உரியது.

சிவபெருமான்:

சிவபெருமான், உலகம் இன்புறத் தம் திருமேனியிலுள்ள ஞாயிறு திங்கள் தீ என்னும் ஒளிகளால் புறஇருளை நீக்குகின்றார். அசைவில் பொருள், அசையும் பொருள் ஆகிய இரண்டினையும், நம் கண்களுக்குப் புலப்படுத்துகின்றார். உயிர்களைப் பற்றியுள்ள ஆணவமலம் ஆகிய அகஇருளைத் தம் அருள் ஒளியினால் அழித்தருள்கின்றார். உயிர்களிற் கலந்து நின்று, தன்னையும் தம்மையும் உணர்த்தி, அவ்வுயிர்களுக்குப் பெத்தம் முத்தி என்னும் இருநிலைகளிலும், கண்டும் காட்டியும் உதவி புரிகின்றார்.

இவற்றின் பொருட்டு எக்காலமும் இடைவிடாமல், சிவபெருமான் ஐந்தொழிற்றிருக்கூத்து ஆடுகின்றார். அத்திருக்கூத்தின் பெரும் பயனை ஆருயிர்கள் அனைத்தும் நேரே பெறும் ஆற்றலுடையன அல்ல. ஆதலின், அருள் வடிவமாகிய அம்பிகையின் வாயிலாக அதனை உயிர்கள் பெற்று உய்யும்படி, 'மாதொரு பாகம் நோக்கி' மன்னு சிற்றம்பலத்தே, ஆதியும் முடிவும் இல்லாத தம் அற்புத ஐந்தொழிற் கூத்தினை, அம்பிகைக்குக் காட்டியருளுகின்றார். இத்தகைய சிவபிரானின் திருவடிகளைப் பணிவோம்.

''உலகிருள் உருவத்து ஒளிகளின் இரித்து, ஆங்கு
உறுபொருள் எவற்றையும் தெரித்து,உள்
விலகிருள் முழுதும் அருள்கொடு துமித்து,
விராய்ஒளிர் தன்னையும், தன்னால்
இலகுயிர் தனையும் தெரித்து, அறிவுறுகுய
இயல்பின்எக் காலமும் பிறழாது
அலகில்அற் புதக்கூத்து, உமையினைக் காட்டும்
அடிகள்சே வடிகளைப் பணிவாம்''

இப்பாடலில், சைவ சித்தாந்தக் கருத்து நுட்பங்கள் பலவற்றைக் கச்சியப்ப முனிவர் சுருக்கி விளக்கிக் காட்டி யிருத்தல் காணலாம்.

அம்பிகை:

சிவமெனும் செம்பொருள், சத்தியைச் சேர்ந்த வழியே எச்செயலும் செய்யவல்லதாகும். சக்தி இல்லையேல் சிவமும் இல்லை. சிவ சக்தியினாலேயே இவ்வுலகப் பொருள்கள் எல்லாம் இயங்குகின்றன. ''அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்'' என்பது சிவஞான சித்தியார். அண்டகோடிகளையெல்லாம் ஈன்றெடுத்தவள் அம்பிகையே யாயினும், அவள் என்றும் இளமை குன்றா எழில் பொருந்திக் கன்னியாகவே விளங்குகின்றாள். ''பவன் பிரம்மசாரி யாவன் [illegible]மொழி கன்னியாவாள்'' என்பது பெ[illegible] திருமொழி. இத்தகைய சிவசத்தியே [illegible] மூர்த்திகளாகவும், அவர்கள் இயற்றும் மு[illegible] தொழிற்கும் மூல காரணமாம் முதல்வியாகவும் விளங்குகின்றாள். இவ்வுண்மையைப் பாமர மக்களும் இனிதுணரும்படி, அவள் தன் திருக்கைகளில் ஏந்தியுள்ள பொருள்களே சான்று பகர்கின்றன.

அம்பிகை தன் கைகளில் பிரமனுக்குரிய சிருக்கு மணிவடம்; திருமாலுக்குரிய சங்கு சக்கரம்; உருத்திரனுக்குரிய சூலம்; முருகனுக்குரிய வேல்; விநாயகருக்குரிய அங்குச பாசம்; மன்மதனுக்குரிய கரும்புவில் மலர்க்கணை; என்பவைகளை ஏந்தியிருக்கின்றாள். அவைகளால் அம்பிகை ஒருத்தியே. பிரமன் திருமால் உருத்திரன் முருகன் விநாயகர் மன்மதன் ஆகியவர்களின் தொழில்களுக்கு எல்லாம் காரணமாதலை நாம் தெளிந்து கொள்ளலாம்.

''சீர்அணி சிருக்கு மணிவடம், சங்கு
திகிரி, சூலப்படை, இலைவேல்,
போர்அணி பாசம் அங்குசம், கழைவில்
பூங்கணை, வேறுவேறு அணியா,
ஆரணன் மாயன் அரன் இபமுகத்தன்
அநங்கன் என்றிவர் தொழிற்கெல்லாம்
காரணம் ஆதல் தெளித்தருள் கொழிக்கும்
கன்னியை, உன்னி ஏத்தெடுப்பாம்!''

இப்பாடல் அம்பிகையின் அருள் நலனையும், திருவுருவச் சிறப்பினையும், அழகுற விளக்குதல் அறிந்து இன்புறத் தக்கது.

முருகன்:

இறைவன் எல்லாவற்றிலும் மேம்பட்டவன். ஒளிமயமாகத் திகழ்பவன். ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் என்னும் சூக்கும பூதங்கள் ஐந்திலும், அருவமாகக் கலந்து நிற்பவன். அவ்வியல்பினை அறிந்து கொள்ள மாட்டாத பாமர மக்களும் கூட, அதனை உணர்தற் பொருட்டுப், பருவடிவில் உருவ நிலையிலும் வைத்து உணர்த்

துவதே, முருகனின் தோற்றம் பற்றிய வரலாறுகும்.

சிவபிரானின் நெற்றிக்கண்ணினின்று வெளிப்பட்ட தீப்பொறிகள், முருகன் ஒளி வடிவினனுதலை உணர்த்தும். அப்பொறிகள் முதலில் விசும்பிற் பரந்து நிறைந்தன. அவற்றை வாயுதேவன் திரட்டிக் கொணர்ந்தான். அக்கினிதேவன் அவற்றை எடுத்துச் சென்றுன். அவன் அதனைத் தாங்கமாட்டாமையாற் கங்கை நதியில் விடுத்தான்; கங்கை நதியும் அதனைத் தாங்க இயலாமல், சரவணப் பொய்கையின்கண் விடுத்தது. அதன்கண் இருந்து எழுந்து புறம் போந்து, முருகன் நிலம் எங்கணும் சென்று திருவிளையாடல் புரிந்தான்.

உலகம் தோன்றுங்கால் விசும்பினின்று [illegible]ளியும், வளியினின்று தீயும், தீயினின்று நீரும், [illegible]ரினின்று நிலமும் ஆகிய ஐம்பூதங்களும் [illegible]என்றும்என வேதங்கள் கூறும். அம்முறையில் [illegible]ங்களுக்கெல்லாம் மூல முதற்காரணமாகிய [illegible]ன் தோற்றமும் நிகழ்ந்தருளியமை [illegible]ருற் காணலாம்.

[illegible]

[illegible]ங்குஒளியாய், விசும்புஆதி தொறும்இயலும்
தனதுஇயல்பை, உருவின் மாட்டும்
பாங்குபெறத் தெரித்ததுபோல், பலபொறியாய்ப்
பரமர்விழி பயந்த ஞான்று,
தேங்குஒளியாய், வெளிஅடர்ந்து, வளிதொடர்ந்[illegible]
ஒள்
ஒளிபடர்ந்து, தெளிநீர்ப் புக்கு,
நீங்கி விளையாட்டு அயர்ந்து, தணிகைஅமர்
பெருவாழ்வை நினைந்து வாழ்வாம்!''

முருகனின் திருவவதாரத் தத்துவ நுட்பத்தினைக் கச்சியப்பர் இப்பாடலில் விளக்கியிருக்கும் திறம் பெரிதும் போற்றத் தக்கது.

இயற்கைப் புனைவு:

ஒரு நல்லிசைக் கவிஞனின் கவிதைச் சிறப்பினை, அளந்தறிந்து சுவைத்து மகிழ்வதற்குப் பல வழிகளுண்டு. அவற்றுள் இயற்கைப் பொருள் நிகழ்ச்சிகளையும், காட்சிகளையும் அவர் எங்ஙனம் திறம்படப் புனைந்துரைத்து விளக்கியுள்ளார் எனக் கண்டறிவதும், ஒரு வழியாகும். இயற்கையில் ஈடுபாடும், அதனைப் புனைந்துரைக்கும் ஆர்வமும், கவிஞர்கள்பால் பொதுவாகக் காணப்படும் சிறப்பியல்பாகும்.

''கவிஞனின் கண்ணனது, மிகச் சிறந்ததோர் உள்ளெழுச்சியினல் விண்ணிலிருந்து மண்ணையும், மண்ணிலிருந்து விண்ணையும், சுற்றிச் சுழன்று பார்வை இடுகின்றது; காணவும் அறியவும் படாத பொருள்களின் இயல்புகளைக் கற்பனை உணர்வானது உருவாக்கித் தந்து கொண்டிருக்க, அவைகளைக் கவிஞனின் எழுதுகோல், எழில் கனிந்த கலை ஓவியங்களாக இனிது வடித்துக் கொடுக்கின்றது: காற்றென நுண்ணியவாய்க், காணப்படாமையின் இல்லனவாய் விளங்கும் அவற்றுக்கு, ஓர் உறைவிடமும் பெயரும் அளிக்கின்றது.''

''வல்லதம் விழியின் வீச்சால்,
மண்ணொடு விண்ணும் எல்லாம்
ஒல்லையின் அளந்து தேர்ந்து,
கற்பனை உணர்வின் மாண்பால்
இல்லதொன் றனையும் ஊர்பேர்
இயைபுறப் படைத்துக் காட்டும்,
நல்லியற் கவிஞர் செய்கை
நலமெலாம் நவிலற் பாற்றே?

—தமிழாக்கம், ந. ரா. மு.

எனச் செகப்பிரியர், கவிஞர்களின் இயல்பினை இனிதெடுத்து விளக்குகின்றார். இதனுல் கவிஞர்களின் கவித்திறனுக்கும் இயற்கைப் புனைவுக்கும், மிக்க பெருந் தொடர்புண்மை இனிது பெறப்படும்.

இங்ஙனம் இயற்கையைப் புனைந்து பாடுவது எல்லாக் கவிஞருக்குமே இயல்பாயினும், கச்சியப்ப முனிவர் இயற்கைப் புனைவுகளில் தத்துவக் கருத்துக்களையும், இலக்கணச் செய்திகளையும், இடைஇடையே மிகுதியாகச் செறித்துப் பாடும் தனிப் பெரும் சிறப்பியல்பு, மிக்குடையவராகத் திகழ்கின்றார். அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்குக் கண்டு இன்புறுவோம்.

தொண்டை நாடு; அரசன்:

திருத்தணிகை என்னும் தலம், தொண்டை நாட்டிலுள்ளது. ஆதலின் அந்நாட்டைக் கச்சியப்ப முனிவர் புகழ்ந்து பாட முற்படுகின்றார். புகழ் ஆகிய கவசம் அணிந்து, பல்வகை அறங்கள் ஆகிய படைக் கருவிகள் தாங்கி, வாய்மை சீலம் நோன்பு பக்தி என்னும் நாற்பெரும் பண்புகளையும், தேர் கரி பரி காலாள் என்னும் நாற்பெரும் படைகளாகக் கொண்டு, தீவினைகள் ஆகிய பகைவர்களை அடக்கி வெற்றி கொண்டு, ஓர் அரசனைப் போல விளங்குவது தொண்டைநாடு, என்கின்றார்!

''கொடைப்புகழ்க் கவசம் போர்த்துக்
கூர்அறப் படைகள் ஏந்தி,
விடைப்பரு வேழம் பொற்றேர்
விரைசெலற் சீலம் நோன்பு
படைப்பரும் சீலம் நோன்பு
பத்திமை யாகப் பாய்த்திக்
கடைப்படு பாவத் தெவ்வைக்
கடந்தது, அத் தொன்மை நாடு!''

தொண்டை நாடு, தாய்:

தொண்டை நாடு, தொல்காப்பியம் முதலிய தமிழ் இலக்கண நூல்கள் கூறுதற்கு ஏற்ப, ஐந்திணை வளங்களும் ஒருங்கே நிரம்பி அமைந்தது. முல்லை நிலமாகிய காடுகள் சூழ்ந்ததாகவும், குறிஞ்சி நிலமாகிய மலைகள் தளங்

"The poet's eye in a fine frenzy rolling,
Doth glance from heaven to earth, from earth to heaven;
And as imagination bodies forth
The form of things unknown, the poet's pen
Turns them to shapes, and gives to airy nothing
A local habitation and a name."

—WILLIAM SHAKESPEARE,
A Mid-Summer Night's Dream

களாகவும், மருத நிலமாகிய சோலைகள் கைகளாகவும், நெய்தல் நிலமாகிய பெரிய கடல் கலாபமணிந்த அல்குலாகவும் அமைந்துவிளங்க, நல்லொழுக்கம் என்னும் கணவனை மணந்து கலந்து, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் மக்களைப் பெற்றெடுத்துப் பாதுகாத்துவளர்த்து, ஒரு தாய்போல விளங்குவது தொண்டைநாடு, எனப் பாடுகின்றார் அவர்!

''கருங்குழல் கானில் தோற்றிக்,
கதிர்முலை மலையில் தோற்றி,
இருங்கைபூம் பணையில் தோற்றி,
எரிமணிக் கலாப அல்குல்
பெருங்கடல் தோற்றி, வேத
ஒழுக்கம் ஆம் கணவற் பின்னி,
ஒருங்குநாற் பயனும் மக்கள்
உயிர்த்து அளிப்பது, அந்நாடு.''

பாலாறும், முருகனும்:

தொண்டை நாட்டிற் பாயும் ஆறுகளில், தலை சிறந்தது பாலாறு. அவ்வாற்றங்கரையிலேயே வளர்ந்து வாழ்ந்து மகிழ்ந்தவர், கச்சியப்ப முனிவர். ஆதலின் அதன் சிறப்பினைப் பல்வகைகளில் புகழ்ந்து பாடுகின்றார் அவர்!

பாலாறு, ஒருவகையில் குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகனைப் போன்று விளங்குவது. முருகன் காந்தள் மலர் வேய்ந்து கொள்வான்; களி மயில் ஊர்ந்து கடாவிச் செல்வான்; வேலன் வெறியர் களம் சென்று விளையாடுவான்; இங்குலிகம் போன்ற செந்நிறமுடையவனுகச் சேந்தன் என்னும் பேர் பெற்றுத் திகழ்வான்.

அதுபோலப் பாலாறும் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தோடி வருங்கால், காந்தள் மலர்களை வேய்ந்து கொண்டு வருகின்றது. சோலைகளிலுள்ள மயில்கள் அஞ்சிப் பறந்து போகும்படி செய்கிறது. வேலன் வெறி அயர் களம் போன்ற பல இடங்களிலும், பாய்ந்து பரவித் தேங்கி நிற்கின்றது. இங்குலிகம் போன்ற செம்மண்ணின் சேறு மிகுந்து சிவந்து தோன்றுகின்றது. இவ்வாற்றுல், முருகனைப் போன்றே விளங்கும் சிறப்புடையது பாலாறு.

''காந்தள்அம் போது வேய்ந்து,
களிமயில் கடாவிப், பல்பூ
வேய்ந்தமென் குழற்கொம்பு அன்னுர்
வெறியயர் களத்துச் சார்ந்து,
வாய்ந்தஇங் குலிகச் சேற்றின்
வயங்குதன் உருவம் தோற்றிப்,
போந்துலாய்ச் சிலம்பிற் செவ்வேள்
போன்றது, பாலி நீத்தம்!''

பாலாறும், திருமாலின் தசாவதாரங்களும்:

இம்மட்டோ! முல்லை நிலக் கடவுளாகிய திருமாலையும் போன்று திகழ்கின்றது பாலாறு. திருமால் எடுத்தருளிய அவதாரங்கள் பத்து. அவற்றைத் 'தசாவதாரம்' என்பர். பாலாறு வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடிவருங்கால், பல பொருள்களைக் கவர்ந்து அடித்துக் கொண்டு வருகின்றது. அதன் அலைகள் வானளாவி ஓங்கி எழுகின்றன. அதன் வெள்ள நீர் மிகுதியாகப் பெருகிச் சென்று பாய்ந்து கடலைக் கலக்குகின்றது; வயல்களுக்குச் சென்று பாய்ந்து குடைந்து, பரவி வளம் படுத்துகின்றது. வெள்ளத்தின் பெருக்கால் ஊர்கள் அழிந்து போய்விடுமோ என்ற அச்சத்தை உண்டாக்குகின்றது.

பாலாறு வில் கலப்பை பரசு ஆகிய கருவிகளை அடித்துக் கொண்டு வருவது, இராமன், பலராமன், பரசுராமன் ஆகிய அவதாரங்களை நினைப்பிக்கின்றது. இடையர் சேரிகளில் பாய்ந்து அவர்களை அஞ்சச் செய்வதனுல், இரணியனை அச்சுறுத்திய நரசிங்கம், பால் தயிர் வெண்ணெ ஆகியவற்றைக் கவர்ந்து கொண்டு வருவதால் கிருஷ்ணன் என்னும் அவதாரங்களை நினைவூட்டுகின்றது. அலைகள் வானளாவி ஓங்கி எழுவதனுல், வாமனனுய் வந்து நெடியோனுய் மாறிய திரிவிக்கிரமன் என்னும் அவதாரம் போன்றுள்ளது. கடலில் பாய்ந்து கலக்குதலால் மச்சம் கூர்மம் என்னும் அவதாரங்களின் நிலையில் விளங்குகின்றது. நிலங்களில் பாய்ந்து குடைந்து வளம் படுத்துதலால், வராகம் அவதாரத்தை ஒத்துள்ளது. வெள்ளப் பெருக்கால் ஊர் அழிந்து விடுமோ என்று, அஞ்சும் நிலையில் பொங்கி எழுந்து வருவது கலியுக முடிவில் தோன்ற உள்ள கற்கி என்னும் அவதாரத்தைக் கருதச் செய்கின்றது.

''சிலைஅலம் கணிச்சி வெண்ணெய்
தெவ்வி, வான்நிமிர்ந்து, வாரி
நிலைபுகுந்து உழக்கி, ஒல்கும்
நிலன்எடுத்து இருவி, அண்டர்
உலைதர வெறிகொண்டு எற்றி,
உறுகலி முடிவு தோற்றித்,
தலைவரும் மாயோன் என்னத்
தவழ்ந்தது, புறவத்து அம்மா!''

இங்ஙனம் திருமாலின் அவதார நிலைகள் பத்தையும் நினைப்பிக்கும் வண்ணம், பெருக்கெடுத்தோடிப் பாய்ந்து வருவது பாலாறு, எனக் கற்பனை வளம் பொலியப் பாடுகின்றார் கச்சியப்ப முனிவர்!

பாலாறும், இந்திரனும்:

பாலாறனது விண்ணவர்க்கு அரசனுகிய இந்திரனையும், ஒருவகையில் ஒத்து விளங்குகின்றது. இந்திரன் தன் உடம்பெல்லாம் செந்தாமரை மலர் போன்ற கண்கள் உடையவனுக இருப்பான். அவன் தன் கையில் வச்சிராயுதம் பற்றி இருக்கின்றான் ஐராவதம் என்னும் வாரணத்தை (யானையை) மேற்கொண்டு, உலாப் போதருகின்றான். கற்பக மரச் சோலையில் தங்கிக் களிப்புறுகின்றான். அவன், ஒரு காலத்தில் கற்சிறை (மலைகளின் இறக்கை) களை அறுத்துச் சிதறும்படி செய்தான். இந்திரனின் இச்செயல்கள் பலவும், பாலாற்றுக்கும் ஏற்புடையனவாக விளங்குகின்றன.

பாலாறு செந்தாமரை மலர்களை அடித்துக் கொண்டு, அவற்றின் கள் (தேன்), தன் மெய்யெல்லாம் பொலியத் தோற்றி வருகின்றது. வைரம் ஏறிய மரங்களையும், வைரமணிக் கற்களையும் கொழித்துக் கொண்டு பாய்கின்றது. வாரணங்கள் (சங்குகள்) பலவற்றை, மேற்

கொண்டுள்ளது. நீண்ட கற்சிறை (அணைக் கட்டு) களை, மோதிச் சிதைக்கின்றது. இவ் வொப்புமைத் தன்மைகளால், இந்திரனைப் போலப் பாலாறு விளங்குகின்றது.

''பூத்தசெந் தாமரைக் கண்
மெய்யெல்லாம் பொலியத் தோற்றித்,
தூத்தகை வயிரம் பற்றித்,
துலங்கு வாரண மேற்கொண்டு,
காத்தலை மருவி, நீண்ட
கற்சிறை பலவும் சிந்தி,
ஏத்துவிண் அரசன் என்ன,
இறுத்தது பவழப் பாங்கர்!''

பாலாறும், வருணனும்:

வருணன் மேற்றிசைக் குரியவன். கடலுக் ...ம் அதனைச் சார்ந்த நிலத்துக்கும், உரிமையும் ...மையும் உடையவன். நெய்தல் நில மக்கள் ...ன் வலை வளம் தப்பின், புன்னை மரங்களின் ... மகர மீனின் கொம்பை நட்டு, சுறு ... காடியைச் செலுத்தி, வருணனை வழி ...ங்குவர். வருணனின் இவ்வியல்புகள், பாலாற் ...கும் உள்ளனவாகக் கச்சியப்ப முனிவர், ...கவின் மிகக் கற்பனை செய்து பாடுகின்றார்.

பாலாறும் மேற்குத் திசையின் தொடர் புடையது; கடல்போலப் பரவி நிற்பது; புன்னை மரச் சூழல்களில் துன்னிப் பாய்வது; மகர மீன்களை வெள்ளத்தின்கண் உந்திக் கொண்டு வருவது. இவ்வியல்புகளினால் பாலாறு வருணனைப் போன்று வயங்குகின்றது.

''மேற்றிசைத் தொடர்பி னேடும்,
விரிகடற் பயிற்சி காட்டித்,
தோற்றெழில் நாகச் சூழல்
துன்னும்அத் தொடர்பும் காட்டி,
ஏற்றெதிர் மகரம் உந்தி,
எந்நில வளனும் போற்றி,
ஆற்றல்சால் வருணன் என்ன
அணைந்தது, கானற் பாங்கர்!''

நெற்பயிரும், முத்தேவரும்:

வயல்களில் நெற்பயிர் செழித்து வளர்கின்றது. விதையினின்று தோன்றும் முளையானது, வெண்மையாக விளங்குகின்றது. அத்தன்மை உயிர்களுக்கு அருள் புரிதலைச் செய்யும் சதாசிவனின் வெண்மை நிறத்தை ஒத்துள்ளது. நெல்லின் முளை பயிராகி, மரகதம் போலப் பசுமை நிறத்துடன் தழைத்து வளர்வது, மறைத்தற்றொழிலைச் செய்யும் மகேசுவரனின் நீல வடிவத்தை நினைப்பிக்கின்றது. பயிரானது வளர்ந்து கதிர்கள் விட்டுச் செம்பொன்னின் நிறம் பெற்றுத் திகழ்வது, உயிர்களுக்கு இளைப் பாறுதற் பொருட்டு ஓய்வளித்தலாகிய அழித்தற்றொழிலை ஆற்றும் உருத்திரனின் சிவந்த வடிவத்தைப் போன்று காணப்படுகின்றது. கதிர்களின் சுமையால் பயிர்கள் தளர்வுற்றுத் தலை சாய்ந்து வளைந்திருத்தல், மகவை ஈன்ற மகளிரின் தனங்களைப் போன்றுள்ளது.

''மன்னும் சதாசிவன்என்று உடலம் வெண்மை
வாய்த்து, ஈசன் எனநீல உருவம் பூண்டு,
பின்னர் அரன் எனச்சிவந்த வடிவம் தாங்கும்
பெற்றிமைபோல், வித்துமுளை வெண்மை ஆகி,
நன்னர் மரகத ஒளியின் பயிராய் ஓங்கி,
நயந்து அதற்பின் செம்பொன்நிற வயக்கம் மாண்டு,
கொன்னும்விளை வாய்ப்பழுத்து, நாளும் தாழ்ந்த;
குழவி பயந்தவர் மணிப்பூண் கொங்கை என்ன!

நெற்பயிரும், காமாட்சியம்மையும்:

இங்ஙனம் உழவர் விதைத்த சிலவிதைகளை ஏற்றுப் பல மடங்காகப் பெருக்கி வயல்கள் நெல்லை விளைவித்தமை, சிறந்த சிவஞானியர்களின் கையில் அளித்த சிறிய தானமும், பெரும் புண்ணியத்தை விளைவிக்கும் உண்மையினை உணர்த்துவதாக உள்ளது. முதலில் பசுமை நிறமாயிருந்த நெல் மணிகள், பின்னர்ப் பொன்னிறம் அடைந்து, அறங்கள் பலவும் ஆற்றப் பயன்படுகின்றன. அவ்வியல்பு, பசுமை நிறம் கொண்ட பார்வதி தேவியானவள் கயிலையினின்று நீங்கி, கவுரம் என்னும் பொன்னிறம் கொண்ட திருமேனியையுடைய காமாட்சியம்மை ஆகிக் காஞ்சிபுரம் அடைந்து, 32 அறங்களும் ஆற்றியருளிய அருட்பெருஞ் செயலைக் குறிப்பிக்கின்றது.

''பரவுசிவ ஞானம்உணர் அடியார் செங்கைப்
படுத்தபொருள் பெரும்பயனைப் பயக்கு மா போல்,
விரவும் உழவர்கள் அளித்த சிலகொண்டு, ஆற்ற
வியன்பணைகள் பெரும்பயனு விளைத்த சாலி,
மரகதமெல் உருத்தணந்து, கவுர மேனி
வயங்கி, அறம் பற்பலவும் வளர்க்கும் ஆற்றால்,
இரவிவளர் கதிர்ச்சடிலக் குழகன் பாங்கர்
இருந்தருளும் உமைமாதும் புரையும் அன்றே!''

இப்பாடல் ''பாத்திரமறிந்து பிச்சை இடு' என்றபடி, தக்க சான்றோர்களுக்குச் செய்யும் தானம், ''தான் சிறிதாயினும் தக்கோர் கைப் பட்டக்கால் வான் சிறிதாப் போர்த்து விடும்'' என்னும் உண்மையை அழகுற விளக்குகின்றது. மேலும், 'சிவஞானச் செயலுடையோர் கையில் தானம், திலம் அளவே செய்திடினும், நிலம் மலைபோல் திகழும்.....'' (278) எனவரும் சிவஞான சித்தியார் செய்யுட் கருத்தையும், இப்பாடல் அழகுற விளக்கியிருத்தல் காணலாம்.

நெற்பயிரும், சீவன்முத்தரும்:

நெற்பயிர் வளர்ந்து, கதிர்கள் தோன்றி முற்றிவிட்ட பின்னர், உழவர்கள் வயலில் உள்ள நீரை எல்லாம் பயிருக்குக் கேடு நேராமையின் பொருட்டு, வடித்து விட்டு விடுவர். இவ்வியல்பு, உடல் கருவி உலகம் நுகர்ச்சி என்னும் எல்லாவற்றோடும் கூடி இருந்தும், உலகப் பொருள்களை எல்லாம் சிவ மயமாகக் காணும் திறன் பெற்ற சீவன் முத்தர்கள், உலக நுகர்ச்சிகளில் தம் உள்ளத்தைச் செலுத்தாமல், அவற்றையெல்லாம் இயல்பாகத் துறந்து ஒழித்து விடும் சிறப்பினைப் போல விளங்குகின்றது.

''உடல்கருவி புவனமுறு போகம் எல்லாம்
உடங்கியைந்தும், சிவன்தோற்றம் ஒன்றே
காணும்
மடனகன்ற சீரடியார், நுகர்ச்சி யாதும்
மருவாமை ஒழித்துநிற்கும் வாய்மை ஒப்ப,
இடன்அகன்ற தளைகள்தொறும் விளைந்த சாலி
இரும்புனல் வேண்டாமை ஒழி பருவம்
நோக்கித்
தடநெடுந்தோள் உழவரெல்லாம் அண்மி, யாத்த
தண்புனலைக் கவிழ்த்துணக்கும் தொழிற் கண்
நின்றார்!''

இப்பாடல் சீவன் முத்தர்களின் இயல்பை இனிது விளக்குகின்றது. ''பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்'' எனவும் ''சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்'' எனவும் கூறும் சிவஞான சித்தியார் பாடல்களை அடியொற்றி, இப்பாடல் அமைந்து இருத்தல், நாம் அறிந்து பெரிதும் இன்புறத்தக்கது.

தணிகையின் சிறப்பு (உவமையும், உவமேயமும்):

தணிகையின் சிறப்புக்கு எல்லையில்லை. செல்வம், அழகு அறிவு ஆற்றல் அருள் முதலிய பண்பு நலங்கள் உடைய, எவரையேனும் சிறப்பித்துக் கூற விரும்புவோர், ''உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை'' என்னும் தொல்காப்பிய விதியின்படி, அவருக்கு முருகனையே உவமையாகக் கூறுவது மரபு. உவமேயத்தைவிட உவமையே எவ்வகையிலும் உயர்ச்சி யுடையதாகும் என்பது அறிஞர் துணிபு. ''தாமரை போன்ற முகம்'' என்னும் தொடரில், முகம் உவமேயம்; தாமரை உவமை. முகத்தின் அழகைச் சிறப்பிக்கத் தாமரை உவமையாக வந்திருந்தாலும், முகத்தின் அழகைக் காட்டிலும் தாமரையின் அழகே, மிகவும் சிறப்புடையது என்பதை யாவரும் உடன்படுவர். இதனால் உவமேயத்தினும் உவமையே சிறப்புடையதாதலை உணரலாம்.

முருகன் பிறருக்கு உவமையாகக் கூறத் தக்கவன். ஆனால் அவனுக்கு உவமையாகக் கூறத்தக்கவர், வேறு எவரும் இலர். தனக்கு உவமையில்லாதவன் முருகன். அதுபோல, அப்பெருமான் எழுந்தருளி விளங்கும் திருத்தணிகையும், பிற தலங்களுக்கு உவமையாகுமே அன்றி, அதற்கு இணையாக உவமை கூறத்தக்க தலம், இவ்வுலகில் எதுவுமில்லை. ஒப்புயர்வற்ற அத்துணைச் சிறப்பு அமைந்தது திருத்தணிகை!

''திரு விளங்கிய வனப்பினில் அறிவினில்
திறத்தினில் அருள்தன்னில்
ஒருவர் தங்களை உயர்த்தமுன் முருகனை
உவமை ஆக்குவர் ; அன்னான்
பொருவில் வள்ளியொடு ஆடிடம் ஆகிய
புகழ்த்தணிகையும், யாங்கும்
ஒரு நகர்க்கு அணி யுயர்த்தமுன் உவமையா
உரைப்பதால் எவராலும்!''

தணிகையும், மூவகைத் தத்துவங்களும்:

தணிகை நகரம் மூன்று பகுதிகளை யுடையது. புடைநகர், அசுத்தம் என்னும் தத்துவம் போலப் பொலிகின்றது. இடைநகர், சுத்தாசுத்தம் என்னும் தத்துவம்போல இலங்குகின்றது. இதற்கும் உள்ளே நின்ற அகநகர், சுத்தம் என்னும் தத்துவம்போலத் திகழ்கிறது. இம்மூன்று தத்துவங்களையும் கடந்து, தனிப்பெரும் சிறப்பில் விளங்கும் சிவபரம் பொருள் போல, இம் மூவகைப்பட்ட நகர்ப் பகுதிகளையும் கடந்து, மிகவும் ஓங்கித் தணிகை மலை விளங்குகின்றது.

''புடைநகர்த் தலை அசுத்த தத்துவம்எனப்
பொலிந்தது; வளஞ் சான்ற
இடைநகர்த் தலை இலங்கு சுத்தாசுத்தம்
எனப் பொலிந்தது; அஃதுள்ளால்
மிடைநகர்த் தலை சுத்ததத்துவம் என
விளங்கியது; அவை மூன்றும்
உடையதத்துவம் அவைகடந்து ஒளிர்வதுஒத்து
ஓங்கியது; உயர்குன்றம்!''

தணிகையும், மும்மூர்த்திகளும்:

தணிகையின் புடை நகரமானது வாள் ஈட்டி முதலிய படைக் கருவிகளை ... களின் பொருட்டுப் படைத்துக் கொடுப்பதனால் பிரமனைப் போலும்; ஆடவர் மாதர்களைக் காத்துப் போகங்களை விளைவிப்பதனால், இடைநகர் திருமாலை ஒக்கும்; தன்னை அடைந்தோரின் துன்பங்களைப் போக்கிக் குற்றங்களை அழிப்பதனால், அகநகர் உருத்திரனை நிகர்க்கும்.

''ஆய பல்படை ஆதிகள் ஆக்கலிற்
புடைநகர் அயன் போலும்;
மாய மென்மொழி மயக்கில் ஆடவர் துனி
மாதரை உயிர்காத்து
மேய போகங்கள் விளைத்தலின் இடைநகர்
விண்டு ஒத்திடும்; உற்றோர்க்கு
ஓய இன்னல்கள் அகன்கடை துடைத்தலின்
உள்நகர் அரன் நேரும்!''

தணிகையும், சதாசிவரும்:

தன்பால் வந்து அடுத்து நிற்பவர்களின் இளைப்பை நீக்குவதனால், புடைநகர் உருத்திரனையும்; மாதர்கள் மறைத்து நல்கும் இன்பம் நிறைந்த காதல் வாழ்வினை அளித்தலால் இடைநகர் மகேசுவரனையும், மக்கள் விரும்பும் பொருள்களையெல்லாம் வழங்கி அநுபவிக்கச் செய்வதனால் அகநகர் சதாசிவனையும், தனக்கு இணையாகக் கூறும்படி, தணிகை மா நகரம் விளங்குகின்றது.

''அடுத்துளோர் இளைப்பு அலர்கயப் பொழில்களால்
அனுக்கலால் அரன் போலும்;
மடுத்த மாண்எழிற் புடைநகர் மாதரார்
மறைத்து நல்கிடும் இன்பம்
தொடுத்த காதலின் இடைநகர் ஈசனைத்
துணையும்; வேட்டன துய்ப்பக்
கொடுத்து மேவலின் உள்நகர் சதாசிவக்
கொற்றவன் தனை நேரும்.''

தணிகையின் பல்வகைப் பொருள்வளம்:

(1) தணிகை மாநகரில், பாதலம் வரையில் மிகவும் ஆழமுற்று விளங்கியும் பொருள்களை மறைத்து நிற்பன, மதில்களைச் சூழ்ந்

துள்ள அகழிகள் மட்டுமல்ல; அறிஞர்கள் ஆராய்ந்து இனிது அமைத்த அரிய செய்யுட்களும் ஆகும்.

(2) முழங்கால் அளவும் தாழ்ந்து கிடந்தாலும் புகழத் தக்கனவாக விளங்குவன, மைந்தர்களின் பெரிய கைகள் மட்டுமே அல்ல; பலவகை அறச் செயல்கள் நிறைந்த அவர்களின் மனங்களும் ஆகும்.

(3) அறுக்கப்பட்டுக் கிடந்தும் அணிந்து கொள்ளப்படுவன, மாதர்கள் அணியும் வளையல்கள் மட்டுமே அல்ல; போர் புரியும் மத யானைகளின் தந்தங்களும் ஆகும்.

(4) சோலைகளின் உள்ளே விழுந்து [illegible]டந்தாலும் உயர்வு உடையன, மலர்கள் [illegible]ட்டுமே அல்ல; மகளிர் தம் கணவருடன் [illegible]டல் கொண்டு வீசி எறிந்த விலை யுயர்ந்த [illegible]ர்களும் ஆகும்.

[illegible]ங்குழ[illegible]

[illegible]து கிடந்தும் கரப்பது அகழ் அன்று; ஏனை
[illegible] அறிஞர் இனிதமைத்த அருஞ்செய்யுள்
தானும்;
தாழ்ந்து கிடந்தும், புகழ்தக்க, மைந்தர் தடம்
கரம் அன்று, அவர் அறஞ்சொல் நெஞ்சம்
தாமும்;
போழ்ந்து கிடந்தும் புனைவ வளை அன்று, ஏனைப்
பொருகளிற்றுக் கோடுகளும்; பொழிலின்
உள்ளால்
வீழ்ந்து கிடந்தும் உயர்வ மலர் அன்று; ஏனை
வியன்நகருள் வெறுத்த பொருள் பலவும்
அன்றே''

இப்பாடலில் நகரின் அகழிச் சிறப்பு, மக்களின் சிறப்பு, இயற்கை வளச் சிறப்பு, செல்வம் நிறைந்த இன்ப வாழ்வின் சிறப்பு, சான்றோர் செய்யுட்களின் சிறப்பு ஆகியவற்றை எல்லாம், கற்போர் உள்ளம் களிதுளும்பும்படி, கச்சியப்பர் பாடியிருத்தல் காணலாம்.

முடிவுரை:

இதுகாறும் விளக்கிய ஒருசில செய்யுட்களின் சுவைத்திறனைக் கொண்டே, கச்சியப்ப முனிவரின் கற்பனை நயம் செறிந்த கவிதை நலம் எத்தகையது என்பதனையும், தணிகைப் புராணத்தின் தமிழ்நலம் எத்துணை உயர்ந்தது என்பதனையும், யாவரும் எண்ணி உணரலாம். இன்னோரனைய இனிய கவிஞர் பெருமக்களையும், அவர்கள் இயற்றியருளிய தெய்வத் தீந்தமிழ்க் கவிதைகளையும் கற்றுச் சுவைத்துப் போற்றி வருவது, நம்மனோர் கடமையாகும்.

மதுரை அருள்மிகு
மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை

ஆலயக்கலை அரும்பொருளகம்

வரலாற்றுக்கு வழிகாட்டியாக நிற்கும், சிற்பங்கள், சித்திரங்கள், வண்ண ஓவியங்கள், கைவினைப் பொருட்கள் யாவும் கண்டு களிக்க, அன்பர்கள் வருகை தரவும். தீபாவளி, பொங்கல் நாட்கள் தவிர, ஆண்டு முழுவதும் காலை 6 மணியிலிருந்து மாலை 8 மணி வரை, இந்த ஆலயக்கலை அரும்பொருளகம் திறந்திருக்கும். நபர் 1-க்கு நுழைவுக் கட்டணம் — 50 பைசா

ஆர். திருவேங்கடசுவாமி,
உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி,
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

செங்கற்பட்டு மாவட்டக் கோயில்கள் பற்றிய குறிப்புக்கள்

ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

செங்கற்பட்டு மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், காஞ்சிபுரம் வட்டம், மதுராந்தகம் வட்டம், சைதாப்பேட்டை வட்டம், திருப் பெரும்புதூர் வட்டம், திருத்தணி வட்டம், திருவள்ளூர் வட்டம், பொனேரி வட்டம் என் னும் எட்டு வட்டங்களைத் தன்னகத்தே கொண் டது. இவற்றுள் முதற்கண் செங்கற்பட்டு வட்டத்திலுள்ள முதன்மையான கோயில் களைப் பற்றிமட்டும், இங்கு இயன்ற அளவு காண்போம்!

(1) மண்ணிவாக்கம்

மண்ணீசுவரர் கோயில் :

தாம்பரத்திற்கு அடுத்த வண்டலூர் நிலை யத்திலிருந்து, இரண்டுகல் தொலைவில் மண்ணி வாக்கம் கிராமம் உள்ளது. அங்குள்ள சுவா மிக்கு மண்ணீசுவரர் என்பது பெயர். இக் கோயில் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. 150 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த வேதகிரி முதலியார் என்பவர், இதற்குத் திருப்பணிகள் செய்துள்ளார். இக் கோயிலி லுள்ள நந்தி, மேற்கு நோக்கி இருக்காமல், கிழக்கு நோக்கியுள்ளது. இங்குப் பழைய கல் வெட்டு ஒன்று காணப்படுகின்றது. அதனால் இக்கோயிலின் பழமை புலனாகின்றது. கோயில், ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. பரம் பரையல்லாத பூசகர் ஒருவர், இக்கோயிலில் இருவேளைகள் பூசை செய்கின்றார். கோயிலுக்கு நன்செயும் புன்செயுமாக 40 ஏக்கர் நிலங்கள் உள்ளன. ஆண்டுவருவாய் சுமார் 4000 ரூபா. மார்கழி மாதத்தில் திருவாதிரை ஆருத்திரா தரிசனவிழா நிகழ்கிறது. இக்கோயிலின் ஆட்சி மூன்று அறங்காவலர்களிடம் உள்ளது.

(2) நந்திபுரம், நந்திகேசுவரர் கோயில் :

வண்டலூருக்கு அடுத்த கூடுவாஞ்சேரி நிலையத்திலிருந்து, இரண்டு கல் தொலைவில், நந்திவரம் அல்லது நந்திபுரம் என்னும் கிராமம் உள்ளது. இவ்வூர் நந்திவர்மன் என்னும் பல் லவ மன்னனின் பெயரில் அமைந்தது. ஆதலின் நந்திபுரம் என்னும் பெயர் பெற்றது. கும்ப கோணத்திற்கு அருகில் உள்ள நாதன்கோயில் என்பதும், நந்திபுரம் என்றும், நந்திபுர விண்ண கரம் என்றும் வழங்குதல், இங்கு நினைவுகூரத் தக்கது. இங்குத் திருநந்திதேவர் சிவபெருமானை வழிபட்டு, அவரைத் தாங்கவும், சிவகணங் களுக்குத் தலைமை பெறவும், கயிலைமால்வரை யைக் காக்கவும், வரம் பெற்றார் என்பது வரலாறு. நந்திதேவர் வரம் பெற்ற [illegible] ஆதலின் 'நந்திவரம்' எனவும் கூறுவர். ஊ[illegible] பெயர் நந்திபுரம். கோயிலின் பெயர் நந்தி கேச்சுரம். இங்குள்ள சிவலிங்கத் திருவுருவம், பல்லவர் காலத்துச் சிவலிங்கங்களைப் போலப் பெரியதாக அமைந்துள்ளது. சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த திருநாவுக் கரசர், தம்முடைய "அடைவு திருத்தாண்டகம்" என்னும் திருப்பதிகத்தில்,

''நாடகம் ஆடிடம் நந்திகேச்சுரம், மாகாளேச்சுரம்
நாகேச்சுரம், நாகளேச்சுரம், நன்கான
கோடீச்சுரம், கொண்டீச்சுரம், திண்டீச்சுரம்,
குக்குடேச்சுரம், மக்கீச்சுரம், கூறுங்கால்
ஆடகேச்சுரம், அகத்தீச்சுரம், அயனீச்சுரம்,
அத்தீச்சுரம், சித்தீச்சுரம், அந்தண் கானல்
ஈடுதிரை இராமேச்சுரம், என்றென்று ஏத்தி
இறைவனுறை சுரம்பலவும் இயம்பு வோமே''

எனவரும் திருத்தாண்டகத்தில், நந்திகேச்சுரம் என்னும் வைப்புத்தலமாக, இதனைக் குறிப் பிட்டுள்ளார். இதனால் இத்தலத்தின் பழமை யும் பெருமையும் புலனாகும். கோயில் ஒரு ஏக்கர் நிலப்பரப்புடையது. இலிங்கம் சுவயம்பு. கோயிலுக்கு நன்செய் புன்செய்களாக 45.29 ஏக்கர் நிலங்கள் உள்ளன. பரம்பரை உரிமை இல்லாத குருக்கள், இங்குக் காலை மாலை இரு வேளைகளில் பூசை செய்து வருகின்றார். கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. சுவாமி பெயர் நந்தி கேசுவரர். அம்பாள் சௌந்தர நாயகி. இங் குள்ள சண்டேசுவரர் திருவுருவம் மிகவும் அழகு வாய்ந்தது. கோயிலுக்கு முன்புறம் திருக்குளம் ஒன்று உள்ளது.

இக்கோயிலில் அறங்காவலராகப் பல ஆண்டுகள் இருந்து பணியாற்றி மறைந்த தவத் திரு மலையாள ஞான குருசுவாமிகள் அவர் களின் சமாதிக்கோயில், கோயிலுக்கு வடபுறத் தில் அமைந்துள்ளது. அவர் வாழ்ந்து வந்த திருமடமும், அதனைச் சார்ந்த நந்தவனமும், இப்போது சிதைந்து பழுதுபட்டுள்ளன. ஊருக்குக் கிழக்கே மல்லிகேசுவரர் கோயில்

பழமையானதாகப் பழுதடைந்திருந்தது. அஃது இப்போது ஒரு சிறிய கோயிலாகப் புதிது அமைக்கப்பெற்று, அன்பர்களின் உதவியால் பூசைகள் நடத்தப்பெற்று வருகின்றது. அங்குள்ள அம்பாளின் பெயர் மரகதவல்லி. அக்கோயிலை ஒட்டி வேணுகோபால சுவாமி சந்நிதி ஒன்றும், அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் இவ்வூரில் பிள்ளையார்கோயில், செங்கழுநீர் அம்மன்கோயில், தருமராசர் கோயில், குளக்கரைப் பிள்ளையார்கோயில், புதுப்பாளையத்தம்மன் கோயில் ஆகிய சிறு சிறு கோயில்களும் உள்ளன.

நந்திகேசுவரர் கோயிலில், ஆண்டுதோறும் ஐப்பசியில் கந்தர்சஷ்டி விழா, மார்கழியில் ஆருத்திரா தரிசனவிழா, கொண்டாடப்பெற்று வருகிறது. பல ஆண்டுகளுக்கு முன்னர்ச் சித்திரா பௌர்ணமி விழாவும், சிலகாலம் நடைபெற்று வந்தது. நடராஜர் சுப்பிரமணியர் முதலிய விக்கிரகங்கள் உள்ளன. தற்போது சிலகாலமாக வாரவழிபாடு, திருவாதிரை வழிபாடுகள் ண்டபெற்று வருகின்றன. நந்திகேசுவரர் கோயில் அறநிலையத்துறையினரால் நியமிக்கப்பெறும் அறங்காவலர்களின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. கோயிலுக்கு 45 ஏக்கர் நிலங்கள் இருந்தும். கோயிலின் வருவாய் பெருக்கப்படவில்லை. ஆண்டு வருவாய் சுமார் 1500 ஆகவே இருந்து வருகின்றது. அண்மையில் திருப்பணிகள் சில செய்யப்பெற்றுக் கும்பாபிஷேக விழாவும் நடத்தப் பெற்றது. சந்தனமல் சவுகார் என்னும் அன்பரால், தென்புறவாயிலும் கோபுரமும், அமைத்துத் தரப் பெற்றுள்ளன. சிவா முதலியார் என்னும் கிருஷ்ணசாமி முதலியார் நவக்கிரக சந்நிதியைக் கட்டித் தந்துள்ளார். கம்மவார் குல நாயுடு அன்பர் ஒருவர் அம்பாள் விமானத் திருப்பணி புரிந்துள்ளார்.

(3) முட்டுக்காடு, வேம்படி விநாயகர் கோயில் :

இது வண்டலூர் நிலையத்திலிருந்து 16 கல் தொலைவிலும், செங்கற்பட்டிலிருந்து 24 கல் தொலைவிலும் உள்ள முட்டுக்காடு என்னும் கிராமத்தில் உள்ளது. இதற்குப் போக்குவரவு வசதிகள் உள்ளன. வேம்படி விநாயகர் கோயில் ஒருசென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இதற்கு அருகில் வேம்படி அம்மன், நாகாத்தம்மன் கோயில்கள் உள்ளன. கோயிலின் ஆண்டு வருவாய் 2000 ரூபா. வெள்ளிக்கிழமைகளில் மட்டும் பூசை நடைபெறுகிறது. ஆடி ஆவணி மாதங்களில், ஆண்டு விழாக்கள் நடைபெறுகின்றன.

(4) கோவளம், கைலாசநாதர் கோயில் :

வண்டலூர் நிலையத்திலிருந்து 15 கல் தொலைவில் உள்ள கோவளத்தில் உள்ளது. போக்குவரவு வசதிகள் உள்ளன. கோயில் அரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. மாத ஊதியம் பெறும் குருக்கள் ஒருவரால், நாள்தோறும் பூசை நடைபெறுகிறது. 5.5 ஏக்கர் நிலம் உள்ளது. ஆண்டு வருவாய் சுமார் 600 ரூபா. இங்கேயே ஆஞ்சநேயசுவாமி கோயில் ஒன்றும் உள்ளது. ஆஞ்சநேயர் மேற்குநோக்கி, நின்ற கோலத்தில் கைகளைக் குவித்துக் கொண்டுள்ளார். கோயிலின் பரப்பு 2.5 சென்ட். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர், போரூரான் நாயக்கன் என்பவர், சில திருப்பணிகளைச் செய்தார். தீபம் ஏற்றுதலைத் தவிர வேறு பூசை யில்லை. ஆண்டு வருவாய் ரூ. 280. கார்த்திகைக் கிருத்திகையில் ஆண்டுவிழா நடத்தப் பெறுகிறது. இக்கோயில்கள் அறங்காவலர் குழுவினரால் நிர்வகிக்கப்பெற்று வருகின்றன.

(5) குளத்தூர்,

திருநாராயணப் பெருமாள் கோயில் :

இது சிங்கப்பெருமாள்கோயில் நிலையத்திலிருந்து, 2 கல் தொலைவில் உள்ளது. 80 ஆண்டுகளுக்கு முன்னர் 0.5 ஏக்கர் நிலப்பரப்பில் இது கட்டப்பெற்றுள்ளது. நன்செய் புன்செய்களாக 10.44 ஏக்கர் நிலங்கள் உள்ளன. ஆண்டு வருவாய் சுமார் 1000 ரூபா. மாத ஊதியம் பெறும் பட்டாசாரியர் ஒருவரால், தினமும் பூசை செய்யப்படுகிறது. அறநிலையத்துறையினர் நியமிக்கும் மூன்று அறங்காவலர்கள், இக்கோயிலை மேற்பார்த்து வருகின்றனர். இவ்வூரிலேயே கல்யாணநாதப் பெருமாள் கோயில் என்ற மற்றொரு கோயிலும் உள்ளது. இது 36 சென்ட் நிலப்பரப்பில் அமைந்திருக்கின்றது. இதற்கு 19 ஏக்கர் நிலங்கள் உள்ளன. ரூ. 2000 மதிப்புள்ள நகைகள் உள்ளன. பரம்பரை உரிமையுள்ள பட்டாசாரியர் ஒருவர், தினமும் இருமுறை பூசை செய்கின்றார். புரட்டாசி மாதத்தில் வேதாந்த தேசிகர் உற்சவம் நடைபெறுகின்றது. அறநிலையத்துறை நியமிக்கும் இரண்டு அறங்காவலர்கள் இதனை நிர்வகித்து வருகின்றனர்.

(6) பாண்டூர் ஆதிகேசவப் பெருமாள்,

கைலாசநாதர் கோயில்கள் :

களத்தூர் நிலையத்திற்கு எட்டு கல் தொலைவில், பாண்டூர் உள்ளது. ஆதிகேசவப் பெருமாள் உபயநாச்சியாருடன் எழுந்தருளியுள்ளார். கைலாசநாதர் கோயிலில் திரிபுரசுந்தரி அம்பிகை, விநாயகர் முருகர் நவக்கிரகங்கள். ஆகிய திருவுருவங்களும் உள்ளன. ஆதிகேசவப்பெருமாள் கோயில் 25 சென்ட் நிலப்பரப்பிலும், கைலாசநாதர்கோயில் 20 சென்ட் நிலப்பரப்பிலும் அமைந்துள்ளன. மூலவர் பெருமாள் நின்றகோலத்தில் உள்ளார். பெருமாள் கோயிலில் பட்டாச்சாரியரும், கைலாசநாதர் கோயிலில் குருக்களும், முறையே பூசை செய்து வருகின்றனர். இவர்களுக்குப் பரம்பரை உரிமையில்லை. சிவன்கோயிலுக்கு 20 ஏக்கரும், பெருமாள்கோயிலுக்கு 13 ஏக்கரும் நிலங்கள் உள்ளன. அவைகளிலிருந்து ஆண்டுக்கு முறையே 25 கலமும் 13 கலமும் நெல் கிடைக்கின்றது. சிவன்கோயிலில் மார்கழித் திருவாதிரையிலும், பெருமாள்கோயிலில் சித்ரா பௌர்ணமியிலும் விழாக்கள் நடை பெறுகிறன்ன. முன்பு இக்கோயில்கள் ஜமீன்தாரரின் பொறுப்பில் இருந்தன. இப்பொழுது அறநிலையத்துறை நியமிக்கும் இரண்டு அறங்காவலர்களால் நடத்தப் பெற்று வருகின்றன.

(7) கலிவந்தப்பட்டு,
இலட்சுமிநாராயணப் பெருமாள் கோயில்:

சிங்கப்பெருமாள்கோயில் நிலையத்திலிருந்து 5 கல் தொலைவில் உள்ளது. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு இக்கோயில் கட்டப்பெற்றது. கோயிலின் பரப்பு 2 சென்ட். பட்டாச்சாரியர் ஒருவர் தினமும் பூசை செய்கின்றார். விழாக்கள் எதுவும் நடைபெறுவதில்லை. தனிப்பட்ட அன்பரொருவர் இதற்கு 10 ஏக்கர் நிலம் நன்கொடை வழங்கியுள்ளார். ஆண்டு ஒன்றுக்கு 5 வண்டி நெல் கிடைக்கின்றது. ஓர் அறங்காவலர் இக்கோயிலை மேற்பார்வை செய்து வருகின்றார்.

(8) காயிரம்பேடு,
கரியமாணிக்கப் பெருமாள் கோயில் :

கூடுவாஞ்சேரி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவில், நெல்லிக் குப்பம் சாலையில் உள்ளது. போக்குவரவு வசதிகள் உள்ளன. இக்கோயில் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்றது. அரை ஏக்கர் நிலப்பரப்புடையது. நன்செய் புன்செய் நிலங்களாக 10.25 ஏக்கர்கள் உள்ளன. ஆண்டு வருவாய் ரூ. 300. பட்டாச்சாரியர் ஒருவர் தினமும் பூசை செய்கின்றார். அவருக்கு 1.10 ஏக்கர் நன்செய் நிலம் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. அறநிலையத்துறை நியமிக்கும் அறங்காவலர் மூவர் உள்ளனர்.

(9) காட்டாங்குளத்தூர், காளத்தீசுவரர் கோயில்:

இது காட்டுப்பாக்கம் எனவும் வழங்கும். கூடுவாஞ்சேரிக்கும், சிங்கப்பெருமாள் கோயிலுக்கும் இடையில் அமைந்துள்ள ஓர் நிலையமாக, இவ்வூர் அமைந்திருக்கின்றது. இங்குள்ள கோயில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப்பட்டது. கோயிலின் பரப்பு 80 சென்ட். இதன் ஆண்டுவருவாய் சுமார் 500 ரூபா. ஐந்து ஏக்கர் பரப்புள்ள தாவர சொத்துக்கள், இக்கோயிலுக்குச் சொந்தமாக உள்ளன. பரம்பரைப் பூசை உரிமையுள்ள குருக்கள் ஒருவர், தினமும் பூசை செய்கின்றார். பங்குனி உத்திரத் திருவிழா நடைபெறுகிறது. அப்பொழுது சுவாமியும் அம்பாளும் வீதியுலா எழுந்தருளுவர். தீபாராதனைக்கு 12 பைசாவும், அர்ச்சனைக்கு 25 பைசாவும், அபிஷேகத்திற்கு ரூ. 1.50-ம் வசூலிக்கப்படுகின்றன. இதற்கு மூன்று அறங்காவலர்கள் உள்ளனர். இவ்வூரிலேயே சீநிவாசப்பெருமாள்கோயில் ஒன்று உள்ளது. அதுவும் 300 ஆண்டுகளுக்கு முற்பட்டது. உபய நாச்சியார்கள் உள்ளனர். கோயிலின் பரப்பு 70 சென்ட், கோயிலின் நிலங்கள் பட்டாச்சாரியரின் அனுபோகத்தில் உள்ளன. ஆண்டு வருவாய் சுமார் 5000 ரூபா. தினமும் ஒருகால பூசை நிகழ்கிறது. புரட்டாசியில் பிரம்மோற்சவம் நடைபெறும். இதன் புறமதில் சுவர்கள், திரு அரங்கசாமி ஐயங்கார் என்பவரால் கட்டப் பெற்றுள்ளன. மூன்று அறங்காவலர்கள் உள்ளனர்.

(10) வில்லியம்பாக்கம்,
ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில் :

இது செங்கற்பட்டுக்கு அடுத்து 5 கல் தொலைவில் உள்ளது. கோயில் 250 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ளது. 1942-ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. கோயிலின் பரப்பு ஒரு ஏக்கர். மூலவர் நின்ற கோலத்தில் உள்ளார். கிருஷ்ணர் அலர்மேல் மங்கைத்தாயார், உபயநாச்சியார் விக்கிரகங்கள் உள்ளன. பரம்பரைப் பூசை உரிமையில்லாத பட்டாச்சாரியர் ஒருவரால், தினமும் காலையில் பூசை நிகழ்கிறது. கோயிலுக்கு 6 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அதன் ஆண்டு வருவாய் சுமார் ரூ. 1000. நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட, மரத்தால் செய்த கேடயவாகனம் ஒன்று உள்ளது. ஆடிப்பூரம், புரட்டாசிச் சிராவணம், தனுர்ப்பூசை, போகி உற்சவம், பார்வேட்டை, பங்குனி உத்திரம் ஆகிய விழாக்கள் நடைபெறுகின்றன. முன்பெல்லாம் இக்கோயில் கிராமத்தாராலேயே நிர்வகிக்கப் பெற்று வந்தது. இப்போது அறநிலையத்துறை நியமிக்கும் மூன்று அறங்காவலர்களால் நடைபெறுகின்றது. தொக்கீசுவரர் கோயில் என்பது ஒன்றும், இக்கிராமத்தில் உள்ளது. ஆனால் அது மிகவும் பாழ்பட்டு உள்ளது. பூசை எதுவும் நடைபெறவில்லை.

(11) வெண்பாக்கம்,
சீநிவாசப் பெருமாள் கோயில் :

சிங்கப்பெருமாள்கோயில் நிலையத்திலிருந்து 3 கல் தொலைவில் உள்ளது. போக்குவரவு வசதிகள் உண்டு. அலர்மேல் மங்கைத் தாயாருடன் சீநிவாசப்பெருமாள் எழுந்தருளியுள்ளார். வேங்கடம் கிருஷ்ணமாச்சாரியார், சோமயாஜி ரங்காச்சாரியார் என்னும் இருவரும், ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயிலைக் கட்டினர். கோயிலுக்கு 66.34 ஏக்கர் நிலங்கள் உள்ளன. தினமும் ஒருவேளைப் பூசை நடக்கிறது. வேறு திருவிழாக்கள் இல்லை. ஒரு பல்லக்கும், ஒரு கருட வாகனமும் உள்ளன. சில நகைகளும் உண்டு. ஓர் அறங்காவலர் பொறுப்பில் இக்கோயில் உள்ளது.

(12) செட்டிபுண்ணியம்,
தேவநாதப் பெருமாள் கோயில் :

சிங்கப்பெருமாள்கோயில் நிலையத்திலிருந்து, 3 கல் தொலைவில் உள்ளது. வண்டியிலோ நடந்தோ செல்லலாம். 20 சென்ட் நிலப்பரப்பில், சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு, அப்பளரங்கம் என்பவர் இக்கோயிலைக் கட்டினார். சென்ற நூற்றாண்டிலும், இந்நூற்றாண்டின் தொடக்கத்திலும், சில திருப்பணிகள் செய்யப்பெற்றன. சுமார் ரூபா 3,400 மதிப்புள்ள நகைகள் உள்ளன. பழுதுபட்ட பல்லக்கு ஒன்று உள்ளது. நிலவருவாய் சுமார் 2000 ரூபா. சீராமநவமி, திருப்பார்வேட்டை என்னும் விழாக்கள் நிகழ்கின்றன. மூன்று அறங்காவலர்கள் உள்ளனர்.

(13) சிங்கப்பெருமாள்கோயில்,
பாடலாத்திரி நரசிம்மசுவாமி கோயில் :

இவ்வூர், தாம்பரம்-செங்கற்பட்டு இருப்புப் பாதையில், ஒரு நிலையமாக உள்ளது. சென்னையிலிருந்தும், சென்னை நோக்கியும் செல்லும் எல்லாப் பேருந்துகளும், இவ்வூர் வழியாகவே

செல்லுகின்றன. நரசிம்மசுவாமி, மலையில் உள்ள ஒரு குகையில் செதுக்கப்பட்டு. அகோபில வல்லித்தாயாருடன் எழுந்தருளியிருக்கின்றார். மலையிலுள்ள இக்கோயிலுக்குப் படிக்கட்டுக்கள் உள்ளன. நான்கு ஏக்கர் பரப்புள்ள இக்கோயில், சுமார் 900 ஆண்டுகளுக்கு முற்பட்டது. கருவறையில் சில கல்வெட்டுக்கள் உள்ளன. சுவாமி, தாயார், ஆண்டாள் சந்நிதிகள், தனித்தனியாக உள்ளன. ஆஞ்சநேயர் சந்நிதியும் உள்ளது. நரசிம்ம அவதாரம் எடுத்தபோது, பெருமாள் இங்கு உக்கிர நரசிம்மராக எழுந்தருளினார். அபயத் திருக்கையுடன் விளங்கும் மூலவர், அமர்ந்த நிலையில், எட்டு அடி உயரமுள்ளவராக விளங்குகின்றார். இராமாநுசரின் மாணவரும், நெருங்கிய உறவினருமான முதலியாண்டான் இக்கோயிலுக்கு வருகை தந்தார். ஜாபாலி முனிவருக்கு இங்கு நரசிம்மசுவாமி தரிசனம் தந்ததாக ஐதிகம். வைகானச ஆகமப்படி, பரம்பரை உரிமையுள்ள பட்டாச்சாரியார் ஒருவர், மூன்று வேளைகள் இங்குப் பூசை செய்கிறார். இக்கோயில் உள்ள நகைகள், சுமார் ஒரு லட்சம் ரூபா மதிப்புள்ளவை. அவைகள் அன்பர்கள் அளித்த நன்கொடை. அவற்றுள் மணிகள் பதிக்கப்பெற்ற தங்கக்கிரீடம், சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அதன் மதிப்பு சுமார் ரூ. 5000. இக்கோயிலுக்குப் பல கிராமங்களில் நிலங்கள் உள்ளன. அவற்றின் மூலம் 25 வண்டி நெல் கிடைக்கின்றது. மேலும் . அரசாங்கப் பங்குத்தொகை மான்யம் ரூபா. 2329 கிடைக்கின்றது. உண்டியல் வருவாய் ஆண்டொன்றுக்குச் சுமார் 200 ரூபா. இக்கோயிலில் 14 வாகனங்களும், ஒரு மரத்தேரும் உள்ளன. அவைகள் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவை. ஒரு ஆண்டில் ஆறு சிறப்புத் திருவிழாக்கள் நிகழ்கின்றன. அவற்றுள் வைகாசிப் பிரம்மோற்சவம் மிகவும் முக்கியமானது. அறங்காவலர்கள் மூவர் உள்ளனர். அவர்களில் ஒருவர் பரம்பரை அறங்காவலர். ஏனைய இருவரில் ஒருவர் பார்ப்பனர் அல்லாதவராக, குறிப்பாக வைசிய கோமுட்டிச் செட்டியாராக இருத்தல் வேண்டும்.

(14) திருக்கச்சூர் மருந்தீசுவரர் கோயில் :

சிங்கப்பெருமாள் கோயில் நிலையத்திலிருந்து, மேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. செங்கற்பட்டு-திருவள்ளூர்ப் பாதையில் செல்லும் பேருந்துகள் இவ்வழியாகச் செல்லுகின்றன. அசுவினி தேவர்கள் இங்குள்ள மருந்தீசுவரரையும், இருள்நீக்கி அம்பிகையையும் வழிபட்டுத் தேவர்களுக்கு மருத்துவராகும் பேறு பெற்றனர். திருக்கச்சூர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலமாகும். நண்பகலில் இங்கு வந்த சுந்தரரின் பசியைப் போக்கும் பொருட்டுச் சிவபெருமான் இங்கு அந்தண வடிவில், வீடுகள்தோறும் சென்று பிச்சை பெற்று வந்து உணவளித்தார். அதனால் இங்கு மருந்தீசுவரர் என்று மட்டுமேயன்றி, இரந்தீசுவரர், விருந்தீசுவரர் என வேறு இரண்டு பெயர்களுடனும், சிவபெருமான் எழுந்தருளி விளங்குகின்றார். தேவாரத் திருமுறைகளில், இது கச்சூர் ஆலக்கோயில் என்று சிறப்பித்து வழங்கப்பெறும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவர் என்பது வரலாற்று நூல்களின் முடிபு. அதனால் இக்கோயில் அதற்கும் முன்னரே சிறப்புற்றிருந்திருத்தல் வேண்டும். இதனால் இக்கோயிலின் பழமையும் பெருமையும் விளங்கும். சுந்தரர் ''மலைமேல் மருந்தே'' என்று இங்கு மலைக்கோயிலிலுள்ள பெருமானைக் குறிப்பிட்டுள்ளார். காலை மாலை இருவேளைகளில் பூசை நிகழ்கிறது. ஆண்டு ஒன்றுக்கு அரசு வழங்கும் மானியம் ரூ. 2263.00. தவிர, வேறு வருவாயில்லை. இரண்டு பரம்பரை அறங்காவலர்களும், மற்றும் அறநிலையத்துறை நியமிக்கும் ஒரு நிர்வாக அதிகாரியும், இக்கோயிலை நடத்தி வருகின்றனர்.

திருக்கச்சூரில் மலைமேல் உள்ள கோயிலைத் தவிர, ஊரின் நடுவிலும் ஒரு கோயில் உள்ளது. தியாகராசசுவாமி என இறைவனும், அஞ்சனாட்சியம்மை என இறைவியும் வழங்கப்பெறுகின்றனர். இக்கோயில் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்றது. மூலவர் சுயம்புலிங்கம். திருமால் ஒரு சமயம் கச்சபம் என்னும் ஆமை வடிவில் இங்கு இறைவனை வழிபட்டதனால், இவ்வூருக்குக் கச்சப ஊர், கச்சூர் எனப் பெயரமைந்தது. உற்சவ விக்கிரகங்கள் பல உள்ளன. பழமையான கல்வெட்டுக்களும் காணப்பெறுகின்றன. கோயிலின் பரப்பு ஒரு ஏக்கர். கோயிலுக்குச் சொந்தமாக 16.55 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இவற்றின் மூலம் 5 வண்டி நெல்லும், ரூ. 1,000 ரொக்கமும் கிடைக்கின்றன. நான்கு கால பூசைகள் நிகழ்கின்றன. சித்திரையில் பிரம்மோற்சவமும் மார்கழியில் ஆருத்திரா தரிசனமும் நடைபெறுகின்றன.

முதுவாய் ஓரி கதற முதுகாட்டு
 எரிகொண்டு ஆடல் முயல்வானே!
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும்
 மலையான் மகள்தன் மணவாளா!
கதுவாய்த் தலையிற் பலிநீ கொளக்
 கண்டால் அடியார் கவலாரே!?
அதுவே ஆமாறு இதுவோ? கச்சூர்
 ஆலக் கோயில் அம்மானே!

மேலை விதியே! வினையின் பயனே!
 விரவார் புரம்மூன்று எரிசெய்தாய்!
காலை எழுந்து தொழுவார் தங்கள்
 கவலை களைவாய்! கறைக்கண்டா!
மாலைமதியே! மலைமேல் மருந்தே!
 மறவேன் அடியேன்! வயல்சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கச்சூர்
 ஆலக் கோயில் அம்மானே!

—சுந்தரர்

(15) அனுமந்தபுரம், வீரபத்திரசுவாமி கோயில் :

சிங்கப்பெருமாள் கோயில் நிலையத்திலிருந்து 6 கல் தொலைவில், திருப்போரூர் செல்லும் பாதையில் உள்ளது. கோயில் ஒரு ஏக்கர் பரப்புள்ளது. சுமார் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டது. 25.22 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இதன் வருவாயைக் கொண்டு, பரம்பரைக் குருக்கள் தினமும் மூன்று வேளைகள் பூசை

செய்து வருகின்றார். மாசிமாதம் மகாசிவராத் நாள், இங்குச் சிறப்பு விழாவாகக் கொண் டாடப்படுகிறது. கோயிலுக்கு நகைகள் இல்லை. வாகனங்கள் சில உள்ளன. இரண்டு அறங் காவலர்கள் இக்கோயிலை நடத்தி வருகின்றனர்.

(16) பெருந்தண்டலம், அகத்தீசுவரர் கோயில் :

செங்கற்பட்டு நிலையத்திலிருந்து திருப் போரூர் செல்லும் பாதையில், ஏழு கல் தொலை வில் உள்ளது. பேருந்து வசதிகள் உள்ளன, கோயிலின் பரப்பு 5 சென்ட். கோயிலுக்கு 14 ஏக்கர் நிலங்கள் உள்ளன. ஆண்டு வருவாய் ரூ. 2000. பரம்பரைக் குருக்கள் நித்தியபூசை செய்து வருகின்றார். இக்கோயில் ஓர் அறங் காவலர் பொறுப்பில் உள்ளது.

(17) சிறுகுன்றம்
குனறம்கொண்டீசுவரர் கோயில் :

செங்கற்பட்டு நிலையத்திலிருந்து 9 கல் தொலைவில் உள்ளது. 15 ஏக்கர் பரப்பில், 500 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயில் கட்டப் பட்டது. நித்தியபூசை தவிர விழாக்கள் எது வும் இல்லை. சில தாவர சொத்துக்களின்மூலம் ஆண்டு வருவாய் ரூபா. 5000 மட்டும் கிடைக் கின்றது. இதற்கு அருகில் ஒரு பெருமாள் கோயிலும் உள்ளது. அறநிலையத்துறையால் நியமிக்கும் ஓர் அறங்காவலர் இக்கோயிலை மேற்பார்வை செய்து வருகின்றார்.

(18) கொட்டம்பேடு, சலகண்டீசுவரர் கோயில் :

செங்கல்பட்டிலிருந்து 11 கல் தொலைவில் உள்ளது. செங்கற்பட்டு, கூடுவாஞ்சேரி, திருப் போரூர் ஆகிய இடங்களிலிருந்தும் இவ்வூருக்குச் செல்லலாம். 68 சென்ட் பரப்பில் உள்ள இக் கோயில், 250 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப் பெற்றது. ஊர் மக்கள் மதிற்சுவர்களும், நவக் கிரக சந்நிதியும் கட்டியுள்ளனர். குருக்கள் ஒருவர், ஒரு வேளை பூசை செய்கின்றார். 13.08 ஏக்கர் நிலம் மட்டும் உண்டு. மூன்று அறங் காவலர்கள் உள்ளனர்.

(19) தையூர், செங்கண்மாலீசுவரர் கோயில் :

செங்கல்பட்டுக்கு 21 கல் தொலைவிலும், வண்டலூருக்குப் பதினாறு கல் தொலைவிலும், தையூர் உள்ளது. இச்சிவன் கோயிலில் உற்சவ விக்கிரகங்கள் பல உள்ளன. இதற்கு 53 ஏக்கர் நிலங்கள் உண்டு. குருக்கள் ஒருவர் ஒருவேளை பூசைசெய்து வருகின்றார். 1912-ஆம் ஆண்டில் நமசிவாயச் செட்டியார் என்பவர், திருப் பணிகள் செய்து, சில நகைகளும் நன்கொடை யளித்துள்ளார். மூன்று அறங்காவலர்கள் உள்ளனர்.

இவ்வூரிலேயே முருகேசுவரசுவாமியும், தேவி மரகதாம்பாளும் எழுந்தருளியுள்ள, மற் றொரு சிவன்கோயிலும் உள்ளது. அது சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. பரப்பு 1.72 ஏக்கர். 41.25 ஏக்கர் நன்செய் புன்செய் நிலங்கள் உள்ளன. ஓர் அறங்காவல ரின் பொறுப்பில் இக்கோயில் உள்ளது. காலை மாலை இருவேளைகள் பூசை நடைபெறுகின்றது.

(20) திருவிடந்தை,
நித்தியகல்யாணப் பெருமாள் கோயில் :

வண்டலூர் நிலையத்திலிருந்து 17 கல் தொலைவிலும், செங்கற்பட்டிலிருந்து 25 கல் தொலைவிலும், மாமல்லபுரத்திற்கு அருகில் இத் தலம் உள்ளது. இதனைத் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். மூலவருக்கு ஆதிவராகசுவாமி என்றும், உற்சவமூர்த்திக்கு நித்தியகல்யாணப்பெருமாள் என்றும் பெயர். ஆதிவராக சுவாமி, தனது இடக்கரத்தில் அகில வல்லித்தாயாரை ஏந்திக்கொண்டு, திருக்கல் யாண கோலத்தின் நிலையில் எழுந்தருளியுள் ளார். அதனால் திரு இட எந்தை என்ற பெயர் ஏற்பட்டது. அது மருவித் திருவிடந்தை என வழங்குகின்றது. காளவ மகரிஷி என்பவர், தம்முடைய 360 புதல்வியரையும் மணம் செய்து கொள்ளுமாறு, பெருமாளை நோக்கித் தவஞ்செய்து வேண்டிக் கொண்டார். அதன் படி, தினமும் அவர்தம் புதல்வி ஒருத்தியைப் பெருமாள் இங்கு மணந்து கொண்டதனால், நித்திய கல்யாணப்பெருமாள் எனப் பெயர் பெற்றார். காளவ மகரிஷியின் முதற் புதல்வி ஆகிய கோமளவல்லிக்குத் தனிச் சந்நிதி உள் ளது. ஏனைய 359 புதல்வியரையும், பெருமாள் ஒருவடிவமாகச் சேர்த்து அகிலவல்லித் தாயார் என அமைத்தார். ஆதிவராக சுவாமி வலக் காலில் நின்று கொண்டு, தம் இடது தொடையை உயர்த்தி, இடக்கரத்தில் அகில வல்லித் தாயாரை எழுந்தருளச் செய்துள்ளார். ஆதிசேடனும், அதன் மனைவியும் கீழிருந்து, பெருமாளின் இடக்காலைத் தாங்கி நிற்கின்ற னர். சுதையினால் அமைந்துள்ள இத்திருவுரு வம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. கோயில் ஒரு சோழப் பேரரசனால், இரண்டரை ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப் பெற்றுள்ளது. சந்நிதியில் பழமையான கல்வெட்டுக்கள் பல காணப்படு கின்றன. இக்கோயிலில் பழமையான நகைகள் பல உள்ளன. அதன் மதிப்பு சுமார் ரூ. 24,520. அவற்றுள் ரூ.20,000 மதிப்புள்ள வைரமுடி குறிப்பிடத்தக்கதாகும். சுமார் 12 கிராமங்களில் இக்கோயிலுக்கு நன்செய் புன் செய் நிலங்கள் உள்ளன. அவற்றின் ஆண்டு வருவாய் சுமார் ரூ. 10,000. பரம்பரை உரிமைப் பட்டாச்சாரியர் ஒருவர், நாள்தோறும் மூன்றுவேளைகள் பூசை செய்து வருகிறார். இங்கு 13 வாகனங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றான தந்தப் பல்லக்கு, மிக்க அழகும் விலைமதிப்பும் உடையதாகும். பிரம்மோற்சவம் சித்திரை மாதத்தில் நடைபெறுகின்றது. வைகுண்ட ஏகாதசி இங்கு முக்கியமான ஒரு சிறப்பு விழா வாகும். ஆனி ஆடி தை மாசி மாதங்களில் கருடசேவை விழா நடைபெறுகின்றது. அற நிலையத்துறை நியமிக்கும் அறங்காவலர் மூவர் உள்ளனர்.

திவளும் வெண்மதிபோல் திருமுகத் தரிவை,
செழுங்கடல் அமுதினிற் பிறந்த
அவளும்நின் ஆகத் திருப்பதும் அறிந்தும்,
ஆகிலும் ஆசை விடாளால்;
குவளையங் கண்ணி கொல்லியம் பாவை
சொல்லும் நின் தாள்நயந் திருந்த
இவளை, உன் மனத்தால் என்நினைந்து இருந்
தாய்!
இடவெந்தை எந்தை, பிரானே! (1)

அலங்கெழு தடக்கை ஆயன்வாய் ஆம்பற்கு
அழியுமால் என்உள்ளம் என்னும்;
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும்;
போதுமோ நீர்மலைக்கு என்னும்;

குலங்கெழு கொல்லிக் கோமள வல்லி
கொடியிடை நெடுமழைக் கண்ணி
இலங்கெழில் தோளிக்கு, என்நினைந்து இருந்தாய்?
இடவெந்தை எந்த பிரானே! (2)

அன்னமும் மீனும் ஆமையும் அரியும்
ஆயஎம் மாயனே! அருளாய்!
என்னும்இன் தொண்டர்க்கு இன்னருள்புரியும்
இடவெந்தை எந்தை பிரானை.
மன்னுமா மாட மங்கையர் தலைவன்
மானவேற் கலியன்வாய் ஒலிகள்,
பன்னிய பனுவல் பாடுவார் நாளும்
பழவினை பற்றறுப் பாரே! (3)

—திருமங்கையாழ்வார்.

(21) திருப்போரூர், கந்தசுவாமி கோயில் :

சென்னை-மாமல்லபுரம் சாலையில் அமைந்துள்ள புகழ்மிக்க ஒரு யாத்திரைத் தலம், திருப்போரூர். இது செங்கற்பட்டிலிருந்து 16 கல் தொலைவிலும், சென்னையிலிருந்து 28 கல் தொலைவிலும் உள்ளது. இப்போதுள்ளகோயில், சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்னர், சிதம்பர சுவாமிகள் என்னும் சிறந்த அருளாளரால் கட்டப்பெற்றதாகும். ஆனால், இக்கோயில் பல்லவர்களின் காலத்திலேயே, சுமார் 1200 ஆண்டுகளுக்கும் முற்பட்டே, சிறந்து விளங்கிய தொன்றாகும். முருகப்பெருமான் இங்குச் சூரபதுமனின் தம்பியாகிய தாரகாசுரன் என்பவனோடு போர் செய்து வெற்றி கொண்டதனால், இதற்குப் போரூர் என்னும் பெயரமைந்தது என்பது தலவரலாறு. கோயில் 12 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. மூலத் தானத்திலுள்ள முருகப் பெருமான், புனுகு சட்டம் மட்டுமே சாத்தி வழிபடப்பெறுகின்றார். மூலவருக்கு முன்னர் உள்ள முருகர் வள்ளி தெய்வயானை உற்சவமூர்த்திகளுக்கே, அபிடேக அலங்காரங்கள் சிறப்பாகச் செய்யப்படுகின்றன. வள்ளி தெய்வயானை அம்மையாருக்குத் தனித் தனி சந்நிதிகள் இருக்கின்றன. பிரணவப் பொருளுக்குப் பொருள்கூறத் தெரியாமல் மயங்கி விழித்த பிரமதேவனைச் சிறையிலிட்டு, அப்பிரமனின் படைப்புத் தொழிலைத் தாமே ஏற்றுக் கொண்ட நிலையில், பிரமசாத்தன் என்னும் திருவுருவத்தில் முருகன் இங்கு எழுந்தருளியிருக்கின்றார். இக்கோயிலில் முருகன் இரண்டு நிலைகளில், உற்சவ மூர்த்தியாக மிகவும் சிறப்பாக எழுந்தருளியுள்ளார். தலத்தின் பெயர் திருப்போரூர் என்பதற்கு ஏற்ப, இங்கு முருகன் போர்க்கோலம் பூண்டவராய், தம் கையில் வில் பிடித்துக் கொண்டு, வில்லேந்திய வேலவராக விளங்குகின்றார். பிரமதேவனின் படைப்புத் தொழிலை ஏற்றுக் கொண்டு, பிரமசாத்தன் என்னும் நிலையில் விளங்கும் முருகப் பெருமான், தம் தந்தையாராகிய சிவபெருமானுக்கு இங்குப் பிரணவ உபதேசம் செய்யும் நிலையில், உற்சவமூர்த்தியாக விளங்குகின்றார். இத்தலத்திற்குச் சமரபுரி என்றும், பிரணவபுரி என்றும்கூடப் பெயர்கள் வழங்கும். வில்லேந்திய வேலவர், பிரணவ உபதேச மூர்த்தி ஆகிய இரு செப்பு விக்கிரகங்களும், மிக்க அழகும் சிறப்பும் வாய்ந்தவை. இங்குள்ள முகப்பு மண்டபம் 24 பெரிய தூண்களால் அமைந்தது. போரூர் என்பதன் பொருளை மெய்ப்பிக்கும் முறையில், வாளும் கேடயமும் ஏந்திய குதிரை வீரர்களின் சிற்பங்கள், ஒவ்வொரு தூணிலும் அழகுற அமைக்கப்பட்டிருக்கின்றன.

இக்கோயிலுக்கு நிலமும் வீடுகளும் பல உள்ளன. அவற்றின் ஆண்டு வருவாய் ரூ. 11,000. உண்டியல் வருவாய் சுமார் ரூ. 8,000. தீபாராதனை அருச்சனை காவடி எடுத்தல், முடி இறக்குதல், காதணி இடுதல் முதலியவற்றின் மூலம் வருவாய் சுமார் ரூ. 15,000. இங்கு ரூ. 68,500 மதிப்புள்ள நகைகள் உள்ளன. அவைகள் அவ்வப்பொழுது அன்பர்களால் வழங்கப் பெற்றவை. பெரும்பாலான நகைகள் பழமை வாய்ந்தவை. தங்க மயில் வாகனம், வெள்ளிக் குதிரை, வெள்ளி அன்னம், வெள்ளிமயில் வாகனங்கள் குறிப்பிடத்தக்கவை. தினமும் நான்கு காலபூசை நடைபெறுகிறது. குருக்களுக்கு ஊதியம் ஏதும் தருவதில்லை. ஆனால் அன்பர்கள் வழங்கும் நன்கொடை அனுமதிக்கப் பெற்றுள்ளது. ஐப்பசி மாதத்தில் கந்தர் சஷ்டி விழா சிறப்பாக நிகழும். பவித்ரோற்சவம், நவராத்திரி உற்சவம், ஆருத்திரா உற்சவம், பிரம்மோற்சவம் முதலிய உற்சவங்களும் இங்கு நடைபெறுகின்றன. இஃது ஒரு பிரார்த்தனைத் தலம். கிருத்திகை, சஷ்டி முதலிய நாள்களில், பக்தர்கள் திரளாகக் கூடுவர். சென்னையிலிருந்து ஏராளமான பக்தர்கள் இங்கு அவ்வப் பொழுது சென்று வழிபட்டு மகிழ்வர். சுற்றுப் புறத்துக் கிராமங்களிலுள்ள மக்களுக்கெல்லாம், திருப்போரூர் முருகன் குலதெய்வமாகவும், கண்கண்ட தெய்வமாகவும் விளங்கி அருள் புரிந்து வருகின்றான். சிதம்பரசுவாமிகள் வாழ்ந்திருந்து வழிபட்டு அருளிச் செய்த திருப்போரூர்ச் சந்நிதிமுறை என்னும் முருகன் துதி நூல், தமிழ் உலகிலும் சமய உலகிலும் மிகவும் புகழ்பெற்ற அருள்நூல் ஆகும். சிதம்பர சுவாமிகள் நிறுவிய திருமடமும், அவர்தம் சமாதிக் கோயிலும், இங்குக் கண்டு தரிசிக்கத் தக்கனவாகும். சிதம்பர சுவாமிகளின் திருமரபில் வழிவழியாகப் பல சுவாமிகள், இங்கு முருகனுக்குப் பணிவிடைகள் செய்து அருள் பெற்றுச் சமாதி கொண்டுள்ளனர். மௌன சுவாமிகள் மடம் என்ற வேறு ஒரு மடமும், இங்கு அண்மையில் ஏற்பட்டுள்ளது. இங்கு மலைமேல் கைலாசநாதரும், பாலாம்பிகையம்மையும் எழுந்தருளி வீற்றிருக்கின்றனர். மற்றும் இங்கு வேம்படி விநாயகர் கோயிலும், மிகவும் புகழ் வாய்ந்ததாகும். தமது கனவில் மீனாட்சியம்மையும், முருகப்பெருமானும் பணித்தருளியபடி, மதுரையிலிருந்தும் திருமுதுகுன்றத்தினின்றும் திருப்போரூருக்குப் போந்த சிதம்பர சுவாமிகள், முதன்முதலாக வந்து தங்கிய இடம் வேம்படி விநாயகர் கோயிலே என்பர். கோயிலுக்குத் தென்புறத்தில் அழகுற அமைந்துள்ள திருக்குளம், சரவணப் பொய்கை என்னும் பெயருடையதாகும்.

பேய்போம்! துயரம்போம்! பித்தம்போம்! போகாத
நோய்போம்! மிடிபோம்! நுவலுங்கால்-தாய்போல
நன்னிதியைப் போல நயந்ததிருப் போரூரன்
சந்நிதியைக் கண்டனவே தான்!

—சிதம்பர சுவாமிகள்,
திருப்போரூர்ச் சந்நிதி முறை.

—தொடரும்

திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில், ஆணையர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு யு. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் திரு இரா., நாகசாமி, எம்.ஏ., துணை ஆணையர் திரு அர்ச்சுனன், பி.ஏ., ஆகியோர் கலந்துகொள்ள நிகழ்ந்த, ''முருகன் பெருமை'' நூல் வெளியீட்டு விழாவில், அதனை எழுதித் தொகுத்துதவிய "திருக்கோயில்" ஆசிரியர் திரு ந. ரா.முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். அவர்கள் சிறப்பிக்கப்பெறுதல். *(29—10—77).*



திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின், பகுதி நன்கொடைத் திட்ட மேல்தளக் குடில்கள் பதினான்கினையும், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு யு. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில், ஆணையர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ் அவர்கள் திறந்து வைத்தல்.

பதிவு எண். எம். 7039

புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, அறநிலையத்துறையின் அலுவலர்களும், மற்றும் திருக்கோயில்களின் ஊழியர்களுமாகச் சேர்ந்து அளித்த ஒருநாள் ஊதிய நன்கொடைத் தொகை 39,318-85 ரூபாய்க்கான காசோலையினையும், மற்றும் 89,248-00 ரூபாய் மதிப்புள்ள துணிமணிகளையும், நமது மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களிடம், அறநிலையத்துறையின் செயலர் திரு. ஜி. எஸ். ஷேசாத்திரி, I.A.S., அவர்களும், அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்களும் வழங்குதல். *(15-12-1977).



சென்னை மயிலை அருள்மிகு மாதவப் பெருமாள் கோயில் விமான ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மகா சம்ப்ரோட்சண விழாவில், வணிக வரி மற்றும் அறநிலையத் துறையின் செயலாளர் திரு ஜி. எஸ். சேஷாத்திரி, ஐ.ஏ.எஸ்., ஆணையர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ், துணைஆணையர் திரு அர்ச்சுனன், பி.ஏ., உதவி ஆணையர் திரு சி. சுப்பிரமணிய பிள்ளை, பி.ஏ.,பி.எல்., தவத் திரு சுவாமி இராமதாசர் முதலிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.